REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மார்ச் 12 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 61 | Saturday 12, March, 2022 | 16 பக்கங்கள் | 30/-

உங்கள் அபிமான மாத இதழ்
வண்ண வானவில் Vanna Vaanavil கேட்டு வாங்குங்கள்...
மார்ச் மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு ஜனாதிபதி நேற்று கண்காணிப்பு விஜயம்

# பணியக சட்டத்தை மீறிய 2,832 முகவர்களுக்கு எதிராக நடவடிக்கை

## கறுப்புப் பட்டியலுக்கு உட்படுத்துமாறும் பணிப்பு

### பயிற்சிபெற்ற பணியாளர்களுக்கான வாய்ப்புகளை பெறுக்கொள்வதில் அதிக கவனம் செலுத்துமாறும் தெரிவிப்பு



வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக சட்டத்தை மீறியமைக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள 2,832 முகவர்கள் மற்றும் தனி நபர்களை உடனடியாக கறுப்புப் பட்டியலுக்குட்படுத்தி அவர்களுக்கெதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பணிப்புரை விடுத்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சந்தையில் பயிற்சி பெற்ற பணியாளர்களுக்கான வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில்

06

இன்னும் 03 நாட்கள்! தினகரன்



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்றைய தினம் பிற்பகல் 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. யாழ் மறைமாவட்ட நெடுந்தீவு பங்குத்தந்தை, இந்திய இராமநாதபுரம் மறைமாவட்டத்தின் வேர்க்காடு பங்குத் தந்தை ஆகியோரின் தலைமையில் கொடி ஆசீர்வதிக்கப்பட்டு கொடியேற்றம் நடைபெறுவதை படத்தில் காணலாம். (கச்சதீவிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்)



## இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஜனாதிபதியிடம் உறுதி

03

## ஊடகங்களுக்கு தணிக்கை செய்யாது மேற்பார்வை செய்வதே கொள்கை

### ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் 'பட்டய ஊடக நிறுவனம்' செப்டம்பரில் ஆரம்பம்

ஷம்ஸ் பாஹிம்



ஊடகத்தணிக்கை எமது அரசின் கொள்கையல்ல எனவும் அவற்றை மேற்பார்வை செய்வதற்கான வழிமுறையையே முன்னெடுக்க உள்ளதாகவும் தகவல் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வரலாற்றில் முதன்முறையாக பட்டய ஊடக கற்கைக்கான நிறுவனமொன்றை ஆரம்பிப்பதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. செப்டம்பர் மாதமாகும் போதும் இந்த பட்டய ஊடக நிறுவனம் உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கயந்த கருணாதிலக்க எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பத்திரிகைப் பேரவை சட்டத்தை திருத்த 2021 இல் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. பல்வேறு அமைச்சர்கள் இதனை மாற்ற முயற்சி செய்தனர். இதற்கான அடிப்படை செயற்பாடுகளை கயந்த கருணாதிலக்க

06

## பேரீச்சம்பழம் இறக்குமதிக்கான தடையை நீக்க அரசு தீர்மானம்

### முஸ்லிம் எம்.பிக்களின் கோரிக்கையை ஏற்று பிரதமர் பணிப்பு

ஷம்ஸ்பாஹிம், அஜ்வாத் பாஸி




பேரீச்சம்பழம் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அடுத்த மாதம் முஸ்லிம்களின் ரமழான் நோன்பு ஆரம்பிக்கப்படுவதால் பேரீச்சம்பழம் இறக்குமதிக்கான தடையால் அவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்பு குறித்து முஸ்லிம் எம்.பிக்கள் நேற்று பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

பேரீச்சம்பழம் உட்பட 367 பொருட்களை இறக்குமதி செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அண்மையில்

06

## சசி வீரவங்சவுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு



முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்சவின் மனைவி சசி வீரவங்சவுக்கு எதிரான வழக்கு தொடர்பான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளதாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு பொய்யான தகவல்களை சமர்ப்பித்து இராஜதந்திர கடவுச்சீட்டை போலியாக தயாரித்தமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளின் பரிசீலனை அண்மையில் நிறைவடைந்திருந்தது.

அதன்படி, இவ் வழக்கின் தீர்ப்பு நேற்று (11) அறிவிக்கப்படுமென கொழும்பு பிரதான நீதவான் புத்திக ரகல பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி அறிவித்திருந்தார். எனினும் இவ்வழக்குக்கான தீர்ப்பு மே மாதம் 06 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஐ.ஓ.சி போன்று ஏனைய நிறுவனமும் எரிபொருள் விலையை அதிகரிக்கலாம்

### "ஒரு பிரச்சினை முடியும் போது, மற்றுமொரு பிரச்சினை உருவாகிறது



லங்கா IOC நிறுவனம் எரிபொருளுக்கான விலையை அதிகரித்ததை போன்று, ஏனைய நிறுவனங்களும் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்படுமென நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஊடகவியலாளர்கள் நேற்று (11) எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஒரு பிரச்சினை முடியும் போது, மற்றுமொரு பிரச்சினை உருவாகின்றது. தற்போது உக்ரைன் ரஷ்யா யுத்தம் ஆரம்பித்துள்ளது. நிவாரணங்களை வழங்க நாம் முழுமையாக முயற்சித்து வருகின்றோம். மக்கள் எம்மீது கொண்ட நம்பிக்கையை அவ்வாறே வைத்திருக்குமாறு கேட்கின்றேன். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எமது அமைச்சர்கள் அனைத்து விதமான முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றனர்" என பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டுக்கு வெளியில் நடக்கும் விடயங்கள் காரணமாகவே இவ்வாறான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும்,

06

ஸ்ரீல.சு.கட்சி தலைமையில்

## 11 கட்சிகளை இணைத்து பாரிய கூட்டணி அமைப்போம்

### கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர



ஆளுந்தரப்பின் 11 பங்காளி கட்சிகளுடனான பயணத்தை இடைவிடாமல் தொடர்வோம். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையில் 11 கட்சிகளுடன் இணைந்து பாரிய கூட்டணியை அமைத்து முன்னோக்கிச் செல்வோமென ஸ்ரீலங்கா சு.க. பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். அத்துடன் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக பதவிகளை துறந்து வீதிக்கு இறங்கி போராடவும் தயாராக இருப்பதாகவும்

06

பொருளாதார நெருக்கடி, நாளாந்தம் விலை அதிகரிப்பு

## நிதி அமைச்சர் உண்மை நிலையை நாட்டுக்கு தெளிவுபடுத்த வேண்டும்

### சபையில் ஜே.வி.பி கோரிக்கை



ஷம்ஸ் பாஹிம்

நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டு பொருட்களின் விலைகள் நாளாந்தம் உயரும் இச்சூழலில் நிதி அமைச்சர் பாராளுமன்றத்திற்கு வந்து உண்மை நிலவரம் குறித்து தெளிவுபடுத்த வேண்டுமென ஜே.வி.பி தலைவர் அநுர குமார திசாநாயக்க எம்.பி நேற்று சபையில் கோரினார். நிதி அமைச்சரிடம் கேட்கும் கேள்விகளுக்கு அவர் சார்பில் வேறு ஒருவர் பதில் வழங்கினாலும்


06



## நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் விவாதம் நடத்த தயார்

03

## விமான பயண கட்டணம் 27 வீதமாக உயர்வு



இலங்கையில் விமானங்களை இயக்கும் அனைத்து விமான நிறுவனங்களும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பயணச் சீட்டு கட்டணத்தை 27 வீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

06

## கோதுமை மா விலை ரூ. 30 முதல் ரூ.40 வரை அதிகரிப்பு



நாட்டில் கோதுமை மாவின் விலை 30 ரூபா முதல் 40 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி செரண்டிப் நிறுவனம் நேற்று முதல் ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 35 ரூபாவால் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

06

## திருகோணமலை, சம்பூரில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம்

### இலங்கை – இந்தியா கைச்சாத்து



திருகோணமலை, சம்பூரில் சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான கூட்டு முயற்சி பங்குதாரர்கள் உடன்படிக்கையில் இலங்கை இந்தியாவுடன் கைச்சாத்திடவுள்ளது.

இலங்கை மின்சார சபைக்கும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்திற்குமிடையில் நேற்று மாலை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

திருகோணமலை, சம்பூரிலுள்ள சூரிய சக்தி பூங்கா தொடர்பான ஆரம்ப விவாதங்கள், இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய எரிசக்தி நிறுவனமான என்.ரி.பி.சி.லிமிடெட் நிறுவனத்துக்குமிடையில் பெப்ரவரி மாதம் ஆரம்பமானது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் 50 மெகாவாட் சோலார் பூங்காவை திறப்பதற்கான சாத்தியம் குறித்து, தனியார் பொது கூட்டுஒப்பந்தம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. கடந்த அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்காக

06

## லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலைஅதிகரிப்பு

அனைத்து வகையான டீசல் மற்றும் பெற்றோல் விலையை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய ஒரு லீற்றர் டீசல் 75 ரூபாவாலும், ஒரு லீற்றர் பெற்றோல் 50 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதனபடிப்படையில் பெற்றோலின் புதிய விலை 254 ரூபாவாகவும் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 214 ரூபாவாகவும் அதிகரிப்பட்டுள்ளது.

இந்தியன் ஒயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மாதம் இரண்டு தடவைகள் லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்திருந்தது. கணிசமான ரூபாய் பெறுமானத் தேய்வினால் லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் எரிபொருள் விலையை மாற்ற வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

06

தற்போதைய சூழ்நிலையில்

## எதிரணிகள் நிபந்தனையற்ற ஆதரவை அரசுக்கு வழங்கவேண்டும்

### அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க



தேசிய அரசு என்பதற்கு அப்பால், தற்போதைய சூழ்நிலையில் எதிரணிகள் நிபந்தனையற்ற ஆதரவை அரசுக்கு வழங்க வேண்டுமென கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. கொள்கலன்களுக்கான போக்குவரத்துக் கட்டணமும் அதிகரித்துள்ளது. இவற்றின் தாக்கம் இலங்கையிலும் எதிரொலிக்கின்றது. பெரும் நஷ்டத்துக்கு மத்தியிலேயே எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. நஷ்டத்தை அரசு தாங்கிவருகின்றது. இவ்வாறான நெருக்கடி நிலையிலிருந்து கட்டம் கட்டமாகவே மீள வேண்டும்.

இன்னும் ஒரு வாரத்துக்குள் மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி தீரும். ஆடைக் கைத்தொழில்மூலம் வருமானம் வரத் தொடங்கியுள்ளது. சுற்றுலாத்துறையும் எழுச்சி கண்டுவருகின்றது. வெளிநாடுகளில் தொழில் புரிபவர்கள் பணம் அனுப்புகின்றனர்.

06

## முச்சக்கர வண்டிகள் கட்டணம் 80 ரூபாய்



எரிபொருள் விலையேற்றத்துக்கமைய முச்சக்கர வண்டி கட்டணத்தையும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முதலாவது கிலோ மீற்றர் தூரத்துக்கு 80 ரூபா

06

# சர்வதேச செய்திகள்

## ரஷ்யா–உக்ரைன் இடையிலான உயர்மட்டப் பேச்சுத் தோல்வி



உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நடந்த முதல் உயர்நிலைச் சந்திப்பு தோல்வியில் முடிந்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து இரண்டு வாரமாகி விட்ட நிலையில், இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் துருக்கியின் அந்தாலியா நகரில் முதன்முறை சந்தித்துப் பேசினர்.

சர்வதேச இராஜதந்திர கருத்தரங் கையொட்டி, துருக்கி அந்த சமரசப் பேச்சுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

ரஷ்யாவா, மேற்கத்திய நாடுகளா யாருடன் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உக்ரைனுக்கு ஏற்பட்டதே மோதலுக்குக் காரணம் என்று மொஸ்கோ கூறியது.

உக்ரைன் சரணடைய வேண்டும் என்று ரஷ்யா விரும்புகிறது. ஆனால் அவ்வாறு நடக்காது என்று உக்ரைனிய வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலெபா கூறினார்.

ரஷ்யாவின் ஆரம்பத் திட்டங்களை முறியடித்ததைச் சுட்டிக்காட்டிய அவர், போரை முடிவுக்குக் கொண்டு வர சமச்சீரான அரசதந்திரத் தீர்வுக்குத் தயாராயிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## கிருமி மாதிரிகளை அழிக்க உக்ரைனுக்கு அறிவுறுத்து



உக்ரைனியப் பொதுச் சுகாதார ஆய்வகங்களில் உள்ள அதிக ஆபத்துமிக்க கிருமி மாதிரிகளை அழித்துவிடுமாறு உலக சுகாதார அமைப்பு ஆலோசனை கூறியுள்ளது.

ஒரு விபத்தைப் போல் ஆய்வகத்திலிருந்து கிருமி மாதிரிகள் வெளியே கசிந்தால் பொதுமக்களிடையே நோய் பரவும் ஆபத்து இருப்பதை அந்த அமைப்பு சுட்டிக்காட்டியது.

உக்ரைனிய ஆய்வகங்கள் ரஷ்யப் படையினரால் தாக்குதலுக்குள்ளாகும் நிலையில் அங்கிருந்து நோய்த் தொற்றை ஏற்படுத்தும் கிருமிகள் வெளியேறும் ஆபத்து இருப்பதாக உயிர்மருத்துவப் பாதுகாப்பு நிபுணர்கள் குறிப்பிட்டனர். உலக சுகாதார அமைப்பு, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் ஆதரவோடு, மனிதர்களையும் விலங்குகளையும் பாதிக்கக்கூடிய கிருமிகள் பற்றி ஆராயும் ஆய்வகங்கள் உக்ரைனில் செயல்பட்டு வருகின்றன.

## வடகொரியா பாலிஸ்டிக் ஏவுணைகள் சோதனை




வடகொரியா அண்மையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனையை நடத்தியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது "மிகவும் தீவிரமானது" என அமெரிக்கா கூறியுள்ளது.

பெப்ரவரி 26 மற்றும் மார்ச் 4 அன்று மேற்கொள்ளப்பட்ட ஏவுகணை சோதனைகள், உளவு வேலைகளுக்கான செயற்கைக்கோளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது என, வடகொரிய ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த சோதனைகள், கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை முழு வீச்சில் செலுத்துவதற்கு முன்பான சோதனை முயற்சியிலானது என, அமெரிக்க பாதுகாப்புத்துறை தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது. குறைந்தபட்சமாக 5,500 கி.மீ. (3,417 மைல்கள்) தொலைவுக்கு செல்லும் இந்த ஏவுகணைகள், அமெரிக்காவை அடையலாம். அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் வகையில் இந்த ஏவுகணைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# உக்ரைன் தலைநகரை நோக்கி ரஷ்ய படையினர் முன்னேற்றம்: விரைவில் தாக்குவதற்கு வாய்ப்பு

## புதிய நகரங்கள் மீதும் தாக்குதல்



உக்ரைன் தலைநகர் கியேவின் வடமேற்கில் ரஷ்ய படைகள் ஒருங்கிணைக்கப்பட்டு வருவதாக செய்மதி படங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது. தலைநகர் மீது ரஷ்யா அடுத்த சில நாட்களில் தாக்குதல் நடத்தக் கூடும் என்று பிரிட்டன் நேற்று குறிப்பிட்டது.

வடக்கு உக்ரைனில் ரஷ்யாவின் பிரதான தாக்குதல் படையினர், படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப நாட்களிலேயே கியேவின் வடக்கு நெடுஞ்சாலையில் ஸ்தம்பித்தது. இதனால், தலைநகர் மீதான ரஷ்யாவின் ஆரம்பத் திட்டம் தோல்வி அடைந்திருப்பதாக மேற்கத்திய நாடுகள் குறிப்பிட்டன.

ஆனால் அமெரிக்காவின் தனியார் செய்மதி நிறுவனமான மக்சார் வெளியிட்ட படங்களில், கியேவின் வடமேற்கே ஹோஸ்டோமலில் உள்ள அன்டோனோவ் விமான நிலையத்திற்கு அருகில் உள்ள நகரங்களுக்குள்ளும் அதன் வழியாகவும் கவசப் படைகள் முன்னேறுவது தெரிகிறது. போர் ஆரம்பித்த விரைவில் இங்கு ரஷ்ய துருப்புகள் பரசூட்டில் இறங்கிய நிலையில் கடும் மோதல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய பிரிவுகள் பீரங்கி தாக்குதல் நடத்தும் நிலையை நோக்கி வடக்கே லுபியங்காவின் சிறிய குடியேற்றத்திற்கு அருகில் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டிருப்பதாக மக்சார் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் புதிய தாக்குதல் செயற்பாடுகளுக்காக ரஷ்யா தனது படைகளை மீளமைத்தும் புதிய நிலைகளில் நிறுத்துவதற்கும் வாய்ப்பு இருப்பதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு அதன் புதிய உளவுத் தகவல்களில் தெரிவித்துள்ளது. 'இதில் தலைநகர் மீதான படை நடவடிக்கையும் உட்படலாம்' என்றும் அது சுட்டிக்காட்டியது.

ஏற்பாட்டியல் பிரச்சினைகள் மற்றும் உக்ரைனின் வலுவான எதிர்ப்புக் காரணமாக ரஷ்யப் படைகள் இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றத்தையே கண்டிருப்பதாகவும் பிரிட்டனின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

பெரும் இழப்புகளுக்கு பின் ரஷ்யப் படைகள் மீள் ஒருங்கிணைக்கப்பட்டு வருவதை உக்ரைன் இராணுவமும் உறுதி செய்தது.

இந்நிலையில், கடந்த 24 மணிநேரத்தில் யுக்ரைன் தலைநகர் கியேவை நோக்கி ரஷ்ய படைகள் 5 கிலோமீற்றர் தூரத்திற்கு முன்னேறி சென்றுள்ளனர் என மூத்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முற்றுகையில் உள்ள தென்கிழக்கு துறைமுக நகரான மரியுபோலில் இருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு அனுமதி அளிக்கும் வகையில் ரஷ்யா தொடர்ந்து ஏழாவது நாளாகவும் போர் நிறுத்தத் திட்டத்தை அறிவித்தது. அந்த நகரில் இருந்து பெரும் எண்ணிக்கையானோரை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடுவதாக உக்ரைன் குறிப்பிட்டுள்ளது. 'அது இன்று வெற்றி அளிக்கும் என்று நாம் நம்புகிறோம்' என்று உக்ரைன் துணை பிரதமர் இரினா வெரிஷ்சுக் நேற்று தெரிவித்திருந்தார்.

மரியுபோலில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் முந்தைய முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்த நிலையில் இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம்சாட்டுகின்றன. அந்த நகரில் உணவு அல்லது குடிநீர் இன்றி தொடர்ச்சியான குண்டுவீச்சுக்கு மத்தியில் நூற்றுக்கணக்கானவர்கள் சிக்கியுள்ளனர்.

மரியுபோலில் இருக்கும் பொதுமக்கள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்துவது ஒரு போர் குற்றம் என்று அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

### ஐரோப்பிய ஒன்றிய மாநாடு

பிரான்ஸின் வெர்சைலஸ் மாளிகையில் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ள நிலையில் ரஷ்யா மீது மேலும் நடவடிக்கை எடுப்பதற்கு வலியுறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உக்ரைன் போரினால் அடைக்கலம் பெற்றிருக்கும் 2.5 மில்லியன் அகதிகளுக்கு உதவுவது தொடர்பிலும் இந்த மாநாட்டில் அவதானம் செலுத்தப்படும்.

உக்ரைன் மீதான படையெடுப்பு இரண்டு வாரங்களை கடந்திருக்கும் நிலையில் சர்வதேச வர்த்தகம் மற்றும் நிதி அமைப்பில் இருந்து ரஷ்யாவை தனிமைப்படுத்தும் கடுமையான தடைகளை மேற்கத்திய நாடுகள் விதித்து வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக ரஷ்யாவின் சாதாரண வர்த்தக உரிமைகளை நீக்கும்படி ஜி7 தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளை அமெரிக்க ஜனாதிபதி கோருவார் என்று கூறப்படுகிறது. இது ரஷ்யாவின் பொருட்கள் மீது மேலும் வரி விதிப்பதற்கு வழிவகுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய உக்ரைன் நகரான ட்னிப்ரோ மீது நேற்று மூன்று வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதோடு அதில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாக அவசர சேவை பிரிவு தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல்கள் சிறுவர் பராமரிப்பு நிலையம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் ஒன்றுக்கு அருகில் இடம்பெற்றிருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.


ரஷ்யா இதுவரையில் தலைநகர் கியேவில் ஸ்தம்பித்து இருப்பதோடு உக்ரைனின் வடக்கு மற்றும் கிழக்கில் எந்த நகரையும் கைப்பற்றவில்லை. எனினும் அது தெற்கில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாக ரஷ்யா நேற்று தெரிவித்தது.

நேற்றுக் காலை ரஷ்ய படைகள், மேற்கு நகரங்களான லுட்ஸ்க் மற்றும் இவானோபிராங்கிவ்ஸ்க் விமான நிலையங்கள் மீதான ஏவுகணை தாக்குதல்கள் உட்பட புதிய தாக்குதல்களை ஆரம்பித்தது.

மேலும், இரண்டு வாரங்களுக்கு முன் படையெடுப்பு ஆரம்பித்ததில் இருந்து முதன்முறையாக அவர்கள் மத்தியமேற்குப் பகுதியின் கோட்டையாகக் கருதப்படும் டினிப்ரோ மீதும் குண்டு வீசியுள்ளனர்.

குண்டுவெடிப்புகளுக்கு உள்ளாகியுள்ள நகரங்களில் இருந்து அகதிகள் உக்ரைனின் மேற்குப் பகுதி பாதுகாப்பானது என்று நம்பி வெளியேறி வருகின்றனர். அதில் பெரிய சிவிலியன் மையமான வீவ் வழியாக பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்றுள்ளனர். இந்நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை தாக்குதல்கள் அதற்கு இருபுறமும் உள்ள நகரங்கள் மீது நடக்கின்றன.

## கொவிட் மரணங்கள் மும்மடங்கு அதிகம்



கொரோனா வைரஸ் தொற்றால் உலக அளவில், 18 மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். இது, அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட மரண எண்ணிக்கையைப் போன்று கிட்டத்தட்ட மூன்று மடங்காகும்.

கொவிட்19 நோயை, உலகளாவிய வைரஸ் பரவலாக உலக சுகாதார அமைப்பு அறிவித்த இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி, வொஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வறிக்கை இதனைத் தெரிவித்தது.


191 நாடுகளையும் பிரதேசங்களையும் சேர்ந்த தகவல்களை ஆராய்ந்த பின்னர், இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றால் நேரடி மரணம் நேர்ந்ததோடு அந்தத் தொற்றால் ஏற்கனவே இருந்த இதய, நுரையீரல் நோய்கள் கடுமையாகி மற்ற பல மரணங்கள் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டது.

வைரஸ் பரவல் நேருமுன் ஏற்பட்ட மரணங்களோடு அண்மைய ஆண்டுகளின் மரண எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்து, புதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டது. உலக அளவில் சராசரியாக, ஒவ்வொரு 100,000 பேரில் 120 கொவிட் மரணங்கள் நேர்ந்தன.

பொலிவியா, பல்கேரியா உள்ளிட்ட நாடுகளில், மரண வீதம் ஆக அதிகமாக இருந்தன. ஐஸ்லந்து, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் ஆகக் குறைவான மரணங்கள் பதிவாயின.

## தடைகளுக்கு ரஷ்யா பதிலடி



உலகின் சில நாடுகள் விதித்துள்ள தடைகளுக்குப் பதிலடியாக, சில தயாரிப்புகளையும், சாதனங்களையும் ஏற்றுமதி செய்ய ரஷ்யா தடை விதித்துள்ளது.

தொழில்நுட்பம், தொடர்பாடல், மருத்துவச் சாதனங்கள் உள்ளிட்ட 200 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளின் ஏற்றுமதியை இந்த ஆண்டு இறுதிவரை ரஷ்யா தடை செய்துள்ளது.

மொஸ்கோவுக்கு எதிராகப் பகையுடன் நடந்துகொள்வதாகக் குற்றஞ்சாட்டப்படும் சில நாடுகளுக்கு மரத் துண்டுகளை ஏற்றுமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் அது பொருந்தும்.

மேலும் ரஷ்யத் துறைமுகங்களுக்குள் வெளிநாட்டுக் கப்பல்கள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்படும் என்றும் ரஷ்யா கூறியது.

அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிய ரஷ்ய ஜனாதிபதி புட்டின், மேற்கத்திய நாடுகளின் கூட்டணி விதித்துள்ள தடைகளால் எழுந்துள்ள அச்சத்தைப் போக்க முயன்றார்.

எரிசக்தி விநியோகத்தில் தனது கடப்பாட்டை உணர்ந்து, எண்ணெய், எரிவாயு விநியோகத்தை மொஸ்கோ தொடரும் என்று புட்டின் கூறினார்.

மேற்கத்திய நாடுகள் தங்கள் சொந்தத் தவறுகளுக்காக ரஷ்யா மீது பழிபோட முயல்வதாக அவர் குறிப்பிட்டார்.

## ரஷ்யாவுக்கு எதிரான பகைமை கருத்துக்கு பேஸ்புக் அனுமதி




பேஸ்புக், இன்ஸ்டாகிராம் ஆகிய சமூக ஊடகங்களில் ரஷ்யாவுக்கு எதிராக வன்முறை கோரும் பதிவுகளுக்கு தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த சமூக ஊடகங்களை நிர்வகிக்கும் மெடா நிறுவனம் அது குறித்து நிர்வாக அளவில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களை ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் உறுதிசெய்தது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், பெலாரஸ் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லூகாஷென்கோ ஆகியோருக்கு மரணம் வரும்படிக் கோரும் பதிவுகள் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், பதிவுகளில் இடமோ, நடைமுறையோ குறிப்பிடப்படக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யா, உக்ரைன், போலந்து ஆகிய நாடுகளில் மட்டும் அத்தகைய குறிப்புகளுக்கு அனுமதியளிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

போலந்து, ரஷ்யா, உக்ரைன், சுலோவாக்கியா, ஹங்கேரி உள்ளிட்ட நாடுகளில் ரஷ்ய இராணுவ வீரர்களுக்கு எதிராகப் பகைமையைத் தூண்டும் பதிவுகளுக்கு அனுமதி உண்டு. இருப்பினும், ரஷ்ய மக்களுக்கு எதிராக வன்முறை செலுத்தும் இயக்கங்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்று மெடா குறிப்பிட்டது.

சமூக ஊடகங்களில் பகைமையைத் தூண்டும் பதிவுகள் பொதுவாகத் தடைசெய்யப்படும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பைக் கருத்தில்கொண்டு, விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
2022 மார்ச் 12 சனிக்கிழமை

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் மாசி 28
ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# இலங்கையின் அபிவிருத்திகளுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம்

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஜனாதிபதியிடம் உறுதி



ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய அதன் தலைவர் மசட்சுகு அசகாவா (Masatsugu Asakawa), இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் (10) நடைபெற்ற சந்திப்பின் போதே மசட்சுகு அசகாவா இவ்வாறு தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் தனியார் துறையின் தொழில் முனைவோர் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் விசேட கவனம் செலுத்தப்படுமென்றும் தலைவர் தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கி, கடந்த வருடம் 750 மில்லியன் டொலர் சலுகைக் கடன்களை வழங்கியது. இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கு 02 பில்லியன் டொலர் கடன் உதவி ஒதுக்கப்படும் என்று மசட்சுகு அசகாவா குறிப்பிட்டார்.

கொவிட்19 தொற்றுப்பரவல் காரணமாக பின்னடைவைச் சந்தித்த இலங்கையின் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்கும், மனித வள அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்குவதாக தலைவர் மேலும் தெரிவித்தார்.

கொவிட்19 தொற்றுநோயின் விளைவுகளைத் தணிக்க, இலங்கைக்கு கிட்டத்தட்ட 600 மில்லியன் அமெரிக்க டொலர் கடன்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கியதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

பசுமை விவசாயம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தி 06

## தவக்கால சிந்தனை



### அன்பே இயேசுவின் வழி

ஆற்றங்கரையோரத்தில் தியானத்தில் ஈடுபட்டிருந்த வயதான ஞானியைக் குறித்த கதையானது: தண்ணீரைக் தொட்டுக் கொண்டிருந்த மரத்தின் கிளையில் அமர்ந்திருந்த பெரிய தேள் ஒன்று தன்னை தண்ணீரிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக போராடிக் கொண்டிருந்தது.

இதனைக் கண்ணுற்று அதனை விடுவிப்பதற்கான முயற்சியினை ஞானி மேற்கொண்டபோது தேள் அவரைக் கொட்டிவிட்டது. ஆயினும் அவர் தனது முயற்சியினை தொடர்ந்து கொண்டிருந்தார்.

இதனைக் கண்ணுற்ற அவ்வழியே சென்ற வழிப்போக்கன் அவரைப்பார்த்து "உமக்கென்ன பைத்தியமா பிடித்துவிட்டது? ஒரு பிரயோசனமற்ற படைப்புக்காக நீர் உமது வாழ்வையே பணயம் வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறீரே" என்று கேட்டான்.

வயதான ஞானியோ அவனைத் திரும்பிப்பார்த்து "தேளின் குணம் கொட்டுவது. அதற்காக நான் ஏன் எனது குணமாகிய பாதுகாப்பதை விட்டுவிட வேண்டும்" என்று கேட்டார்.

இக்கதையானது நாமனைவரும் எதிர்கொள்ளும் சிக்கல்களை முன் வைக்கின்றது: நாம் அடுத்தவரிடமிருந்து பெறுகின்ற நடத்தைக்கு எதிர்வினையினை ஏற்படுத்த அதிலிருந்து தகவலைப் பெறுகின்றோமா?

அல்லது அடுத்தவர்களால் தாக்குதலுக்கு உள்ளாகின்றபோதும் நாம் நமது நன்மைத்தன வாழ்வில் எவ்வித மாறுதலுமின்றி தொடர்கின்றோமா?

இன்றைய நற்செய்தியிலே இயேசுகிறிஸ்து தன்னுடைய சீடர்கள் துன்புறுத்தப்படுகின்றபோதும் வெறுக்கப்படுகின்றபோதும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை தமக்குரிய வினாவிலே விடையளிக்கின்றார்.

தன் சீடர்களை அவர்களது பகைவர்களை அன்பு செய்யுங்கள் என்பதனூடாக அன்பிற்கான அனைத்து எல்லைகளையும் உடைத்தெறிகின்றார். யாருமே தனது சீடர்களை துன்புறுத்துவோர் கூட கிறிஸ்தவ அன்பிலிருந்து விலக்கப்படவில்லை. அன்பே கிறிஸ்துவின் வழி.அவ்வழியில் எத்தடை வரினினும் அது தேளாக இருந்தாலும் அன்பே அவரது வழியாகும்.

அருட்தந்தை நவாஜி...

## இலங்கை மீனவர்கள் 05 பேர் இந்தியாவில் படகுடன் கைது

இந்திய கடலோர பாதுகாப்பு படையின் ரோந்து பணியின் போது இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 05 பேரை கைது செய்துள்ளதுடன், படகையும் பறிமுதல் செய்துள்ளனர்.

தூத்துக்குடியிலிருந்து 120 கடல் மைல் தூரத்தில் கன்னியாகுமரியிலிருந்து தெற்கு நோக்கி 120 கடல் மைல் தூரத்தில் இந்திய கடல் எல்லைப் பகுதிக்குள் இலங்கை மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருப்பது இந்திய கடலோர காவல் படை ரோந்து கப்பல் ஆன வஜ்ரா 37 என்ற கப்பலில் உள்ள அதிநவீன தொலைநோக்கி கருவி மூலம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அந்த இலங்கை மீன்பிடி படகை இந்திய கடலோர காவற் படையினர் விரட்டிச்சென்று பிடித்துள்ளனர்.

மீன் பிடிக்க பயன்படுத்திய படகு மற்றும் படகிலிருந்த மீன் அனைத்தையும் பறிமுதல் செய்து தூத்துக்குடி தருவைகுளம் மீன்பிடி படகு தளத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கிருந்து இராமேஸ்வரம் கொண்டு சென்று அங்குள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

### விமல் , கம்மன்பில ஆகியோரை

## மீண்டும் இணைத்து கொண்டு செயற்பட எதிர்பார்க்கிறோம்

### -இராஜாங்க அமைச்சர் அருந்திக



முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரை ஒன்றினைத்துக் கொண்டு நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண எதிர்பார்த்துள்ளோம் என தெரிவித்துள்ள தெங்கு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ, ஆனால் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி கூட்டணிக்குள் முரண்பாட்டை தோற்றுவித்து அரசியல் இலாபம் தேடிக் கொள்ள முயற்சிப்பதாகவும் சுதந்திர கட்சி தேர்தல்களில் தனித்து போட்டியிடுவதால் பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதெனவும் தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஒருசில தவறான புரிதல்களினால் அவர்கள் அமைச்சரவை கூட்டுப்பொறுப்புக்கு முரணாக செயற்பட்டதை தொடர்ந்து ஜனாதிபதியால் அமைச்சு பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். இந்நிலையில் விமல், உதய ஆகியோரை இணைத்துக்கொண்டு செயற்படவே எதிர்பார்க்கிறோம் என்றார்.

## இளம் இலங்கை தொழில் முனைவோர் பேரவை 23ஆவது ஆண்டு நிறைவு விழா

### -பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமை



இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவையின் 23ஆவது ஆண்டு நிறைவு விழா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் (10) நடைபெற்றது.

500 க்கும் மேற்பட்ட இலங்கை வணிகங்களை உள்ளடக்கிய இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவை உள்ளூர் தொழில்முனைவோரை முதன்மையாக கொண்ட பேரவையாகும்.

இப்பேரவையின் ஆரம்பக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்தமை விசேடம்சமாகும். அதன் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பல தடவைகள் பேரவையின் ஆண்டு நிறைவு விழாக்களில் கலந்து கொண்டுள்ளார்.

இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவையின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 2022/2023 ஆண்டுக்கான புதிய தலைவராக திமுத் சங்கம சில்வா தெரிவுசெய்யப்பட்டார்.

இச் சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இராஜாங்க அமைச்சர்களான விதுர விக்கிரமநாயக்க, தயாசிறி ஜயசேக்கர மற்றும் தூதுவர்கள், தூதுவப் பிரதிநிதிகள், முன்னாள் அமைச்சர்கள், இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவையின் முன்னாள் தலைவர் சாரங்க குணவர்தன உள்ளிட்ட இளம் தொழில்முனைவோர் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் விவாதம் நடத்த தயார்

### நிதி அமைச்சர் குறித்து நேற்றும் சபையில் சர்ச்சை

**ஷம்ஸ் பாஹிம்**



நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக விவாதம் நடத்துவற்குத் தயார் எனவும் அதற்கான நேரத்தை ஒதுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் சபைமுதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொருட்களின் விலையேற்றம் மற்றும் பொருளாதார நிலைமை தொடர்பில் பதிலளிக்க நிதி அமைச்சர் வரவேண்டுமென எதிரணி சார்பில் நேற்றும் சபையில் கோரப்பட்டது. இதற்குப் பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


பாராளுமன்றம் சபாநாயகரின் தலைமையில் கூடியது. தினப்பணிகளை தொடர்ந்து அநுர குமார திசாநாயக்க எம்.பி ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை முன்வைத்தார். அவரை தொடர்ந்து எதிரணி எம்.பிகள் பலரும் கருத்து வெளியிட்டனர். இதனால் சர்ச்சை ஏற்பட்டது.

ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்த அநுர குமார எம்.பி , பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் கூட அமைச்சர்கள் பாராளுமன்றம் வந்து விளக்கமளிப்பர். நிதி அமைச்சர் நாட்டு நிலை குறித்து விளக்கமளித்தால் எமக்கு விவாதம் கோரலாம் என்றார்.

சபை முதல்வர் தினேஷ் குணவர்தன பதிலளிக்கையில், 06

## தொல்பொருள் பெயரிலான தலையீடுகள்; உடன் விசாரணை நடத்தப்பட வேண்டும்

**ஷம்ஸ் பாஹிம்**



கிழக்கில் தொல்பொருள் பாதுகாப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் தலையீடுகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். தொல்பொருள் முக்கியமான இடங்களை பாதுகாக்க நாமும் தயாராகவே இருக்கிறோமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்தார்.

பாலமுனையில் முள்ளிகுளம் மலையில் நிர்மாணமொன்று மேற்கொள்ள முயன்றதால் குழப்ப நிலை ஏற்பட்டது. மாயக்கல்லி பகுதியிலும் மற்றொரு நிர்மாணம் செய்யப்படுவதால் பிரச்சினை எழுந்தாக தெரிவித்த அவர், இவற்றினால் நல்லிணக்கம் எவ்வாறு வரும் என்றும் கேள்வி எழுப்பினார்.

சபையில் நேற்று உரையாற்றிய அமைச்சர்,

பாலமுனையில் முள்ளிகுளம் மலையில் பிக்குமார் சிலர் பாதுகாப்பு தரப்பினருடன் நிர்மாணமொன்று மேற்கொள்ள முயன்றதால் குழப்ப நிலை ஏற்பட்டது. அங்கு தொல்பொருள் இடம் இருந்தால் பிரதேச மக்களை அறிவூட்ட வேண்டும்.

மாயக்கல்லி பகுதியிலும் மற்றொரு நிர்மாணம் செய்யப்படுகிறது.

தொல்பொருள் திணைக்களம் வர்த்தமானி அறிவிப்பு வெளியிட்டிருந்தால் பிரதேச மக்களுடன் பேசினால் அவற்றை பாதுகாக்க நாமும்முன்வருவோம். கண்ணுக்கு எட்டிய பகுதி வரை பௌத்த குடும்பம் இல்லாத பகுதியில் தான் இது நடந்துள்ளது. இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். மாவட்ட செயலாளருக்கும் முறையிட்டோம்.

தொல்பொருள் திணைக்கள பொறுப்பை வேறு நபர்களுக்கு வழங்க முடியாது.நாட்டில் கிழக்கில் மட்டுமா தொல்பொருள் பகுதிகள் உள்ளன? கிழக்கிற்கு தனியான தொல்பொருள் செயலணி நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதால் 06

## ரஷ்யா மீதான தடையால் பாரிய விளைவுகள் ஏற்படும்

### ரஷ்யா எச்சரிக்கை

ரஷ்ய எண்ணெய் இறக்குமதி மீதான மேற்கத்திய நாடுகளின் தடையால் எண்ணெய் விலை பீப்பாய்க்கு சுமார் 300 டொலர் வரை இரட்டிப்பாகும் என்றும், ரஷ்யாவிலிருந்து ஜெர்மனிக்கு முக்கிய எரிவாயு குழாய் மூடப்படுமென்றும் ரஷ்ய உயர் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

ரஷ்ய எண்ணெய்யை நிராகரிப்பது உலக சந்தையில் பேரழிவு விளைவுகளுக்கு வழிவகுக்குமென ரஷ்ய துணைப் பிரதமர் அலெக்சாண்டர் நோவக் தெரிவித்தார்.

எண்ணெய் விலை உயர்வு கணிக்க முடியாததாக இருக்கும், என்றும் அவர் கூறினார். ரஷ்யாவின் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு தொடர்பாக ரஷ்யா மீதான அழுத்தத்தை அதிகரிக்க அமெரிக்கா முயல்கிறது. வொஷிங்டனும் அதன் ஐரோப்பிய நண்பர்களும் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை தடை செய்வது குறித்து பரிசீலித்து வந்ததையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான தாக்குதலைத் தொடர்ந்து மேற்கத்திய நாடுகள் மாஸ்கோவை பொருளாதாரத் தடைச் சுவரால் 06

### அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளால்

## காலத்துக்கு காலம் எடுக்கும் தீர்மானங்களால் அரச நிதிக்கு பாரிய பாதிப்புக்கள்

### கோப் தலைவர் சுட்டிக்காட்டு



அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் சேவையாற்றும் அதிகாரிகளால் காலத்துக்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களால் அரச நிதிக்கு பாரிய இழப்புக்கள் ஏற்படுவதாக அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தி லொத்தர் சபையின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராயும் வகையில் கோப் குழு பாராளுமன்றத்தில் (10) கூடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பு நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்யும் நோக்கில் 38.75 மில்லியன் ரூபாய் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கலையகத்தை உரிய நோக்கத்திற்காக 2015 முதல் இதுவரை பயன்படுத்தாமை தொடர்பில் 06

## உணவுப் பொதி கொத்துரொட்டி, பாண், சிற்றுண்டி விலை அதிகரிப்பு

உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க சிற்றுண்டிசாலைகள் உரிமையாளர் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர். அதற்கமைய உணவுப் பொதி ஒன்றின் விலை இன்று முதல் 20 ரூபாவினால் அதிகரிக்கப்படுமென அச் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர். அதேபோல் கொத்துரொட்டி ஒன்றின் விலை 10 ரூபாவினாலும், சிற்றுண்டிகளின் விலை 05 ரூபாவினாலும் அதிகரிப்பட்டுள்ளது.

இதேவேளை, பாண் ஒன்றின் விலை 20 முதல் 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 183.25 | 192.37 |
| கனடியன் டொலர் | 195.26 | 204.12 |
| யூரோ | 278.29 | 288.81 |
| ஜப்பான் யென் | 2.1570 | 2.2543 |
| சிங்கப்பூர் டொலர் | 185.58 | 192.47 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.51 | 271.91 |
| சுவிஸ் பிராங்க் | 270.59 | 281.79 |
| அமெரிக்க டொலர் | 249.96 | 259.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 608.26 | கட்டார் ரியால் | 62.81 |
| குவைத் டினார் | 755.13 | சவூதி ரியால் | 61.12 |
| ஓமான் ரியால் | 595.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 62.43 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 28ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 08

**குறள் தரும் சிந்தனை**



அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு

பயத்தினால் நடுங்குகிறவர்களுக்குத் தம்மைச் சுற்றிப் பாதுகாப்புக்கான அரண் கட்டப்பட்டிருந்தாலும் எந்தப் பயனுமில்லை. அதைப் போலவே என்னதான் உயர்ந்த நிலையில் இருந்தாலும் மறதி உடையவர்களுக்கு அந்த நிலையினால் எந்தப் பயனுமில்லை.

# அரசியல் கட்சிகள் நடத்துகின்ற சந்தர்ப்பவாத போராட்டங்கள்!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த இரு வருட காலமாக விசித்திரமான காட்சிகளை நாம் கண்டு வருகின்றோம். அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படுகின்ற சமயம் பார்த்து, எதிரணிக் கட்சிகள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்தி வருகின்ற காட்சியே அதுவாகும். பெரும்பான்மை அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி, சிறுபான்மை அரசியல் கட்சிகளும் இவ்விதமான போராட்டங்களில் ஈடுபட்டு வருவதை கடந்த இரு வருட காலமாக அவதானிக்க முடிகின்றது.

கடந்த இரு வருட காலமாக இவ்வாறான நிலைமை அதிகரித்திருப்பதற்குக் காரணம் கொவிட் தொற்றினால் உருவாகிய நெருக்கடி ஆகும். கொவிட் தொற்று காரணமாகத் தோன்றிய நெருக்கடியானது இலங்கைக்கு மாத்திரம் உரியதல்ல. உலகின் பல நாடுகளில் கொரோனா தொற்றின் விளைவாக பொருளாதாரம் வீழ்ச்சிக்குச் சென்றுள்ளது. விலைவாசி உயர்வினால் மக்களின் வாழ்க்கைச் செலவு பெருமளவு அதிகரித்துள்ளது.

உள்நாட்டு வருமானம் வீழ்ச்சியடைந்ததாலேயே இவ்வாறான நெருக்கடிக்கு உலக நாடுகள் முகம் கொடுத்துள்ளன. இந்த நெருக்கடிக்கு இலங்கை மாத்திரம் விதிவிலக்கு அல்ல. பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெற்றோல் பற்றாக்குறை காரணமாக மின்சார உற்பத்தியிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இரு வருட காலத்துக்கு மேலாக நீடித்து வருகின்ற கொவிட் தொற்று நிலைமை காரணமாகவே இவ்வாறான நெருக்கடிகள் உருவெடுத்துள்ளன என்பதை அனைவரும் அறிவர். அரசுக்கு எதிரான அரசியல் கட்சிகளுக்கும் இந்த உண்மை புரியாமலில்லை. ஆனாலும் அந்த உண்மைமை மறந்த நிலையில் அரசுக்கு எதிராக மக்கள் மத்தியில் தவறான எண்ணங்களை விதைப்பதிலும், ஆர்ப்பாட்டங்களை நடத்துவதிலுமே அரசுக்கு எதிரான அரசியல் கட்சிகள் இப்போது முனைப்பாக உள்ளன.

இன்றைய பொருளாதார நெருக்கடியை எதிரணிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு முற்படுகின்றன. அரசுக்கு எதிராக மக்களைத் திசைதிருப்பி விடுவதன் மூலம் மக்கள் செல்வாக்கை தங்களது பக்கம் பெருக்கிக் கொள்வதற்கு அந்தக் கட்சிகள் எதிர்பார்க்கின்றன. இது சந்தர்ப்பவாத அரசியலின் உச்சம் எனலாம்.

தென்னிலங்கையில் அரசுக்கு எதிரான பெரும்பான்மைக் கட்சிகள் அவ்வப்போது ஆர்ப்பாட்டங்களை திரைமறைவில் இருந்தபடி அரங்கேற்றுகின்றன. அரச ஊழியர்களின் ஆர்ப்பாட்டங்களின் போது அதன் பின்னணியில் எதிரணி அரசியல் கட்சிகளே உள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. கொவிட் தொற்று நாட்டில் உச்சகட்டத்தில் இருந்த வேளையிலும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை அரசஎதிர்ப்பு சக்திகள் தூண்டியமை நினைவிருக்கலாம்.

அதேபோன்று தமிழ் அரசியல் கட்சிகளும் காலத்துக்குக் காலம் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதும், பின்னர் சில காலத்துக்கு மௌனம் காப்பதும் வழமையாகும். தமிழ்க் கட்சிகள் நீண்ட காலத்துக்கு உறங்குநிலையில் இருப்பது வழமை. அதன் பின்னர் தேர்தலொன்று வருகின்ற வேளையிலோ அல்லது ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பமாகவிருக்கின்ற வேளையிலோ உறக்கம் கலைவது வழமையாகும்.

இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் ஜெனீவாவில் முன்வைக்கப்படுகின்ற சந்தர்ப்பம் பார்த்து அதற்கு வலுசேர்ப்பதே தமிழ்க் கட்சிகளின் திட்டமாக இருக்கின்றது. தமிழ் அரசியல் கட்சிகளின் கையெழுத்து வேட்டையும் அவ்வாறான சந்தர்ப்பவாத அரசியல் முன்னெடுப்புகளில் ஒன்றேயாகும். ஜெனீவாவில் மனித உரிமைப் பேரவைக்கு அழுத்தம் கொடுப்பதே இந்த செயற்பாடுகளின் உள்நோக்கமாக இருந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் நோக்கமும் இதுவேயாகும். முன்னைய நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எத்தனையோ ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்க வேண்டும். தமிழ் மக்களின் நலனுக்காக எத்தனையோ விடயங்களைச் சாதித்திருக்க வேண்டும். அன்றைய காலத்தில் சாதிப்பதற்கான பலத்தை அவர்கள் கொண்டிருந்தனர். ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அன்றைய நல்லாட்சி அரசாங்க காலத்தில் உறங்கு நிலையிலேயே இருந்தது.

மைத்திரி ரணில் தலைமையிலான அரசாங்கத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்காளிக் கட்சியாக இருக்கவில்லை. ஆனால் பங்காளிக் கட்சிகளைப் பார்க்கிலும் அரசாங்கத்தில் செல்வாக்கு மிகுந்த கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அன்று விளங்கியது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கூட அலங்கரிக்க முடிந்தது.

தமிழ்க் கூட்டமைப்பு கோருகின்ற எதனையும் நிறைவேற்றி வைக்கக் கூடிய நிலைமையிலேயே அன்று நல்லாட்சி அரசாங்கம் இருந்தது. ஆனாலும் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அக்கறையை தமிழ்க் கூட்டமைப்பு கொண்டிருக்கவில்லை. அவ்வாறிருக்கையில் தமிழ்க் கூட்டமைப்பு நடத்துகின்ற போராட்டங்களின் உள்நோக்கம் தெளிவாகவே தெரிகின்றது.

அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதே இவ்வாறான செயற்பாடுகளின் நோக்கமாகும். ஜெனீவா அமர்வுகள் முடிவடைந்த பின்னர் இப்போராட்டங்களும் ஓய்ந்து போய் விடும். இவ்வாறான சந்தர்ப்பவாத அரசியல் நகர்வுகளைக் கைவிட்டு தமிழ் மக்களின் நலனுக்கான செயற்பாடுகளில் அவர்கள் இதயசுத்தியுடன் ஈடுபடுவதே நல்லதாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டு; கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜையும் செயற்திட்டத்தின்' ஓர் அங்கமாக மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்கு அமைவாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கனடா ரொன்ரோ வதிவிடமாகக் கொண்ட சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் அவர்களின் அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் உடுப்பிட்டி கலாசார மத்திய நிலையத்தில் இன்று 12.03.2022 சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு நடைபெறுகின்றது.



இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜெயச்செல்வி சசிகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சைவ சித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பொன்.சந்திரசேகரமும், சிறப்பு விருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலட்சுமியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் சமூகப்பணி' என்னும் தொனிப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை என்பனவும் நடைபெறும்.

அதனையடுத்து மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்கு அமைவாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை மாதகல் சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் 13.03.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கயிலநாயகி பரந்தாமன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் கல்வியற் கல்லூரி உபபீடாதிபதி கலாநிதி பா.தனபாலனும் சிறப்பு விருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலட்சுமியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் சமூகப்பணி' என்னும் தொனிப்பொருளில் சைவப்புலவர் கா.கமலநாதனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்று. மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்கு அமைவாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. தொகுப்புரையை இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி அகல்ஜா ஜனார்த்தனன் நிகழ்த்துவார்.

# ஓட்டமாவடி மஜ்மாநகரில் கொவிட்-19 ஜனாஸா நல்லடக்கப் பணி நிறைவு



## நல்லிணக்கத்தின் அடையாளம்; ஜனாதிபதி, பிரதமர் உட்பட ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றார் ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர்

மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்ட கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் காகிதநகர் 210பி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கிராமமே சூடுபத்தினசேனை மஜ்மா நகராகும். கடந்த கால யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இக்கிராமத்தில் வாழும் மக்கள் விவசாயம், விலங்கு வேளாண்மை, மீன்பிடி, மேட்டு நிலப்பயிர்ச் செய்கை போன்ற தொழில் நடவடிக்கைகளினூடாக தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கொவிட்19 வைரஸ் தொற்று காரணமாக எமது நாட்டிலும் ஏராளமான உயிர்களை நாம் இழந்துள்ளோம். கொவிட் 19 வைரஸ் தொற்று தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எம்மத்தியில் எழுந்து வரும் இச்சூழ்நிலையில், இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் கொவிட் 19 தொற்றினால் மரணித்த போது முஸ்லிம்களின் சமய அடிப்படையில் உடல்களை நல்லடக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கப்படாது அவை எரிக்கப்பட்டமை தொடர்பில் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் கவலையடைந்தனர்.



இக்காலகட்டத்தில் நல்லடக்கம் செய்வதற்கான அனுமதியை அரசிடம் கோரி வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன. அதன் பின்னர் இலங்கை அரசு கொரோனா தொற்றினால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கான அனுமதியை வழங்கியது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கொவிட் 19 ஜனாஸா நல்லடக்கத்திற்குப் பொருத்தமான இடங்களை அடையாளப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட வேளையில், மட்டக்களப்பு, கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மஜ்மா நகர், சூடுபத்தினசேனை கிராமம் அடையாளம் காணப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் கோறளைப்பற்று மேற்கு, மத்தி ஆகிய பிரதேச செயலாளர்களின் பங்குபற்றுதலுடன் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை கல்குடா கிளை, முஸ்லிம் பிரதேச சிவில் சமூக அமைப்புக்கள், பிரதேச ஜும்ஆப்பள்ளிவாயல்கள், மாவட்ட ரீதியில் காத்தான்குடி, ஏறாவூர் முஸ்லிம் சமூக நிறுவனங்களின் சம்மேளனங்களின் ஒத்துழைப்புடன் இதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவசர அவசரமாக ஜனாஸா நல்லடக்கத்திற்கு முதல் நாளிரவு மயான பூமியாக அடையாளப்படுத்தப்பட்ட அப்பகுதி சுத்திகரிக்கப்பட்டு, இலங்கை இராணுவத்தினர் மற்றும் சுகாதாரத்துறையினரின் வழிகாட்டலில் முதலாவது ஜனாசா நல்லடக்கம் கடந்த மார்ச் மாதம் 05 ஆம் திகதி 2021 (05.03.2021) அன்று பி.ப 4.00 மணியளவில் நடைபெற்றது.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் பணியாற்றும் முஸ்லிம் ஊழியர்களினால் முஸ்லிம் மக்களின் சமய அனுஷ்டானங்களுடன் கொவிட்19 சுகாதார வழிமுறைகளைப்பேணி நல்லடக்கம் செய்யப்பட்டது.



அன்று முதல் இன்று வரை அவர்களே அனைத்தின மக்களின் உடல்களை நல்லடக்கம் செய்யும் இப்பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை 05.03.2021 தொடக்கம் 05.03.2022 வரை கொவிட்19 தொற்றினால் மரணித்த 3,634 நபர்களின் உடல்கள் இம்மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

அது தொடர்பான விபரம் வருமாறு:

பௌத்த சமயத்தவர்கள்: 291, இந்து சமயத்தவர்கள்: 269,கிறிஸ்துவ சமயத்தவர்கள்: 86, வெளிநாட்டவர்: 04

முஸ்லிம்கள்: 2,984 பேர் உள்ளடங்குகின்றனர். இற்றை வரைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய இராணுவத்தினரின் முழுமையான ஒத்துழைப்புடன் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை இந்த ஜனாஸா நல்லடக்கப் பணியினை மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

இதன் மூலம் சர்வதேச ரீதியில் முஸ்லிம் நாடுகளினாலும் மனித உரிமை அமைப்புக்களினாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கிணங்க இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை முஸ்லிம்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட கல்குடா முஸ்லிம் பிரதேச மக்கள் வசிப்பிடங்களுக்கான இடப்பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும், 'ஒரு மனிதாபிமானம் கொண்ட சுமையாக' இந்த ஜனாஸா நல்லடக்கத்திற்கான இடத்தை முஸ்லிம்களுக்கு மாத்திரமல்ல, இலங்கையில் கொவிட் 19 தொற்றினால் மரணிக்கும் அனைவருக்குமென வழங்கியுள்ளனர். அது பாராட்டப்பட வேண்டியதாகும்.

மேலும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கமைவாக நாட்டில் கொவிட்19 தொற்றினால் மரணிக்கின்றவர்களின் உடல்களை தத்தமது பிரதேசங்களில் 2022ம் ஆண்டு மார்ச் 5ஆம் திகதி முதல் நல்லடக்கம் செய்யலாம் என்று அனுமதி வழங்கப்பட்டதற்கமைவாக ஓட்டமாவடி பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான கொவிட் 19 ஜனாஸா நல்லடக்கப்பணி முடிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி அனுமதியளித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, சுகாதார மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் நாடளாவிய ரீதியில் இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிய சிவில் சமூக நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் மற்றும் தமது பிரதேச மக்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களை ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம். நௌபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கொவிட்19 மரண அடக்கஸ்தலமானது இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் நல்லிணக்கத்திற்கான அடையாளமாகும்.

எம்.ரீ.எம்.பாரிஸ்...

# 'எனக்குள்ளே' இசைவெளியீட்டு விழாவில் கண்களை தானம் செய்த படக்குழுவினர்

இந்திய சினிமாத் துறைக்கு நிகராக பல்வேறுபட்ட கலைப்படைப்புகள் மட்டக்களப்பு மாவட்ட கலைஞர்களால் வெளியிடப்பட்டு வரும் நிலையில் அண்மைக் காலத்தில் மட்டக்களப்பு வர்த்தக சினிமாத் துறையில் சாதனை படைத்த 'சிப்ஸ் சினிமாஸ்' தயாரிப்பு நிறுவனமானது தனது இரண்டாவது படைப்பாக இம்மாதம் 19 ஆம் திகதி திரையரங்குகளில் வெளியிடும் நோக்குடன் ஓர் நடுத்தர நீளத் திரைப்படமான 'எனக்குள்ளே' எனும் திரைப்படத்தினை தயாரித்து வருகின்றது.

அந்த வகையில் புதிதாக சமூக சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டு வரும் 'எனக்குள்ளே' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா மட்டக்களப்பு வில்லியம் மண்டபத்தில் பிரமாண்டமான முறையில் இடம்பெற்றுள்ளது.

'சிப்ஸ் சினிமாஸ்' உரிமையாளரும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருமாகிய வைத்தியகலாநிதி சுகுணன் குணசிங்கம் தலைமையில், 'எனக்குள்ளே' திரைப்படத்தின் தயாரிப்பு மேற்பார்வையாளர் முரளீதரன் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வை இப்படத்தின் இயக்குநர் கோடீஸ்வரன் மற்றும் அவரது படக்குழுவினர் சிறந்த முறையில் நடத்தியிருந்தனர்.

இசை வெளியீட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பாரதி கெனடி கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், குறித்த நிகழ்விற்கு விசேட அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரப் பிரிவின் பீடாதிபதி கலாநிதி ஜே.கெனடி, கிழக்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கந்தசாமி அருளானந்தம், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வீ.ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் பிரதி சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். மயூரன், மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி.வளர்மதி ராஜ், சமூகப் பற்றாளர் சோமசூரியம் திருமாறன், மகுடம் இதழ் ஆசிரியர் மைக்கல் கொலின் உள்ளிட்ட மேலும் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நம் நாட்டி கலைஞர்களின் நடிப்பில் சிப்ஸ் சினிமாவினால் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 'எனக்குள்ளே' திரைப்படத்தின் இசை இறுவட்டின் முதல்ப்பிரதி சிப்ஸ் சினிமாஸ் உரிமையாளரும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளருமாகிய வைத்தியகலாநிதி சுகுணன் குணசிங்கம், தயாரிப்பாளர்களான முரளீதரன், கோடீஸ்வரன் மற்றும் இசை அமைப்பாளர் கேசாந்த் குலேந்திரன் ஆயோரினால் பிரதம அதிதிக்கு வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.



இதன் போது கேஷாந்த் குலேந்திரனின் இசையமைப்பில் உருவான மூன்று பாடல்கள் வெளியிடப்பட்டதுடன் மட்டக்களப்பில் உள்ள சில மேடைக் கலைஞர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தவும் இதன் போது களம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

இப்படத்தில் பணியாற்றியவர்கள் தமது கண்களைத் தானம் செய்திருந்ததுடன் அதற்கான சான்றிதழ்கள் 'எனக்குள்ளே' விழா மேடையில் வைத்து வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. படத்தின் பாடல்களும், டீசரும் மிக விரைவில் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



எம்.எஸ்.எம். நூர்தீன்...
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# அரசாங்கத் தொழிற்சாலையிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கும் இயந்திரம்

**அரசாங்க இயந்திர பொறியியல் செயற்திட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கொலன்னாவை அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம், பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் திறந்த சந்தைக்குப் போட்டியாக இயந்திர பொறியியல் துறையில் புதிய செயற்பாடுகளை விரிவுபடுத்த ஆரம்பித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்த இயந்திர பொறியியல் துறையில் மேற்கொள்ளப்படும் புதிய பணிகள் காரணமாக சில இயந்திரங்களை இறக்குமதி செய்யாமல் உற்பத்தி செய்வதன் மூலம் அந்நிய செலாவணியை மீதப்படுத்த முடியும் என்பதால், இந்தப் பணிகளை விரைவுபடுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத் தொழிற்சாலைக்கு பணிப்புரை விடுத்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் கிராமிய வீடமைப்பு, நிர்மாண மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் ஊக்குவிப்பு.இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவின் மேற்பார்வையின் கீழ் கொலன்னாவ அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தினால் இந்த உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின்ஆலோசனையின் கீழ் மேற்கொள்ளப்படும் கொலன்னாவ அரச தொழிற்சாலையில் புதிய தயாரிப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தியதன் மூலம், உரம் உற்பத்திக்குத் தேவையான இலைகளை அரைக்கும் 100 இயந்திரங்களுக்கான உற்பத்தி உத்தரவை விவசாய அமைச்சு வழங்கியுள்ளது. நாட்டில் நிறுவப்பட்டுள்ள கமநல சேவை நிலையங்களுக்கு விவசாய திணைக்களத்தினால் அவ்வியந்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

06 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக இயக்கக் கூடிய இந்த இயந்திரத்தின் கொள்ளளவு ஒரு மணித்தியாலத்திற்கு 01 தொன் ஆகும். இந்த இயந்திரத்தினால் 02_ 04 அங்குல அளவுள்ள இலை கிளைகளை சிறிய துண்டுகளாக வெட்ட முடியும். இந்த இயந்திரத்தின் மொத்த மதிப்பு சுமார் நாலு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா. இயந்திரம் மூன்று வழிகளில் இயக்கக் கூடிய வகையில் தயாரிக்கப்படுகிறது. இது போன்ற 24 இயந்திரங்கள் உள்ளன. இந்த இயந்திரத்தின் மொத்த மதிப்பு நான்கரை இலட்சம் ரூபாய். இந்த இயந்திரத்தை 12 குதிரைத்திறன் கொண்ட ட்ராக்டர் என்ஜினில் பொருத்தி இயக்க முடியும்.

இந்த இரண்டு இயந்திரங்களும் மிக உயர்தர உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களை விட குறைந்த விலையில் இவை விற்பனை செய்யப்படுகின்றன. இந்த இயந்திரங்கள் அடிக்கடி பழுதுபார்க்கப்பட வேண்டிய அவசியமில்லை,

இதனால் உதிரிப் பாகங்கள் அடிக்கடி தேவைப்படாது, ஆனால் தேவைக்கேற்ப உதிரிப் பாகங்கள் தேவையான அளவு கையிருப்பில் உள்ளதாக கொலன்னாவ அரச தொழிற்சாலைகள் திணைக்கள பொறியியலாளர் பி.டி.சி. ஜெயசிங்க தெரிவித்தார்.

தற்போது உற்பத்தியில் உள்ள இரண்டு இயந்திரங்களையும் மேம்படுத்துவதற்கான இயந்திர ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொலன்னாவை தொழிற்சாலைகள் திணைக்களத்தின் இயந்திரவியல் அத்தியட்சகர் ருக்ஷான் பிரமோத் தெரிவித்தார். கொலன்னாவ அரச தொழிற்சாலைகள் திணைக்களம் இந்த இரண்டு வகையான இயந்திரங்களை உற்பத்தி செய்வதன் மூலம் 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 70 மில்லியன் ரூபா அந்நிய செலாவணியை நாட்டுக்கு சேமிக்க முடிந்துள்ளது.

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் மூலம் அந்நிய செலாவணி சேமிப்பு

2021ஆம் ஆண்டில் மட்டும் அரச தொழிற்சாலைகள் திணைக்களம் 200 மில்லியன் அந்நிய செலாவணியைச் சேமித்துள்ளது. இந்த வருடத்திலிருந்து 200 மில்லியன் ரூபா வரம்பிற்கு அப்பால் அந்த தொகையை சேமிப்பதற்கான திட்டங்களையும் செயற்பாடுகளையும் அரச தொழிற்சாலைகள் திணைக்களம் தற்போது தயாரித்து வருகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில், கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாண மற்றும் கட்டுமானப் பொருட்கள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிமல் பெரேரா, அரசு தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொயியியலாளர் கே.பீ.வதுகே, அரசு தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் பொறியியலாளர் டி. டி. ஜெயசிங்க, அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்கள சந்தைப்படுத்தல் பணிப்பாளர் பொறியியலாளர். என். பி. எம். பத்மசிறி, அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் பொறியியலாளர் ஆனந்த விஜேசிங்க ஆகியோரின் மேற்பார்வையின் கீழ், இந்த தயாரிப்புகள் அரசாங்க தொழிற்சாலையால் இயக்கப்படுகின்றன.





**டப்ளியூ.கே.பிரசாத் மஞ்சு...**
(நகர அபவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)

# இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மஹரகமை கபூரிய்யா அறபுக் கல்லூரி

**இலங்கை வரலாற்றில் 92 வருடங்களைக் கடந்துள்ள மஹறகமை கபூரிய்யா அறபுக் கல்லூரி, மிக இளவயதிலேயெ எனக்கு அறிவூட்டிய ஒரு கல்லூரியாகும். எனது கல்விப் பாதையை தெரிவுசெய்வதற்கும், எனது கருத்துக்களை சுதந்திரமாகவும், ஆணித்தரமாகவும், மிக அழகிய முறையில் பதிவு செய்வதற்கும் எனக்கு உரமூட்டி என்னை வளர்த்தது இக்கல்லூரியாகும்.**

இலங்கையின் பெரும்பாலான அறவுக் கல்லூரிகளும், மத்ரஸாக்களும் அவைகளுக்கெ கன சில கல்விச் சிந்தனைகளைளயம், வரையறுக்கப்பட்ட எல்லைக்கோடுகளையும் வகுத்துக் கொண்டு செயல்பட்ட காலத்தில் தோன்றிய இக்கல்லூரி, இங்கு கல்விகற்ற மாணவர்களின் சிந்தனைச் சுதந்திரத்தையும், இஸ்லாமிய சமுதாயத்தின் எதிர்கால இமுச்சியையும் கருத்தில் கொண்டு, தன் பாடத்திட்டத்தை திறந்த வெளியரங்கில் செயல்படுத்தியதன் காரணமாகவே இலங்கையில் இன்றுவரை புகழப்படும் பல பிரபல உலமாக்களை இந்நாட்டுக்குத் தர முடிந்தது.

இவ்வகையில் இலங்கை பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளரும் பல சமூக சேவை செயற்பாட்டாளருமான மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹீம், ஒரு காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் சமூக விடிவெள்ளியாகும், கல்வியியலாளராகவும் திகழ்ந்த மௌலவி மர்ஹூம் றூகூல்ஹக், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவராகவும், மிக நீண்ட காலம் செயலாளராகவும் கடமையாற்றி அண்மையில் மரணித்த மர்ஹூம் மௌலவி ஏ.எம். முபாறக் (மதனி), அதே உலமாக சபையின் பொதுச் செயலாளராக சனுமார் 25 வருடங்கள் கடமையாற்றிய மர்ஹூம் ஏ.எல். எம். றியாழ் போன்ற பல தலைசிறந்த உலமாக்களை இக்கல்லூரி உருவாக்கித் தந்தது.

இலங்கையின் மிகப் பிரபலமான அறவுக் கல்லூரிகள் 19ம் நூற்றாண்டில் இறுதிப் பகுதியிலும், 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதியிலுமே தோற்றம் பெற்றுள்ளதை வரலாறு நிரூபிக்கின்றது. இவ்வகையில் இலங்கையில் முதலாவது மத்ரஸாவாகக் கருதப்படும் வெலிகம மத்ரஸதுல பாரி 1884ம் ஆண்டிலும், காலிக் கோட்டையில் உருவான மதரஸது பஹஜதுல் இப்றாஹி மிய்யா 1892ம் ஆண்டிலும், ஏனைய பிரபல மத்ரஸாக்கள், 1900 க்கு பின்னருமே உருவாகியுள்ளன. இந்தியாவின் பிரபல மத்ரஸக்களான தேவ்பந்த் மத்ரஸா 1866 லும் வேலூர் பாகிய்யதுஸ்ஸாலிஹாத் மத்ரஸா 1884 இலும், மற்றொரு இந்தியாவின் பிரபல மத்ரஸவான நத்வதுல் உலமா அறபுக் கல்லூரி 1894ம் ஆண்டிலும் தோன்றியுள்ளன. இவ் வரலாற்றுப் பின்னணியை நாம் ஆய்வுக்குட்படுத்தும் போது, இலங்கையிலும், இந்தியாவிலும் பிரபலமான அறபுக் கல்விக் கூடங்கள் சமகாலத்திலேயே உருவாகியுள்ளதை அறிய முடிகின்றது. இக்காலப் பகுதியில் இலங்கையில் உருவான பல மத்ரஸாக்களின் தோற்றத்துக்கு இந்திய ஆலிம்களே காரணகர்த்தாவாக இருந்துள்ளமையையும் எம்மால் அறிய முடிகின்றது.



**93 வருட வரலாற்றைக் கொண்ட மஹரகம கபூரிய்யா அறபுக் கல்லூரயின் 2021 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா கடந்த 06 ஆம் திகதி நடைபெற்றது. இவ்விழாவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதியும், இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் முதலாவது அறபுத் துறைப் பேராசிரியருமான எம்.எஸ்.எம் ஜலால்தீன் ஆற்றிய சிறப்புரையின் தொகுப்பு**

உலகில் இன்று கொடிய பாவங்கள் தினமும் அதிகரித்துச் செல்வதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இலங்கையிலும் இதன் தாக்கம் மிக அதிகளவில் காணப்படுவதை புள்ளிவிபரங்கள் எமக்குக் காண்பிக்கின்றன.

இலங்கையில் மத்ரஸாக்களில் கற்று வெளியாகிய பல உலமாக்கள் இலங்கையின் தேசிய நீரோட்டத்தில்இணைந்து இந்நாட்டுக்காகவும் இந்நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காகவும் தம்மாலான பங்களிப்புக்களை தொடர்ந்து நல்கி வருகின்றனர். இலங்கையின் மத்ரஸாக்களில் அறபுக் கல்விக்கூடங்களில் கற்றுள்ள பல மௌலவிமார் இலங்கை நாட்டின் பிரதிநிதிகளாக தூதுவர்களாக பல நாடுகளில் இன்றுவரை கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கையிலுள்ள பல அமைச்சுக்களின் செயலாளர்களாக நிர்வாக சேவை அதிகாரிகளாகவும் உள்ளனர். பல உலமாக்கள் இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக, பீடாதிபதிகளாக, துறைத் தலைவர்களாக, பேராசிரியர்களாகவும் காணப்படுவதும் பலர் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் குறிப்பாக அறவு நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் அறபுத்துறை பேராசிரியர்களாகவும் கமையாற்றுவதை என்னால் நிரூபிக்க முடியும். இவ்வாறான உலமாக்களை உருவாக்கும் மத்ரஸாக்களின் தேவையும், அதன் வளர்ச்சியும் இன்றைய காலகட்டத்தில் மிக இன்றியமையாததாகும்.

இக்கல்லூரிகளுக்கெல்லாம் ஒரு விடிவெள்ளியாகத் திகழ்ந்த மஹறகம கபூரிய்யா அறபுக் கல்லூரி இக்கல்லூரி இன்று பல்வேறு பிரச்சினைகளை தினமும் எதிர்கொண்டு வருகின்றது. இப்போது அங்கு கல்வி கற்கின்ற மாணவர்களுக்கான நாளாந்த சேவைகளை தொடர்ந்து வழங்குவதில் பாரிய பொருளாதார சிக்கலை எதிர்கொண்டுள்ளது. இக்கல்லூரிக்காக வக்பு செய்யப்பட்ட சொத்துக்களை பாதுகாப்பதில் பல சட்டப் பிரச்சினைகளை இக்கல்லூரி எதிர்கொண்டுள்ளது.

எவ்வாறெனினும், இக்கல்லூரியின் தற்போதைய முகாமைத்துவ சபையினராகக் காணப்படும் இக்கல்லூரியின் பழைய மாணவ சங்கத்தினர் இச் சவால்களை எல்லாம் எதிர்கொண்டு தம்மாலான பணம், சேவைகளின் மூலமாக இக்கல்லூரியை இன்றுவரை வெற்றிகரமாக இயங்கச் செய்வதற்கு தம்மாலான பெரும் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை செய்து வருகின்றனர். இந்த பட்டமளிப்பு விழாவினையையும் மிக அழகாக சிறந்த முறையில் நடாத்த திட்டமிட்டு அவர்கள் செயற்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றேன்.

# மக்கள் வங்கியின் ஒருங்கிணைந்த நிதியுதவி இலங்கை ரூபா 1.0 ட்ரில்லியனை தாண்டியது

**மக்கள் வங்கியானது டிசம்பர் 31, 2021 ஆம் ஆண்டுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான முடிவுகளை அறிவித்துள்ளது. ஒருங்கிணைந்த மொத்த செயற்பாட்டு வருமானம் ரூ. 110.7 பில்லியனை எட்டியது மற்றும் மொத்த செயற்பாட்டு செலவினங்கள் ரூ. 50.5 பில்லியனை எட்டியுள்ளன. இதில் 2020 ஐ விட முறையே 21.9 வீத மற்றும் 14.9 வீதம் அதிகமாகும்.**

ஒருங்கிணைக்கப்பட்ட வரிக்கு முன்னரான மற்றும் வரிக்கு பின்னரான இலாபங்கள் முறையே ரூ. 37.2 பில்லியன் ரூ. 28.1 பில்லியன். இது 51.1வீதம் மற்றும் 74.6 வீதம் வளர்ச்சியைக் குறிக்கிறது. வங்கியின் தனித்துவமான அடிப்படையில் புள்ளிவிபரங்கள் முறையே ரூ. 30.4 பில்லியன் மற்றும் ரூ. 23.7 பில்லியன். இது 2020 ஐ விட 43.2 வீதம் மற்றும் 67.3 வீதம் அதிகரித்தது. வருமான வளர்ச்சி முதன்மையாக நிகர வட்டி வருவாயில் இருந்து உருவானது ஆகும். இது மொத்த செயற்பாட்டு வருமானத்தில் 90.0 வீதத்தை நெருங்கியது. அத்தோடு வங்கியின் கடன் மற்றும் முதலீட்டுப் பட்டியலின் வளர்ச்சிக்கு ஏற்ப 30.2 வீதம் வளர்ச்சியைக் கண்டிருந்தது. அதே நேரம் அதன் கட்டண வருமானம் 23.4 வீதம் அதிகரித்து, ரூ. 9.0 பில்லியனை எட்டியது. வங்கியின் நிதியிடா வருமான ஆதாரங்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை இது பிரதிபலிக்கிறது.

கடந்த ஆண்டில் வங்கியானது கிராமிய அபிவிருத்தியில் முதலீடு செய்தது. மேலும் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு ஆதரவளித்தோடு பெண் தொழில்முனைவோரையும் ஊக்கப்படுத்தியது. 2021ஆம் ஆண்டின் இறுதியில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களினூடாக அதன் வேறுபட்ட கடன் வசதிகள் மூலம் அது ரூ. 63.0 பில்லியன் வரை நீடிக்கப்பட்டது. இது ஏறத்தாழ ரூ. 1.9 பில்லியன் உள்ளடக்கியவாறு அதன் திட்டங்கள் மூலம் விவசாயம், தகவல் தொழில்நுட்பம், பண்டங்கள் கொண்டு செல்லல், உற்பத்தி, தேயிலை மற்றும் சுற்றுலா என்பவற்றின் வணிக மீள் பார்வைக்கு உதவியது.

மேலும் வங்கியானது மேலதிக கடன் திட்டங்களை விவசாயம் மற்றும் கைப்பணி தொழிற்துறைகளில் சுயதொழில் செய்வோருக்கு உதவிடும் வகையில் அறிமுகப்படுத்தியது. மேலும் நாட்டின் தகவல் தொழில்நுட்பத்துறைக்கு ரூ. 6.0 பில்லியன் தொகையை வழங்கியது. ஏற்கனவே ரூ. 750.0 பில்லியன் தொகையானது கையளிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட கடன் வசதிகள் எனப் பார்க்கும் போது வீட்டு மற்றும் கட்டடத் துறைக்கு வங்கியானது 2021ஆம் ஆண்டில் 10,000க்கும் அதிகமான வீட்டுக் கடன் வதிகளை வழங்கியுள்ளதுடன் அது ரூ. 185.8 பில்லியனுக்கும் அதிகமானதாகும். இதற்கு மேலதிகமாக 2021ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 5.5 பில்லியன் தொகை இராணுவத்தில் ஊனமுற்ற ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கும், ரூ. 68.5 பில்லியன் தொகையை அரசாங்க ஓய்வூதியம் பெறுவோருக்கும் வழங்கப்பட்டது. கலைஞர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில் நிபுணர்களுக்கு உதவிடும் வகையில் ரூ. 550.0 மில்லியன் தொகையை வங்கி வழங்கியுள்ளது. மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவிடும் வகையில் வங்கியானது ரூ. 350.5 மில்லியன் தொகையில் மடிக்கணனிகளுக்கான கடன் வசதித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.



இந்த முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்த மக்கள் வங்கியின் தலைவர், திரு. சுஜீவ ராஜபக்ஷ, "முன்பு காணப்படாத சூழ்நிலைகளில் வங்கியின் முடிவுகள் குறித்து நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஒரு சேவை வழங்குனராக கடந்த இரண்டு வருட காலமாக எமது வாக்குறுதியை வழங்கிடவும் அதை நிறைவேற்றிட வேண்டிய எமது திறனும் இறுதிச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளது.எமது எந்த வெற்றியிலும் திருப்தியடையாமல் அரசின் பொருளாதார மறுமலர்ச்சி திட்டத்தில் கவனம் செலுத்தி முழுமையான அர்ப்பணிப்புடன் நாம் இருக்கின்றோம். முன்னால் இருக்கும் சவால்களை கருத்திற் கொண்டு நாம் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருக்கின்றோம்" என்றார்.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு கருத்து தெரிவிக்கையில், '2020 சவாலான ஓர் ஆண்டென நீங்கள் கருதினால், 2021 ஆனது வேறு மட்டத்தில் இருந்தது. செயற்பாட்டு ரீதியாக இது எமது அர்ப்பணிப்பு, எமது ஒழுக்கம், எமது உறுதிப்பாடு, எமது வலிமை மற்றும் முக்கியமாக எங்கள் தொழில்நுட்ப திறன்களை தொடர்ந்து சோதித்தது. பெருந்தொற்றானது அனைத்து விடயங்களையும் விரைவுபடுத்தியுள்ளது, அனைத்தையும் தொடுகையற்றதாக்கியது, அனைத்தையும் தொலைவுபடுத்தியது மற்றும் அனைத்து விடயங்களையும் டிஜிட்டல்மயமாகியது. எனவே 2021ஆம் ஆண்டைப்பயன்படுத்தி எமது டிஜிட்டல் வாடிக்கையாளர்களுக்கான புதிய வாடிக்கையாளர்களில் கவனம் செலுத்தவும், எமது வாடிக்கையாளர்களுக்கு உதவிட புதிய தீர்வுகளை அறிமுகப்படுத்தவும், எமது ஒட்டுமொத்த டிஜிட்டல் தளத்தை விரிவுபடுத்தவும், எமது வர்த்தக நாம மதிப்பை அதிகரிக்கவும், புதிய உறவுகளை உருவாக்கவும் என இவையனைத்தும் இறுதியாக மேம்பட்ட செயற்திறனை மற்றும் விநியோகத்தினை மேம்படுத்தவும் எம்மை வழிநடத்திடும்" என்றார்.

## ரஷ்யா மீதான...

(03ஆம் பக்கத் தொடர்)

தாக்கியுள்ளன. வொஷிங்டன், ரஷ்ய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு தொழில்நுட்பங்களை ஏற்றுமதி செய்வதில் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உணவுப் பொதி...

(03ஆம் பக்கத் தொடர்)

ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொல்பொருள் பெயரிலான...

(03ஆம் பக்கத் தொடர்)

எவ்வாறு நல்லிணக்கம் ஏற்படும் ?

பிரச்சினைக்கு மாற்று தீர்வு முன்வைக்குமாறு அரச தரப்பில் கோரப்பட்டது. ஆனால் பிரச்சினைக்கு யார் காரணம் என்பது முக்கியம். ரூபாவை மிதக்க விட முடிவு செய்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சேமசிங்க தெரிவித்தார். ஆனால் மத்திய வங்கி ஆளுநர் ஒன்றை சொல்கிறார். நிதி அமைச்சர் வேறு ஒன்றை சொல்கிறார். அந்நிய செலாவணியை அதிகரிக்க இலங்கைக்கு அனுப்பப்படும் ஒரு டொலருக்கு 38 ரூபா வழங்க நிதி அமைச்சர் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்தார். ஆனால் சேமசிங்க அதனை 20 ரூபா என்கிறார்.

டொலரை மிதக்க விட்டதால் சந்தையில் சிறு மாற்றம் ஏற்பட்டாலும் 290 ரூபா வரை டொலருக்கு கேள்வி இருந்தது.

நிதிச் சந்தையில் குழப்ப நிலை உருவாகியுள்ளது. டொலருக்கு எதிராக ரூபாவை மிதக்க விட தயாராகிறீர்கள்.

எரிசக்தி நெருக்கடிக்கு அந்நிய செலாவணி பிரச்சினைதான் பிரதான காரணம். இதற்கு டொலரை மிதக்க விட வேண்டும் என்று ஆரம்ப முதல் கோரப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதை நீங்கள் ஏற்றீர்கள். ஆனால் மத்திய வங்கி ஆளுநர் அதனை ஏற்கவில்லை, என்றார்

## லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம்...

இலங்கை மத்திய வங்கி அந்நிய செலாவணி வீதத்தில் நெகிழ்வை அறிமுகப்படுத்தியதால் கடந்த 07 நாட்களில் டொலரின் பெறுமதி இரு மடங்காக அதிகரித்துள்ளது. ரூ. 203 வாக இருந்த டொலரின் பெறுமதி ஆரம்பத்தில் டொலர் ஒன்றுக்கு ரூ. 230 ஆகவும் பின்னர் ரூ. 260 ஆகவும் அதிகரித்துள்ளது. இந்த 28% க்கும் மேலான அதிகரிப்பிற்கு பிறகும் கடந்த இரு நாட்களில் வங்கி சேவைகளில் போதியளவு டொலர் கிடைக்கப்பெறவில்லை. எவ்வாறாயினும் வங்கிகள் டொலருக்கான பெறுமதியை ரூ. 260 மற்றும் அதற்கும் அதிகமாக வழங்குகின்றன. மறுபுறம் ரஷ்யாவுக்கு எதிராக விதித்த கட்டுப்பாடுகள் மூலம் மசகு எண்ணெயின் விலை 2008 ஆம் ஆண்டில் இருந்தளவிற்கு உயர்ந்துள்ளது. உக்ரைன் ரஷ்யா போர் நிமித்தமாக விநியோக பற்றாக்குறையுடன் தொடர்ந்தும் பதற்ற நிலையிலுள்ளது.

இந்த வெளிப்புற பாதிப்புகளால் லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் அதன் சில்லறை விற்பனை விலைகளை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் டீசல் லீற்றருக்கு ரூ. 75 ஆகவும் பெற்றோல் லீற்றருக்கு ரூ. 50 ஆகவும் உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 07 நாட்களில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை நாணயம் ரூ. 57 ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த வீழ்ச்சியானது எரிபொருள் கொள்வனவு விலையை நேரடியாக பாதித்து லீற்றருக்கு நிகரான தொகையை உயர்த்தியுள்ளது. ரஷ்யாவை தனிமைப்படுத்தவும் உலக எண்ணெய் சந்தைகளிலிருந்து அதை துண்டிக்கவும் மொஸ்கோவின் படையெடுப்புக்கு பல பொருளாதார தடைகள் மூலம் மேற்கத்திய நாடுகள் பதிலளிப்பதால் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் அதிகரித்து வருகின்றன.

இதனால், தற்போதைய சர்வதேச விலைகளை கருத்தில் கொண்டு நமது நிறுவனத்தின் நஷ்டத்தை குறைப்பதற்கு எரிபொருளின் விலையை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பது வேதனையான உண்மை என்று லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் நிர்வாக இயக்குனர் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார்.

## 11 கட்சிகளை இணைத்து...

அவர் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொழும்பு மாவட்ட மாநாடு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டும் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அனைத்து தொகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன் ஊடாக கட்சியை பலப்படுத்தி அடுத்த பயணத்தை வெற்றிகரமாக தொடர்வோம்.

நாட்டில் இன்று பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதில் முதலாவது அரசாங்கத்திற்குள் காணப்படும் பிரச்சினையாகும். மற்றையது நாட்டிலுள்ள ஏனைய பிரச்சினைகளாகும். சுதந்திர கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தனித்து பயணிப்பதற்கு தயாராகவே உள்ளனர். எனவே தான் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தொகுதிகளையும் பலப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு முன்னர் அரசாங்கம் தேர்தலை நடத்தவில்லையெனில் தேர்தலை நடத்தும் தீமானத்தை ஆணைக்குழுவால் எடுக்க முடியும்.

எனவே தேர்தல் எந்த சந்தர்ப்பத்தில் நடத்தப்பட்டாலும் அதனை தனித்து எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் வேறு. அரசாங்கம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் வேறு.

அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் நாடு சீரழிவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது. மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக பதவிகளை துறந்து வீதிக்கு இறங்கி போராடவும் நாம் தயாராகவே இருக்கின்றோம்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்பு வழங்க தயார். எனினும் அதற்கு சர்வகட்சி மாநாடு கூட்டப்பட வேண்டும் என்பதை தெளிவாக வலியுறுத்தியிருந்தோம். அதற்கான நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

நாடு தற்போது 88 பில்லியன் டொலர் கடன் சுமையிலுள்ளது. வருமானத்தை விட 116 சதவீதம் கடன் தொகை அதிகரித்துள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் கடன் மேல் கடன் பெற்று வீதிகளை அபிவிருத்தி செய்வது பிரயோசனமற்றது. காரணம் இதன் ஊடாக பல மோசடிகளே இடம்பெறுகின்றன.

அவை தொடர்பில் தேவையேற்படின் எதிர்காலத்தில் நாட்டுக்கு வெளிப்படுத்துவோம். நாட்டின் தற்போதைய பாரதூரமான நெருக்கடி நிலைமை மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். பிரச்சினைகளை மறைத்து வைத்திருப்பதன் மூலம் தீர்வைக் காண முடியாது.

11 கட்சிகளுடனான அரசியல் செயற்பாட்டை இடை நிறுத்தாது தொடர்ந்தும் முன்னெடுப்போம். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையில் பாரிய கூட்டணியை அமைத்து முன்னோக்கி பயணிப்போம் என்றார்.

## நிதி அமைச்சர் உண்மை...

தற்பொழுது விசேட நிலைமை ஒன்று உருவாகியுள்ளதால் அவர் வந்து விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது. தினப்பணிகளை தொடர்ந்து ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்த அவர், டொலர் விலை 260 ஆக அதிகரித்துள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகளவு உயர்ந்துள்ளன. இந்த நிலைமை குறித்து நிதி அமைச்சர் பாராளுமன்றத்திற்கு தெளிவு படுத்த வேண்டும். எரிபொருள் விலை அதிகளவு உயர்ந்துள்ளது. மக்களின் அன்றாட வாழ்வுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் நடக்கும் பொருளாதார மாற்றங்கள் தொடர்பில் தெளிவான விபரத்தை நிதி அமைச்சர் வழங்க வேண்டும். பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் கூட அமைச்சர்கள் பாராளுமன்றம் வந்து விளக்கமளிக்கின்றனர். நிதி அமைச்சர் நாட்டு நிலை குறித்து விளக்கினால் எமக்கு விவாதம் கோரலாம். பொருளாதாரத்தில் விசேட நிலைமை ஏற்பட்டுள்ளது. அனைத்து பொருட்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. இத்தகைய நிலையில் நிதி அமைச்சர் ஒரு வசனம் கூட பேசாதிருக்கிறார். வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் அவர் பாராளுமன்றம் வரவில்லை. பாராளுமன்றத்திற்கு வந்து நிலைமை குறித்து விளக்க வேண்டும் என்றார்.

## ஊடகங்களுக்கு தணிக்கை...

மேற்கொண்டார். அமைச்சரவை முடிவுக்கமைய மக்கள் கருத்து பெறப்பட்டதோடு 22 பேர் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

2002 இல் குற்றவியல் சட்டத்தை நீக்க முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்த முடிவு ஊடகத்துறையில் வரலாற்று முக்கியமான முடிவாகும். ஜனாதிபதி உள்ளிட்ட சகல தரப்பும் இணைந்து தணிக்கை எமது முடிவல்ல என்று முடிவு செய்துள்ளனர். தணிக்கையன்றி மேற்பார்வை தான் எமது கொள்கையாகும். சிவில் அமைப்புகளுடன் இணைந்து மேற்பார்வை செய்யக்கூடிய வழிமுறையையே மேற்கொள்ள இருக்கிறோம் என்றார்.

இடையீட்டு கேள்வி ஒன்றை முன்வைத்த கயந்த கருணாதிலக்க எம். பி, சுய தணிக்கை போக்கை தான் நாமும் பின்பற்றினோம். இலங்கை பத்திரிகை பேரவை நீண்டகாலமாக செயற்படுகிறது. ஊடக சுதந்திரத்துக்கு தடை போடும் இடமாகத் தான் ஊடக அமைப்புகள் இதனை கண்டன என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டளஸ் அழகப்பெரும, பத்திரிகை பேரவையன்றி ஊடகப் பேரவை ஒன்றை கொண்டுவரவே யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கு தொழில்சார் ஊடகப் பயிற்சி வழங்கும் இடமொன்று இது வரை கிடையாது. 08 பல்கலைக்கழகங்களில் ஊடக பாடநெறி உள்ளது. உயர்தரத்தில் பாடம் உள்ளது. ஆனால் அதற்கான தனியான நிறுவனம் கிடையாது. வரலாற்றில் முதன் முறையாக பட்டய ஊடக கற்கைக்கான நிறுவனமொன்றை ஆரம்பிக்க இருக்கிறோம். இதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. செப்டம்பர் மாதமாகும் போதும் இந்த பட்டய ஊடக நிறுவனம் உருவாக்கப்படும்.

பட்டய பொறியியலாளர் போன்று பட்டய ஊடகவியலாளர் உருவாகுவார். அவர்களுக்கு தொழில்சார் அறிவை வழங்க இருக்கிறோம். தனிநபர்களின் தனித்துவத்தை மீறாது எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து ஆராயப்படுகிறது. பத்திரிகை ஆசிரியர் சங்கம் போன்ற பல அமைப்புகளுடன் இணைந்து இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது என்றார். (பா)

## பேரீச்சம்பழம் இறக்குமதிக்கான...

வெளியிடப்பட்டது.

இந் நிலையில் பேரீச்சம் பழம் தடையினால் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள்குறித்து நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து, அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக பணிப்புரை வழங்கியுள்ளார். இதன்படி விரைவில் புதிய வர்த்தமானி வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பில் தினகரனுக்குக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், முஸ்லிம்களின் உணர்வுகளை உணர்ந்த தலைவர் என்ற வகையில் இந்த விடயத்தை முஸ்லிம் எம்.பிக்கள் கூட்டாக பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்றோம். ரமழான் காலத்தில் பேரீச்சம் பழம் தடையால் முஸ்லிம்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் பற்றி அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது. அவர் எம்முடன் அமர்ந்து நோன்பு துறந்திருக்கிறார். அவர் நிதி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு பேரீச்சம் பழம் தடையை நீக்குமாறு பணித்ததாக குறிப்பிட்டார்.

பிரதமருடனான சந்திப்பில் நீதி அமைச்சர் அலி சப்ரி, இஷாக் ரஹ்மான், எம்.எஸ்.தௌபீக், அலி சப்ரி ரஹீம், எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் காசிம், எம்.முஷர்ரப் ஆகியோர் கலந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு பள்ளிவாசல்களுக்கு தருவிக்கப்படும் பேரீச்சம் பழத்துக்கான வரி அறவிடாதிருக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டதாக தெரிவித்த அவர், அதற்கும் உடன்பாடு காணப்பட்டதாக குறிப்பிட்டார்.

இதேவேளை பேரீச்சம் பழம் தடை தொடர்பில் அமைச்சர் அலி சப்ரியிடம் வினவிய போது. இதனால் ஏற்படும் தாக்கம் குறித்து தனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும் இதனையடுத்து நீதி அமைச்சரின் கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். விரைவில் புதிய வர்த்தமானி வெளியாகும் என்றும் தெரிவித்தார். (பா)

## பணியகச் சட்டத்தை...

அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைமை அலுவலகத்திற்கு நேற்று (11) முற்பகல் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு உரிமம் பெற்றவர்களின் பொறுப்புகள் உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றனவா, என ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தை மீறிய முகவர்கள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக 2,832 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இதன்போது ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்தே அவர்களை உடனடியாக கறுப்புப் பட்டியலில் ஆவணப்படுத்தி, சட்டத்தை அமுல்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

வெளிநாட்டுத் தொழிலாளர்களின் தொழில்சார் திறன்கள், அதிக சம்பளம் மற்றும் தொழில் பாதுகாப்புக்கு வழிவகுக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உள்நாட்டு பொருளாதாரத்திற்கு பங்களித்து, அனைத்து தரப்பினரதும் நலன்களை பாதுகாக்கும் அதேவேளையில், வெளிநாட்டு தொழில் சந்தையின் சிறந்த பலன்களை மக்கள், தங்கள் திறமைக்கு ஏற்ப பெற்றுக் கொள்ளக்கூடிய திறமையான மற்றும் சமமான வழிகளை உருவாக்குவதே “இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின்” பணியாகும்.

வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல், வெளிநாடு செல்வோரின் பயிற்சி மற்றும் பதிவு செய்தல், சமரசம், நலன்புரி, சட்ட விவகாரங்கள், சந்தைப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி ஆகியவை நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளாகும்.

திறமையான மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கண்டறிவது என்பது, உலகெங்கிலுமுள்ள தொழில் வழங்குனர்கள் மற்றும் வேலைவாய்ப்பு முகவர்கள் எதிர் கொள்ளும் ஒரு பிரச்சினையாகும். இத்தகைய பின்னணியில், திறமையான, நேர்மையான மற்றும் பயிற்சிபெற்ற தொழிலாளர்களை வழங்குவதற்கான புகலிடமாக இலங்கை நற்பெயரைப் பெற்றுள்ளது.

இலங்கை மருத்துவம், பொறியியல், கணக்கியல், கட்டடக்கலை, கற்பித்தல், சட்டம், வங்கியியல், ஹோட்டல் மற்றும் உணவகம், தாதியர் மற்றும் கணினி உட்பட பல்வேறு துறைகளில் பயிற்சிபெற்ற பணியாளர்களைக் கொண்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக நிபுணத்துவம் வாய்ந்த மற்றும் திறமையான தொழிலாளர்களை வழிநடத்தும் தேசிய வேலைத்திட்டத்தில் பணியகம் அடைந்துள்ள முன்னேற்றங்கள் ஜனாதிபதியின் அவதானத்துக்கு கொண்டு வரப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் பெறப்படும் பரிமாற்றங்களினால் தேசிய வருமானத்திற்கு உயர் நிதி மாற்று விகித பங்களிப்பு கிடைப்பதாக அதிகாரிகள் சுட்டிக் காட்டினர்.

தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் பணி இடங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விரைவாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதியின் விசேட கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

வெளிநாட்டுத் தொழிலாளர் சமூகம் மற்றும் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட 24 மணி நேரமும் செயற்படுகின்ற, தகவல் சேவை குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அந்த நாடுகளில் பணிபுரியும் வெளிநாட்டவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தூதரகங்களில் உள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் பங்களிப்புடன் நாடளாவிய ரீதியில் உள்ள தொழில் சந்தைத் தொடர்பில் பொதுமக்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக பணியகத்தை ஜனாதிபதி பாராட்டினார்.

பணியக கட்டிடத்திலுள்ள அனைத்து பிரிவுகளையும் பார்வையிட்ட ஜனாதிபதி, அதிகாரிகளை ஊக்குவித்ததோடு, சேவைகளை பெற்றுக்கொள்ள வந்திருந்த மக்களிடமும் விபரங்களைக் கேட்டறிந்துகொண்டார். தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுக்களின் செயலாளர்கள், பணியகத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## இலங்கையின் ...

(03ஆம் பக்கத் தொடர்)

மற்றும் கைத்தொழில் வலயங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

மொத்த வலுசக்தி உற்பத்தியில் 70 சதவீதங்களைப் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து பெறுவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55ஆவது வருடாந்த மாநாடு, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி முதல் 08ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்காக இலங்கையைத் தெரிவு செய்தமை தொடர்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்த ஜனாதிபதி, அதனைச் சிறப்பாக நடத்துவதற்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் ஹருதோ தகிமுரா (Haruto Takimura), வதிவிடப் பணிப்பாளர் சென் சென் (Chen Chen), பணிப்பாளர் நாயகம் கெனெச்சி யோகொயாமா (Kenichi Yokoyama), செயலாளர் முஹம்மட் எஹ்சான் கான் (Muhammad Ehsan Khan), பிரதி வதிவிடப் பணிப்பாளர் உத்சவ் குமார் (Utsav Kumar), ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் அபேசேக்கர ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## நாட்டின் பொருளாதார...

(03ஆம் பக்கத் தொடர்)

அடுத்த கட்சித் தலைவர் கூட்டத்தில் இது பற்றி பேசலாம். நேற்று 05 மணிநேரம் எரிபொருள் பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது. நாம் பதில் வழங்காமலோ விவாதம் நடத்தாமலோ செல்லவில்லை. சர்வதேச நிலைமைகளால் உலகில் அனைத்து நாடுகளிலும் எரிபொருள் பிரச்சினை உள்ளது. நிதி அமைச்சர் வரவேண்டும் என்று கேட்டனர். விவாதம் நடத்த வேண்டும் என்றால் வழங்கத் தயார். லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி குறிப்பிடுகையில் அமைச்சர் ஒருவரை பாராளுமன்றத்திற்கு அழைக்க நிலையியற் கட்டளையில் எந்த பிரிவும் கிடையாது. அத்தகைய நிலையில் சபாநாயகர் உகந்தது என்று கருதினால் அழைக்க அதிகாரம் உள்ளது. அமைச்சர் தினேஷ் குணவர்தன இதற்கு பதிலளிக்கையில் , அமைச்சர் ஒருவரை அழைக்க சபாநாயகருக்கு முடியும். ஆனால் எதிரணி கோரும் அமைச்சரை எவ்வாறு அழைத்து வரலாம். கேள்விக்கு பதில் வழங்க கால அவகாசம் கோரலாம். அமைச்சருக்கு பதில் வழங்காமல் கூட இருக்கலாம். நிதி அமைச்சர் சார்பிலே இராஜாங்க அமைச்சர் பதில் வழங்கினார். எரிசக்தி அமைச்சர் பதில் வழங்கியதாக குறிப்பிட்டார். மீண்டும் அநுர குமார திசாநாயக்க எம்.பி குறுக்கீடு செய்து, பொருளாதாரத்தில் விசேட நிலைமை ஏற்பட்டுள்ளது. அனைத்து பொருட்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. இத்தகைய நிலையில் நிதி அமைச்சர் ஒரு வசனம் கூட பேசாதிருக்கிறார். வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் அவர் பாராளுமன்றம் வரவில்லை. பாராளுமன்றத்திற்கு வந்து நிலைமை குறித்து விளக்க வேண்டும் என்றார்.

## காலத்துக்கு காலம் எடுக்கும்...

(03ஆம் பக்கத் தொடர்)

குழுவின் அவதானம் செலுத்தப்பட்டது. மேலும், இதே நோக்கத்திற்காக அவ்வாறான நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்கு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு இக் காலப் பகுதியில் 2,146.82 மில்லியன் ரூபா பணம் செலுத்தியமை தொடர்பிலும் குழு வினவியது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் மானிய விலையில் ஒளிப்பதிவு செய்வதால் இந்தக் கலையகம் தேவையில்லையெனவும், அதனை கேட்போர் கூடமாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும் அபிவிருத்தி லொத்தர் சபையின் அதிகாரிகள் இங்கு தெரிவித்தனர்.

இதன்போது கோப் குழுவின் தலைவர் கருத்துத் தெரிவிக்கும் போது, வெவ்வேறு தலைவர்கள் மற்றும் பணிப்பாளார் சபைகளின் தேவைக்கு ஏற்ப இவ்வாறான திட்டங்களை ஆரம்பிப்பதால் பாரிய நிதி முறைகேடாக பயன்படுத்தப்படுவதாகவும், அவ்வாறான திட்டங்கள் முறையாக உள்வாங்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இது தொடர்பில் முறையான அறிக்கையொன்றை அமைச்சின் செயலாளர் ஊடாக குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் தலைவர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக வொக்ஷோல் வீதியில் இலக்கம் 234 எனும் கட்டடத்தை வாடகை அடிப்படையில் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தை அபிவிருத்தி லொத்தர் சபையினால் ஒருதலைப்பட்சமாக மீறியதால் சபைக்குக் கிடைக்கவேண்டிய 57,00,000 ரூபாய் நிதியை 14 ஆண்டுகளாக அறிவிட முடியாமல் இருப்பது தொடர்பிலும் குழுவின் அவதானம் செலுத்தப்பட்டது. அபிவிருத்தி லொத்தர் சபை வர்த்தக அமைச்சின் கீழ் இருந்த போது மேற்படி கட்டடம் வர்த்தக அமைச்சினால் வாடகைக்கு எடுக்கப்பட்டதாகவும், தமது சபைக்கு கட்டடம் தேவைப்படுவதால் மேற்படி கட்டடத்தை பெற்றுக்கொள்ளுமாறு அமைச்சு அறிவித்ததாக சபை அதிகாரிகள் தெரிவித்தனர். அதன்படி, அமைச்சின் இடைக்கால குத்தகையின் கீழ் இந்தக் கட்டடத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சபையினால் இந்தக் கட்டடத்தை பயன்படுத்தும் போது மேலதிக நிதி செலவிடப்படுவதால் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ததாகவும், கட்டடத்துக்கான அடிப்படை கட்டணம் வர்த்தக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் இங்கு புலப்பட்டது. அதற்கமைய உரிய நிதியை பெற்றுக் கொள்வது தொடர்பில் அமைச்சின் செயலாளரின் அவதானிப்புக்களை கோரியுள்ளதாகவும் இதற்காக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் தற்பொழுது கிடைத்துள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. 2015 மே மதம் 25 ஆம் திகதி இலக்கம் பி.ஈ.டி/01/2015 எனும் அரசாங்க முயற்சியாண்மை சுற்றுநிருபத்துக்கு அமைய தகைமைகளை பூர்த்தி செய்யாத போக்குவரத்து உரிமை அற்ற அதிகாரிகள் 08 பேருக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை ஒதுக்கியமை மற்றும் எரிபொருள் மணியத்துக்காக 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் 2,590,545 ரூபா நிதி வழங்கியமை தொடர்பில் கோப் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான சரத் வீரசேகர, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் நாளக கொடஹேவா, பாராளுமன்ற உறுப்பினர்களான சுசில் பிரேமஜயந்த, ஜகத் புஷ்பகுமார, சம்பிக்க ரணவக்க, ஹர்ஷ டி சில்வா, ஈரான் விக்கிரமரத்ன, மதுர விதானகே, பிரேம்நாத் சி. தொலவத்த மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## ஐ.ஓ.சி போன்று ஏனைய...

வெளிநாடுகளில் இடம்பெறும் சம்பவங்களுக்கு தம்மால் தலையீடு செய்ய முடியாது எனவும் அவர் கூறினார். உள்நாட்டில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு எவ்வாறேனும் தீர்வொன்று பெற்றுக்கொடுக்கப்படுமென நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார்.

## விமான பயண கட்டணம்...

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையே இதற்குக் காரணமென அதன் தலைவர் உபுல் தர்மதாச சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கி நேற்று முன்தினம் வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 259.99 ரூபாவாக அதிகரித்துள்ளது.

## கோதுமை மா விலை...

இதேவேளை, ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 40 ரூபாவால் அதிகரிப்பதாக பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளதாக விற்பனை முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

## முச்சக்கர வண்டிகள் ...

கட்டணமும் இரண்டாவது கிலோ மீற்றர் தூரத்துக்கு 60 ரூபா கட்டணமும் அறவிடப்படும் என அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக ஐ.ஓ.சி நிறுவனம் மட்டும் எரிபொருள் விலையை அதிகரித்திருக்கிறது. அடுத்ததாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருள் விலையை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## திருகோணமலை, சம்பூரில்...

சில ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தில் புதிய புதுப்பிக்கத்தக்க மின் நிலையம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அரசாங்கத்தின் தற்போதைய 50 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க மின் நிலைய முயற்சியின் கீழ் இந்த சோலார் பார்க் திட்டம் வராது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. என்.ரி.பி.சி லிமிடெட் இந்தியாவின் மிகப்பெரிய மின் உற்பத்திப் பயன்பாடாகும், இந்தியாவில் ஒட்டுமொத்த மின் உற்பத்தி 60,000 மெகாவாட் ஆகும். இந்நிலையில் சர்வதேச சோலார் கூட்டணியின் கீழ் குறித்த புதிய சூரிய சக்தி பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எதிரணிகள் நிபந்தனையற்ற ...

இது நெருக்கடியான கால கட்டம், எனவே, தேசிய அரசு என்பதற்கு அப்பால் எதிரணிகள் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டும். பிரிட்டன் போன்ற நாடுகளில் அவ்வாறு நடக்கின்றன. பிற நாடுகளில் அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்பட்டது. ஆனால் நாம் அவ்வாறு செய்யவில்லை. எனவே ,நெருக்கடி நிலைமையை நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும். நாட்டின் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு நல்லாட்சி அரசும் பொறுப்புக்கூறவேண்டும்" என எஸ்.பி. திஸாநாயக்க. தெரிவித்தார்.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்

## பாவம் ஆட்டை விட்டுவிடு



கழுத்தறுத்துத் தோலுரித்து கச்சிதமாய் வெட்டிக்
கொழுப்பகற்றிக் கூறிட்டப் பின்னால் கழுவி
அடுப்பேற்றி உண்கின்ற ஆசைக்கு ஆடு
கொடுக்கும் அறியா கழுத்து.

நேர்த்தி எனும்பேரில் நீவளர்த்த ஆடொன்று
கீர்த்தி அடையு மெனும்போர்வை போர்த்திக்
கழுத்தறுக்கும் காதகத்தைச் செய்யக் கடவுள்
அழுவான் தெரியா துனக்கு

பலியாலே துன்பம் சரியாகு மென்றால்
பலியாகு நீயே! முடிந்தால் புலியொன்றைக்
காட்டில் துரத்திப் பலிகொடு . ஏமாந்த
ஆட்டை அறுத்தல் தவிர் .

மாமிச முண்ணும் மறைமுக ஆசைக்குச்
சாமியை காரணம் சொல்லியே பூமியில்
வாயில்லா ஜீவன் வளர்த்ததை வெட்டுகின்ற
ஆயுதத்தை இன்றே அழி.

எந்தக் கடவுள் எனக்கு இதுவேண்டும்
தந்திடு என்றே உனைக்கேட்டான்? தந்திரமாய்
அந்தக் கடவுள் பெயராலே ஆடறுக்கும்
உந்தன் மனதிடம் கேள்.

உன்னுயிர் மேலென்று ஓடோடிச் சென்றிங்கே
இன்னோர் உயிரை பலிகொடுக்கும் முன்னே
பலியாகும் பாவ உயிரின் மனதை
மலிவாக எண்ணல் விடு.

மெய்யன் நடராஜ்

## தனிமையின் காதல்



அழகு உலகில்
அளவு கடந்த
ஏமாற்றங்கள் என்னுள்.

எழுந்து போக
வழிகளில்லை வலிகளைத்
தவிர.

ஆசை வார்த்தைகளால்
அலங்கரிக்கப்பட்டவன் என்பதால்
ஆசைகளாகவே பொய்
விடுகின்றது இன்று
வரை.

வலிகளுக்கு அப்பால்
விழிகளில் எதுவும்
தெரியவில்லை இன்றும்.

மௌனங்களால் வரையப்பட்ட
தனிமைகளுடன் காலம்
கடந்து செல்கிறது
ஏமாற்றங்களை ஏந்தியபடி.

விழித்திருந்தால் வழி
எதுவும் தெரியவில்லை
எனக்குள் வந்து
போன வலிகளைத்
தவிர.

வழிகளை விட
வலிகளுக்கே இங்கு
கோள்விகள் அதிகம்
என்பதால் எவ்
வழி(லி) கிடைக்கப்
போகிறதோ என்று
ஏங்கியபடி நானிருக்கிறேன்
தனிமையில்.

பொத்துவில் அஜ்மல்கான்

## எனது கதை சொல்லி



எனது தூரிகை வரைந்த
ஓவியங்கள்
உன் கதையும் சொல்லும்
என் கதையும் சொல்லும்
பேசாத ஓவியங்கள் கூட
கண்ணுக்குள் கதை சொல்லும்

ஒற்றைக் கோடு கிழித்தாலும்
அர்த்தமுள்ளதாகவே தெரியும்
கோடுகளுக்குள் புதைந்திருக்கும்
புதிர்களோ ஏராளம்
சிந்தனைக்கு வராத பல கதைகள்
என் தூரிகைக்குள் புகுந்திருக்கும்

அந்திப் பொழுதில் அமர்ந்திருந்து
தூரிகை பிடித்ததால் மனவோட்டம்
சிறகடித்துப் பறக்கின்றது
ஆயிரம் கதைகள் அதனுள்ளே
காற்றினுள் கலந்து வரும் காட்சிகள்
கதை கதையாய் கொட்டுகிறது

பார்வைக்குப் பல காட்சிகள்
ஒவ்வொன்றும் பலகதை சொல்லும்
கடந்து போன காலங்கள் கூட
நிறையவே கதை சொல்லும்
என் கைக்குள் சிக்கிய
தூரிகை கூட ஒரு கதை சொல்லியே

கலாபூஷணம் ஈழத்து நூன்

## என் இரட்சகனால்!

அல்லாஹ்வின் அருட்கொடையில்
அனுதினமும் நனைகின்றேன்.
அன்பானவன் துணையோடு
அருள் பலதும் அடைகின்றேன்.

நிரந்தரமற்ற வாழ்வதிலே
நிலையானவனை வணங்குகின்றேன்
நிதர்சனங்கள் அவனாலே
நிம்மதியாய் உறங்குகின்றேன்.

தொழுகையின் உரையாடலில்
அமைதியை உணர்கின்றேன்.
குர்ஆனை கற்கையிலே
மன அமைதி தெளிகின்றேன்

இயற்கையை ரசிக்கையிலே
அவன் அற்புதங்களை காண்கின்றேன்.
படைப்பாளன் உயிரினங்காளலே
பல அறிவும் பெறுகின்றேன்.

இறைநேசர் பலராலே
அனுதினமும் இன்புறுகின்றேன்.
இறையச்சம் கொள்கையிலே
பல பாவம் தடுக்கின்றேன்.



இவையாவும் என் வாழ்வில்
என் இரட்சகனால் பெறுகின்றேன்.
இறுதி மூச்சுவரை அவனுக்காய்
என் நாளும் வாழ்கின்றேன்.

அப்துல் வாஹித்
பாதிமா முனீரா.
சில்மியா புர.

## பாவங்கள்



ஓரிறைவன்
ஓர்கொள்கை
யாவற்றுக்கும்
அவனே! தலைவன்
தலைவன் கட்டளை
மீறப்பட்டபோது
அனர்த்தங்கள்
தோன்றின!

சுனாமி சோகங்கண்டும்
கொரோனா வலிகண்டும்
திருந்தவில்லை மனிதம்
சூத்திரமின்றிய
விலையேற்றம்
சுதந்திரமாய்
சிக்கித் தவிக்கும்
மக்களோ! பரிதாபம்!

வயலும் விளைவைக்
காட்டவில்லை
சேதனப்பசளைகளின்
விசிறலும்
இதற்குத்துணை

சமையல் பொருட்கள்
மலையேறும் நிலை
ஒருவேளை
சோற்றையும்
காணா நிலை!
உள்ளவனும் கொடுக்கத்
தயாரில்லை
உறவுகளும் எட்டிப்
பார்க்கா நிலை!

பல்வேறுபெயர்கள்
கொரோனாவுக்கும்

## உழவன்



உலகம் கண்டுகொள்ளாத
உத்தமன்
உலகத்தார் பசி தீர்க்கும்
வல்லள்
ஏழ்மையை தன்
உடைமையாய்
விரும்பி ஏற்ற மகான்
காடு கடம்பை கானகத்தை
கரங்கள் காய்க்க
கழனியாக்கி
நீர் செல்லா
காய்ந்த நிலத்தை
கால்வாய் அமைத்து
நிலத்தாகம் தீர்த்து
செழுமையாக்கி
போகம் ரெண்டு
செந்நெல் விதைத்து
பாசத்தோடு நித்தம்
சென்று உறவாடி
பசி போக்கி
பிணி தீர்த்து வளர்த்திட்ட
பயிர்களை
விளைச்சல் கனவுடன்
அறுவடை செய்தபோது
பாற்கஞ்சி சிறுகதை
நிஜமாகியது.
பார் போற்ற வேண்டியவன்
பரதேசி போன்று
பார்ப்பவரின்றி
பதறாகிறான்
சமூகத்தில்
கடன்காரன் எனவும்
ஏழை எனவும் முத்திரை
பொறிக்கப்பட்டு
நடமாடும் வரை
மண்வெட்டி துணையாய்
கூன் விழுந்து
படுக்கையில் கிடக்கையில்
தடியுடன் நடப்பிணமாய்.
சேவைக்கோ எதுவித
பென்சனுமின்றி
அன்னமளந்தவன்
அன்னத்திற்காய் படும்பாடு
பார்க்காதவருக்கு
எப்படி புரியும்
அரசே!
விவசாயினையும் கொஞ்சம்
சீர் தூக்கிப் பார்
ஓய்வின் போது.

தோப்பூர்

முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர் குறாப் நிருபர்

## புதிய பெயர்கள் வருவதோ திடுக்கம்

பால்மாவுக்கும்
பெரும் தட்டுப்பாடு
பரிதவிக்கும்
குழந்தையோ
பரிதவிப்பு
மரக்ககறி
விலையும்
உயர்ந்து போச்சு
மன்னரே மக்களை
காப்பாற்று!

ஒவ்வொரு கடையிலும்
வெவ்வேறு விலை
விரும்பினால் எடுங்கள்
என்கின்றனர்
யார் செய்த பாவமோ
தெரியவில்லை
பாரின் போக்குமே
புரியவில்லை!

தோப்பூர் எஸ் சிராஜ்தீன்
நற்பிட்டிமுனை, கல்முனை.


திகதி 10.03.2022 வியாழககிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4702
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,711,930.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 5 8 3 5 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 12,174,201.00

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1050
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,648,380.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 240,689,862.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து J சுப்பர் இலக்கம் 13 வெற்றி இலக்கங்கள் 10 39 40 58

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 732
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,652,420.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 04 19 54 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 101,637,649.60

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416




# கச்சதீவு நோக்கி இந்திய பக்கதர்கள் வருகை





**யாழ். விசேட நிருபர்**

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் பங்கேற்க இந்திய பக்தர்கள் 80 பேர் ராமேஸ்வரம் மீன்பிடிதுறை முகத்தில் இருந்து புறப்பட்டுள்ளனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நேற்றும் மற்றும் இன்றும் நடைபெறவுள்ளது.

அதில் பங்கேற்க 80 பக்தர்கள் மூன்று விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டுப் படகில் கச்சதீவுக்கு புறப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி தேர் பவனி, பிராத்தனைகள் நடைபெற்று, இன்று காலை இலங்கை இந்திய பங்கு தந்தைகளின் கூட்டு திருப்பலியுடன் திருவிழா நிறைவடையவுள்ளது.

# கச்சதீவில் சினேகபூர்வமான பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவே விரும்புகிறோம்

**யாழ். விசேட நிருபர்**



இந்திய கடற்றொழிலாளர்களுடன் கச்சதீவில் சினேகபூர்வமான பேச்சுவார்த்தை ஒன்றையே நடத்த விரும்புகின்றோமென யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன உபதலைவர் நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலாளருக்கு கச்சதீவு செல்வதற்கான கோரிக்கை கடிதத்தை கொடுத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவுக்கு இந்திய கடற்றொழிலாளர்களும் வருகிறார்கள் என்பதால் அமைச்சர் மட்டத்தில் பேசி இந்திய கடற்றொழிலாளர்களுடன் சினேகபூர்வமாகப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள நாங்கள் தீர்மானித்தோம்.

அதனால் 10 கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளின் பெயர் விவரங்களை நாம் யாழ் மாவட்ட செயலாளரிடம் கையளித்துள்ளோம். கச்சதீவுக்கு செல்வதற்கான மட்டுப்பாடுகள் காணப்படுவதால் தான் இதனை கடற்படையிடம் கையளிப்பதாகவும் தொலைபேசி மூலம் எங்களுக்கு பதில் கிடைக்கும் என்றார். அனுமதி கிடைக்கும் பட்சத்தில் கச்சதீவுக்கு சென்று இந்திய கடற்றொழிலாளர்களுடன் ஒரு சிநேகபூர்வமான பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த தயாராக உள்ளோம்.

இந்திய கடற்றொழிலாளர்களும் இலங்கை கடற்றொழிலாளர்களும் பேச்சுவார்த்தை நடத்தி எந்தவித ஒரு முடிவையும் எட்டமுடியாது. இந்திய இலங்கை கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு இருநாட்டு அமைச்சர்களும் பேசியே ஒரு முடிவுக்கு வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மின்சார வயர் அறுந்து வீழ்ந்ததில் கணவனும், மனைவியும் பலி

**கரவெட்டி தினகரன் நிருபர்**

மின்சார வயர் அறுந்து தொட்டி நீரில் மின்சாரம் பாய்ந்ததில் மனைவியும் அவரைக் காப்பாற்றச் சென்ற கணவரும் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மதியம் புத்தூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது, கடந்த புதன்கிழமை மாலை வாழைக்குலையை கணவர் வெட்டியபோது தண்ணீர் இறைக்கும் மோட்டாருக்கு சென்ற மின் வயர் அறுந்தது. இதை அவர் சரி செய்த பின்னர், மனைவி தொட்டியிலிருந்த தண்ணீரில் நீராட ஆயத்தமானபோது மின்சாரம் தாக்கியுள்ளது. அவரின் அபயக் குரல் கேட்டு கணவர் காப்பாற்றச் சென்றுள்ளார். அவரும் மின்சாரத்தால் தாக்குண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக கூறப்படுகின்றது. இச்சம்பவத்தில் வீட்டில் வேறு எவரும் இருந்திருக்கவில்லை. இந்நிலையில், அவர்களது மகள் பல்கலைக்கழகத்துக்கு சென்று வீட்டுக்குத் திரும்பியபோது தாயும் தந்தையும் இறந்து கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

மாசிலாமணி சிவப்பிரகாசம்(வயது 59), மாசிலாமணி நகுலா (வயது 55) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

சம்பவ இடத்துக்கு சென்ற அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# குருநகர் வடகடல் நிறுவனத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

**பருத்தித்துறை விசேட, கோப்பாய் குறூப் நிருபர்கள்**

யாழ்ப்பாணம் குருநகர் வடகடல் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இரு வாரங்களில் தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாககடற்றொழில்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடகடல் நிறுவனத்தில் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஊழியர்கள் , நிர்வாகத்தினரால் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத்தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்து மகஜர் ஒன்றை நேற்று கையளித்திருந்தனர்.

நிறுவனத்திலிருந்து பதாதைகள் தாங்கியவாறு ஊர்வலமாக அமைச்சரின் யாழ் மாவட்ட அலுவலகத்திற்கு வருகைதந்து தமது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சருக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

இதன்போது தமது நிறுவனத்தில் தற்போதுள்ள நிர்வாகம் பாரபட்சமானதும் வினைத்திறனற்றதுமாக இருப்பதால் அதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். தமக்கான மாதாந்த ஊதியங்கள் குறித்த திகதிகளில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறும் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.



ஊழியர்களது பிரச்சினைகளை ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது குறித்து அடுத்த அமைச்சரவையில் கலந்துரையாடி அதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும், அதேநேரம் நிர்வாகத்தில் விரைவில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் ஊதியங்களை பெற்றுத்தருவதற்கான நடவடிக்கையை எடுப்பதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்டம்: பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை குறைவு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பைசர் வழங்கும் இரு வார செயற்திட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் பூஸ்டர் டோஸ் எனப்படும் மூன்றாவது தடுப்பூசியை பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள பிரதேசங்களிலேயே அதிக தொற்றாளர்களும் மரணங்களும் பதிவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

கொவிட்19 நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள சுகாதார பாதுகாப்பு முறைகளை பின்பற்றுவது மட்டுமல்லாது தடுப்பூசியை காலக்கிரமத்தில் பெற்றுக்கொள்வதும் அவசியமாகும். எனினும் கவலைக்கிடமான வகையில் யாழ். மாவட்டத்தில் மூன்றாவது மேலதிக தடுப்பூசியை பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இதுவரை யாழ். மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களில் 25 வீதமானவர்கள் மட்டுமே தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். பூஸ்டர் தடுப்பூசியை கடுமையான நோய்நிலை மற்றும் மரணங்களை குறைப்பதற்கும் உரியகாலக்கிரமத்தில் பெற்றுக்கொள்வது அவசியமாகும். தடுப்பூசியை பெற்றுக்கொண்ட பின்னர் ஏனைய அனைத்து தடுப்பூசிகளுக்கும் ஏற்படுவது போல ஓரிரு நாட்களுக்கு மெல்லிய காய்ச்சல், உடல் வலி என்பன ஏற்படக்கூடும். இந்த அறிகுறிகளை தவிர, பெரும் உடல் பாதிப்புக்கள் ஏற்பட்டதாக ஏதும் பதிவாகவில்லை.

# கடற்படையினர் காணியை விடுவிக்க வேண்டும்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி முழங்காவில் அன்புபுரம் இறங்குதுறையை அண்மித்த பகுதிகளில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள 1197 ஏக்கர் காணியினை விடுவிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதொடர்பான சந்திப்பு நேற்றுமுன்தினம் இறங்கு துறைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இறங்கு துறையை அண்மித்த பகுதியில் கடற்படையினர் தமது கண்காணிப்பு பணிகளுக்காக காணிக்கோரிக்கையை விடுத்து வருகின்றனர். இதற்கு மக்கள் மற்றும் கடற்றொழிலாளர் அமைப்பு என்பன கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன. இச்சந்திப்பின் போது தமது உறுதியான நிலைப்பாட்டினை கடற்படைக்கு எதிராக மக்கள் வெளிப்படுத்தினர். இச்சந்திப்பின்போது கிராம அலுவலர் முழங்காவில் பங்குத்தந்தை பூநகரி பிரதேச சபை தவிசாளர் மற்றும் கடற்படை அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இப்பகுதி மக்களின் பொருளாதார நிலைமைகள் கடந்த காலங்களில் கடற்படையினரின் செயற்பாடுகளால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் என்பன சுட்டிக்காட்டப்பட்டன. யுத்தகாலத்துக்கு முன்னர் மக்கள் குடியிருந்த 1197 ஏக்கர் குடியிருப்பு நிலம் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்திருப்பதாக இச்சந்திப்பில் எடுத்துக்காட்டப்பட்டது.

# யாழில் இருந்தும் கச்சதீவு பயணம்






**யாழ். விசேட நிருபர்**

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா நேற்றும் இன்றும் நடைபெறவுள்ள நிலையில் இலங்கையிலிருந்து கச்சதீவு செல்வதற்காக பொதுமக்கள் குறிக்கட்டுவானில் இருந்து புறப்பட்டனர்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் குறிகட்டுவானிலில் தரித்து நின்ற வடதாரகை மூலம் கச்சதீவு செல்வதற்கான படகு பயணத்தை இலங்கை கடற்படை ஒழுங்கு செய்தது. மதகுருமார்,பக்தர்கள், சுகாதார பணியாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் இப்பயணத்தில் பங்கேற்றுள்ளனர்.

இதேவேளை இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக சிநேகபூர்வமான பேச்சுவார்த்தையை மேற்கொள்வதற்காக வடபகுதியை சேர்ந்த கடற்றொழிலாளர் சங்க பிரதிநிகளும் கச்சதீவுக்கு பயணமாகியுள்ளனர்.











அருந்ததியின் மாற்று மோதிரம் நிகழ்வும், மணப்பெண் அலங்கார கண்காட்சியும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் செல்வா பலேஸ் மண்டபத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா , வடமாகாண பிரதம செயலர் எஸ்.எம். சமன் பந்துலசேன உள்ளிட்டவர்கள் விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர். (யாழ்.விசேட நிருபர்)

# அ/வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயம்

A/WEERACHOLAI MUSLIM MAHA VIDYALAYAM
KEPUOPULLEWA



## நான்கு வகுப்பறைகள் கொண்ட ஒரு மாடி கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு அதிபர் M.I.நதீர் ஹம்ஸாவின் தலைமையில் அமைச்சர் S.M. சந்திரசேன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இஸாக் ரகுமான், M.A.A. நூருல்லாஹ் ஹாஜி ஆகியோரால் நாளை (13) கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளது



அநுராதபுர மாவட்டத்தில் ஹொரவப் பொத்தான தேர்தல் தொகுதியில நான்கு பக்கங்களும் மலைகளால் சூழப்பட்ட ஒரு அழகிய கிராமமே வீரச்சோலை ஆகும்.

அக்கிராமத்தில் அமையப்பெற்ற வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயம் 1958.5.10 ஆம் திகதி அரசினால் அங்கீகரிக்கப்படாத பாடசாலையாக கிராம முன்னேற்ற சங்கத்தின் முயற்சியினால் வைக்கோல் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டது.

1959.02.05ஆம் திகதி ஊர்த் தலைவர்களின் அயராத முயற்சியினால் அரச பாடசாலையாக அங்கீகாரம் பெற்றதுடன் அன்றைய தினம் முஸ்லிம்,சிங்கள மாணவர்கள் 30 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் முதல் அதிபராக S.A.R. ஆர்.சாஹீரும் முதல் ஆசிரியராக UB. தினபாள ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

1966.07.20ஆம் திகதி பாடசாலை அபிவிருத்தி சங்கம், அதிபர் ஆசிரியரின் ஒத்துழைப்புடன் பாடசாலைக்கான முதலாவது நிரந்தர கட்டட (60★20) வேலை ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆரம்பப்பிரிவு வகுப்புகள் மாத்திரம் நடத்தப்பட்டது.1980.06.26 ஆம் திகதி தரம் 6 ஆரம்பிக்கப்பட்டதுடன் பாடசாலை 18 வரை வகுப்பை கொண்ட பாடசாலையாக மாற்றமடைந்து இரண்டாவது நிரந்தர கட்டடம் (80★20) 1991 டிசம்பரில் கட்டி முடிக்கப்பட்டது.

1993 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் ஒரு




மாணவன் சித்தி அடைந்ததுடன் இப்பாடசாலையின் முன்னேற்றத்தின் முதல் கட்டமாக இது அமைவதுடன் இன்று வரை பல மாணவர்கள் சித்தியடைந்து வலயத்தின் முன்னிலை பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. 2007ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய, மாகாண மட்ட தமிழ் தின, ஆங்கில.சமூக, விஞ்ஞான, தேசிய மீலாத் தின போட்டிகளில் கலந்து

கொண்டதுடன் இற்றை வரைக்கும் பல சாதனைகளை ஈட்டி வருவதன் காரணமாக பாடசாலைக்கான மாணவர் தொகை மேலும் அதிகரிக்க இப்பாடசாலைக்கான மூன்றாவது நிரந்தர கட்டடம் (40★20) சத்தார் ஹாஜியார் மூலம் கட்டி முடிக்கப்பட்டது. இந்நிலையில 2009 தொடக்கம் தரம் 09 ஆரம்பிக்கப்பட்டதுடன் மிகச் சிறப்பாக மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்பட்டது இப்பாடசாலையின் கல்வியின் முன்னேற்ற நிலையை கண்டு மாணவர்களின் வருகை



அதிகமாகியதால் இடப்பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் கல்வி நடவடிக்கையை மேற் கொள்வது சிரமமாக காணப்பட்டமையினால் மீண்டும் மனமுவந்து தெகிவளை பாத்தியா மாவத்தையைச் சேர்ந்த அல்ஹாஜ் ஆர்.அப்துல் சத்தாரின் அன்பளிப்பால் 20★20 வகுப்பறைகளை கொண்ட இரண்டு வகுப்பறைகள் மக்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வகுப்பறை மேலும் 20★20 ஆக தொடர்ந்து தற்போது 120★20 வரை நீண்டு சென்றுள்ளதுடன் மாத்திரமன்றி கணினி, அச்சு இயந்திரம், தொலைக்காட்சி, தையல் இயந்திரம் வழங்கியதுடன் இவரது பௌதீக வளப் பங்களிப்பு இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் மெருகூட்டியமையால் இம்மக்களும நன்றி உணர்வுடனேயே இருக்கின்றார்கள். இவ்வாறு வளர்ச்சியடைந்த இப்பாடசாலை தனது கல்வி பயணத்தை மாற்றி இதிகாசத்தில் இடம்பிடிக்க முன்னோக்கி நகரத் துவங்கியது.

2011ஆம் ஆண்டு பாடசாலை வரலாற்றில் முக்கியமான ஒரு காலகட்டமாகும். அக்காலப்பகுதியில் அதிபரான NMA.ரசூலின் தலைமையின் கீழ் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பள்ளி நிர்வாகம், பழைய மாணவர் சங்கம் ஏனைய சமூக அமைப்புகளின் அயராத முயற்சியால் க.பொ.த சாதாரண தரம் பல சவால்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது. போதிய அளவு ஆசிரியர் வள பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 2013ஆம் ஆண்டு வீரச்சோலை கல்வி அபிவிருத்தி சங்கம் உருவாக்கப்பட்டு அந்த சங்கத்தின் மூலமாக வெளி மாவட்டங்களிலுள்ள இளம் பட்டதாரி மாணவர்களின் உதவியுடன் கல்வியில் ஆர்வம் மிக்க பெற்றோர்களின் பங்களிப்புடனும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் வளர்ச்சி கண்ட எமது பாடசாலை 2019, 2020 ஆம் ஆண்டுகளில் 9A சித்திகளைப்பெற்று சாதனை படைத்தது. அத்துடன் தன் வளர்ச்சியை நிறுத்திக் கொள்ளாமல் 2017ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 2019 உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்று முதன் முறையாக இரண்டு மாணவர்களை

பல்கலைக்கழகம் அனுப்பியமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வளர்ச்சி அடைந்துவரும் பாடசாலைக்கு 2020 இல் அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த 25 ஆவது அதிபராக M.I.நதீர் ஹம்ஸா பதவியேற்றமை பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இவரின் வருகைக்குப்பின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ததோடு பௌதீக வளப்பற்றாக்குறையையும் பூர்த்தி செய்வதற்கான முயற்சியுடன் ஈடுபட்டு வருகின்றார்.

தற்போது 26 ஆசிரிய,ஆசிரியைகளுடனும் 419 மாணவர்களுடனும் இரண்டு கல்விசாரா ஊழியர்களுடனும் கம்பீரமாக வீர நடை போட்டுக் கொண்டிருக்கின்றது.2020இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழி மூல பாடசாலைகளிலும் கோட்ட மட்டத்தில் 9A பெற்ற ஒரு பாடசாலையாக திகழ்வதோடு வலய மட்டத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் 9A பெற்ற பாடசாலையாகவும் திகழ்வதற்கு தற்போதைய அதிபர் M.I.நதீர் ஹம்ஸா வழிவகுத்தமை அவர் மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதில் குறிக்கோளாக உள்ளார் என்பதை பறைசாற்றி நிற்கின்றது.


இதற்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் அளப்பரியதொரு சேவையுமாகும். அது மட்டுமன்றி புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றமை க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் கல்வியியல் கல்லூரிகளுக்கு செல்வதற்கும் வழி வகுத்தமை இன்னும் கற்றல் கற்பித்தலிலும் நிருவாக செயற்பாடுகளிலும் சூழலை அழகுபடுத்துவதிலும் மாணவர்களின் ஒழுக்க விடயங்களிலும் கூடுதல் கவனம் செலுத்தி பிரதேசத்தின் முன்னணி பாடசாலையாக திகழ்வதற்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். இருந்த போதிலும் மாணவர்களின் கற்றல் கற்பித்தலுக்கு வகுப்பறைக் கட்டடங்கள் பாரியதொரு பற்றாக் குறையாக இருந்தது. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு குவைத் நாட்டின் பைசல் இப்ராஹிம் இப்ராஹீமின் நன்கொடையுடன் அல்ஹிமா நிறுவனத்தின் செயலாளர் M.A.A. நூருல்லாஹ் ஹாஜியின் அயராத உழைப்பின் பயனாக முன்னாள் அதிபர் M.பரீத் தலைமையில் 2020 இல் M.A.A. நூருல்லாஹ், பாராளுமன்ற உறுப்பினர் இஸாக் ரகுமான் ஆகியோரினால் இரண்டு மாடி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு நிர்மாண பணிகள் நடைபெறுகின்றன.நான்கு வகுப்பறைகள் கொண்ட ஒரு மாடி கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு நாளை (13) அதிபர் M.I.நதீர் ஹம்ஸாவின் தலைமையில் அமைச்சர் S.M. சந்திரசேன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இஸாக் ரகுமான், M.A.A. நூருல்லாஹ் ஹாஜி ஆகியோரால் கோலாகலமாக திறந்து வைக்கப்படுகின்றது.

இருந்த போதிலும் இப்பாடசாலை இன்னும் பல பௌதீக வள குறைபாட்டுடனேயே இயங்கி வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும். இது நிவர்த்தி செய்யப்படுமிடத்து எதிர்காலத்தில் வணிகப் பிரிவு, விஞ்ஞான பிரிவு, கணித பிரிவு என்பன ஆரம்பிக்கப்பட்டு சகல வளங்களுடனும் இப்பிரதேசத்தில் ஓர் சிறந்த பாடசாலையாக திகழும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.



உதவி :
மதார் தம்பி ஆரிப்
அநுராதபுரம்
மேற்கு தினகரன் நிருபர்












# கிழக்கின் குரல்









திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் மூன்றாம் நாள் அம்பாள் ஆலய வெளி வீதியில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் காட்சிகளை படங்களில் காணலாம். (படங்கள்: அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

## டொலர் நெருக்கடியை உள்ளூர் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பாக்கி கொள்ளவும்

- கிழக்கு மாகாண ஆளுநர்



முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்

நாட்டில் தற்போது நிலவும் டொலர் நெருக்கடியை உள்ளூர் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று (10) முற்பகல் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

இன்று நாட்டில் டொலர் தட்டுப்பாடு உள்ளது, அதை மறைக்க எதுவும் இல்லை, ஆனால் இந்த டொலர் நெருக்கடியை உள்ளூர் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பாக பயன்படுத்தலாம். வெளிநாட்டு பொருட்களை நம் நாட்டிற்கு இறக்குமதி செய்ய இவ்வளவு டொலர்களை செலவழித்துள்ளோம். இதனால் நம் நாட்டுப் பொருட்கள் பல அழிந்துவிட்டன.

இப்போது புரிந்து கொள்ள வேண்டும்.நம் நாட்டில் உள்ள பழமரங்கள் அழுகும் போது வெளிநாட்டில் இருந்து வரும் ஆப்பிள், ஆரஞ்சு பழங்களை பார்க்கிறோம். பழங்களை விவசாயிகள் விற்பனை செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர். நமது நாட்டில் தயாரிக்கப்படும் பச்சைப்பயறு மற்றும் கௌபி இருக்க பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது. இப்போதைக்கு இந்த முறையை நிறுத்திவிட்டு டொலர் நெருக்கடியை நமது உள்ளூர் தயாரிப்புகளை மேம்படுத்த ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று அவர் மேலும் கூறினார்.

## ஆசிரியர் முகாமைத்துவ தரவுத்தளம்; கிழக்கு மாகாணம் வரலாற்று பதிவில்

முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்



மாகாண வரலாற்றில் ஆசிரியர் முகாமைத்துவம் தொடர்பான விபரங்களடங்கிய தரவுத்தள கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட முதலாவது மாகாணமாக கிழக்கு மாகாணம் வரலாற்றில் பதிவாகியதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வியமைச்சு ஏற்பாடு செய்த ஆசிரியர் முகாமைத்துவம் தொடர்பான தரவுக்கட்டமைப்பை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வு திருகோணமலை கிழக்கு மாகாண கல்வியமைச்சில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் ஆசிரியர்களின் விபரங்கள், கடமையாற்றும் பாடசாலை, ஆசிரியர் வெற்றிடங்கள், மாணவர்களின் எண்ணிக்கை, வகுப்பறைகள் உட்பட பல விடயங்களை உடன் அறியக்கூடியதாக இது அமையும். அத்துடன் உரிய விபரங்களை மையமாக வைத்து ஆக்கபூர்வமான தீர்மானங்களை கல்விசார் விடயங்களில் எட்டுவதற்கு இத்தரவுத்தளம் ஏதுவாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பி. வணிகசிங்க, ஆளுநரின் செயலாளர் எல். பி.மதநாயக்க, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச். ஈ. எம்.டபிள்யு ஜி.திஸாநாயக்க, மாகாண கல்வி பணிப்பாளர், கல்வி அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## மலேசிய பல்கலைக்கழக குழுவினர் அம்பாறை விஜயம்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



'றிச் லங்கா டுவரிசம் அன்ட் இன்டஸ்ட்றி பிறைவட் லிமிட்டெட்டின்' ஏற்பாட்டில், மலேசிய பல்கலைக்கழக குழுவினர் அம்பாறை மாவட்டம் விஜயம் . மேற்கொண்டுள்ளனர்.

'றிச் லங்கா ருவரிசம் அன்ட் இன்டஸ்ட்றி பிறைவட் லிமிட்டெட்டின் ' புலமைப்பரிசில்கள் மூலம் இலங்கை மாணவர்களை கல்விகற்க வெளிநாடுகளுக்கு அனுப்பும் திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டத்தில் இயங்கிவரும் இந்நிறுவனத்தின் கருத்தரங்கு அண்மையில் மாளிகைக்காடு பாபா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்வமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி ஏ.டப்ளி யூ.எம்.லரீபின் அழைப்பின் மூலமாக மலேசிய மனிபால் சர்வதேச பல்கலைக்கழகத்தில் இருந்து வருகைதந்த பிராந்திய தலைவர் அஸ்ஹர் ஹுசைன் உள்ளிட்ட குழுவினர் அம்பாறை மாவட்ட இளைஞர்களுடன் நேரடியாக கலந்துரையாடினர். இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களின் நலன்கருதி இந் நிறுவனத்தினால் வழங்கப்படும் விசேட புலமை பரிசில்களை பெற்று வாய்ப்பினை பயன்படுத்துமாறு இங்கு அறிவுரை வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றதுடன், விரைவில் பல இளைஞர்கள் இந்த நன்மையை பெற்றுக் கொள்வதற்கு தயாராக உள்ளதாக தெரிவித்தனர்.

கல்லடி வேலூர் அருள்மிகு

## ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு கல்லடி வேலூர் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு இன்று (12) கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகும்.

இரண்டாம் நாள் நாளை (13) அம்பாளின் விசேட ஆராதனையைத் தொடர்ந்து திங்கட்கிழமை (14) வீதி ஊர்வலமும் மற்றும் ஊர்காவல் பண்ணலும் இடம்பெறும்.

நான்காம் நாள் செவ்வாயக்கிழமை (15) பலி திட்டமிடலும் மறுநாள் புதன்கிழமை (16) கன்னிமார் சடங்கும் நடைபெறும்.

ஆறாம் நாள் வியாழக்கிழமை (17) நெல் குற்றுதலும் மற்றும் சக்தி மகா பூஜையும் இடம்பெறும்.

இறுதிநாள் வெள்ளிக்கிழமை (18) காலையில் விநாயகர்ப் பானை எழுந்தருளப் பண்ணுதலும், மாலை தேவாதிகள் மற்றும் அடியார்கள் சகிதம் மஞ்சள் பூசி சமுத்திர நீராடலைத் தொடர்ந்து தீமித்தலும் இடம்பெற்று ஞாயிற்றுக்கிழமை (20) வைரவர் பூஜையுடன் வருடாந்த சடங்கு கிரியைகள் யாவும் நிறைவுறும்.

வருடாந்த சடங்குக் கிரியைகளை பிரதம பூசகர் கு. சிவகுமார் தலைமையில் உதவிப் பூசகர்களான சீ.சுவேந்திரன், செ.கருணாகரன் மற்றும் க.லக்ஷமன் ஆகியோர் நடாத்துவர்.

## கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பினால் தொடர் விபத்துகள்

மண்டூர் குறூப் நிருபர்

கல்முனை மட்டக்களப்பு பிரதான பாதையில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத் தொல்லை அதிகரித்த நிலையில் காணப்படுவதனால் தொடர்ச்சியான விபத்துச் சம்பவங்கள் ஏற்படுவதாக பாதையில் பயணிக்கும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

பிரதான வீதியின் நடுவே கட்டாக்காலி மாடுகள் அசையாமல் நிற்பதனால் கல்முனை, பொத்துவில் மற்றும் அம்பாறை ஆகிய தூர இடங்களிலிருந்து பகலிரவு வேளைகளில் வாகனத்தை செலுத்துவோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு உட்படுவதாக தெரிவிக்கின்றனர்.

மாடுகள் பிரதான பாதையில் வழிமறித்து நிறைந்து நிற்பதனால் கர்ப்பிணித் தாய்மார்கள், கைக்குழந்தையுடனான தாய்மார்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் பெரும் பீதியுடனே பயணிப்பதாகவும், இடைக்கிடையே மாடுகளின் தாக்கத்திற்குள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரிப்பினால் வாகனங்களின் வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் தடுமாற்றத்துக்குட்படுவதுடன் தொடர்ச்சியாக விபத்துகளுக்கு ஆளாகுவதாகவும் தெரியவருகிறது.

வாகன சாரதிகளினதும் பொதுமக்களினதும் பாதுகாப்பு தேவை கருதி, மாடுகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த சபையிலுள்ள அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மூன்று வருடங்களாக இவரை காணவில்லை

கல்குடா தினகரன் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்மன்நகர் எனும் கிராமத்தில் வாசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கிருபைராசா சத்தியரூபன் என்பவரை கடந்த 2018.06.29ம் திகதி அன்று திருகோணமலை கன்னியா என்ற இடத்திற்கு வேலைக்கு சென்ற வேளையில் காணாமல் போயிருந்த நிலையில் மூன்று (03) வருடங்கள் கடந்தும் இன்னமும் வீடு திரும்பவில்லை என இவரது மனைவி சத்தியரூபன் கஸ்தூரி தெரிவித்தார். இவர் தொடர்பாக சம்பூர் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இவரை அன்று திருவண்ணாமலை கன்னியா என்னும் இடத்திற்கு வேலைக்கு சென்ற வேளையில் காணாமல் போயிருந்த நிலையில் இன்று மூன்று வருடங்கள் கடந்தும் இன்னும் வீடு திரும்பவில்லை.

## ஆசிரிய பயிலுநர்களை பாடசாலைகளுக்கு இணைத்தல்

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் 2018/2020 ஆம் கல்வி ஆண்டுக்கான ஆசிரிய பயிலுநர்களை பாடசாலைகளுக்கு இணைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரிய பயிலுநர்களை இணைப்பதற்குரிய அனுமதி கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப்பிரிவின் பிரதம ஆணையாளரிடம் இருந்து வழங்கப்பட்டுள்ளதாக அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

அதனடிப்படையில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள 08 கல்வி வலயங்களில் உள்ள 123 பாடசாலைகளுக்கு கடந்த திங்கட்கிழமை(07) முதல் செயற்படும் வண்ணம் ஆசிரிய பயிலுநர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பகல்வி, விஞ்ஞானம், கணிதம், விஷேட கல்வி மற்றும் இஸ்லாம் ஆகிய ஐந்து பாடநெறிகளை பயின்று வந்த 349 ஆசிரிய பயிலுனர்கள் இவ்வருடம் நிறைவுறும் வரை கற்பித்தல் பயிற்சியினை குறித்த பாடசாலைகளில் மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பிலான நிகழ்வு தொடருறு கல்விக்கான உப பீடாதிபதி எம்.ஐ. ஜஃபர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி கலந்து கொண்டு பயிலுநர் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உப பீடாதிபதிகள், விரிவுரை இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## யுத்தம் நிறைவடைந்ததும் நெருக்கடிகள் எதிர்பார்த்தளவு குறைவடையவில்லை

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நெருக்கடிகள் குறையும் என எதிர்பார்த்திருந்த போதும் அது நடக்கவில்லை. சுதந்திரமாக கருத்துத் தெரிவிப்பது, சுதந்திரமாக செயற்படுவது, சுதந்திரமாக வாழ்வது எதுவும் நெருக்கடி இல்லாத ஒன்றாக இல்லை என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் லயனல் குருகே தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்,...

எனவே, இந்த விடயத்தைச் சீர்தூக்கிப் பார்த்து அந்த நெருக்கடிகளைச் சந்திப்போருக்கு நாம் உதவ முயற்சிக்கின்றோம். வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் மத்திய பகுதியிலும் தென்பகுதியிலும் இத்தகைய விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

ஊடகவியலாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் தமது நடவடிக்கைகளின்போது எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

இது விடயமான செயலமர்வு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ நிலையத்தில் புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஊடகவியலாளர்களும் சமூக நிறுவனங்களின் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

எனவே, இந்த விடயத்தில் ஊடகவியலாளர்களும் சமூக சேவைகளில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து பணியாற்றி நிலைமையைச் சீர் செய்வது அவசியமாகும்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட ஊடக வளவியலாளரும் ஆய்வாளருமான ஜயசிறி ஜயசேகர உட்பட இன்னும் பல துறைசார்ந்த செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.






கொட்டபொலை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தெனியாய இகலகந்தை தோட்டத்தில் எவ்வித அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வரும் 16 குடும்பங்களுக்கு வன்னி ஹோப் நிறுவனத்தின் நிதி அனுசரனையில் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் மலசல கூடங்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மலசலகூடங்கள் வன்னி ஹோப் நிறுவனத்தின் தலைவர் ரஞ்சன் சிவஞான சுந்தரத்தால் கையளிக்கப்பட்டன. இதன்போது அதன் பணிப்பாளர் வைத்தியர் மாலதி வரன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

## மாத்தளை மாவட்டம்: அதிகரிக்கும் குரங்குகளின் தொல்லை

### கட்டுப்படுத்த மூன்று வருட வேலைத்திட்டம்

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை மாவட்டத்தில் அதிகரித்துவரும் குரங்குகளின் தொல்லையை கட்டுப்படுத்தும் முகமாக மூன்று வருட வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டு வருவதாக மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாலக கோட்ட கோட தெரிவித்தார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டத்தின் கீழ் குரங்குகளுக்கு கருத்தடை செய்து அதன் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக மாத்தளை மாவட்டத்தில் யடவத்த, கிரிகல்பொத்த கந்தே தெவர போன்ற பிரதேசங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இம்மாவட்டத்தில் அதிகரித்துவரும் குரங்குகளினால் தோட்டங்கள், விவசாய நிலங்கள் சேதப்படுத்தப்பட்டு வீடுகளுக்குள் நுழைந்து பொருட்களை எடுத்துச் செல்வதோடு வீட்டுக் கூரைகளிலும் சேதப்படுத்தியதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாய பயிர்களை குரங்குகள் சேதப்படுத்தி வருவதோடு தமக்கு பாரிய நஷ்டம் ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு குரங்கு இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் மூன்று கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தபால் பொதியில் போதைப்பொருள் கடத்தல்



எம்.ஏ.அமீனுல்லா, அக்குறணை நிருபர்

கொழும்பிலிருந்து தபால் பொதியின் ஊடாக போதைப்பொருள் கடத்த முயற்சித்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் (10) இடம்பெற்றுள்ளதாக கண்டி பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

கண்டிக்கு அனுப்பப்பட்டிருந்த தபால் பொதியில், ஐந்து கிராம் ஹெரோயின் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரியவருகின்றது.

இக்கடத்தல் மிகவும் சூட்சுமமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், போதைப்பொருள் மறைக்கப்பட்ட கடிதப்பொதியில் போலி முகவரி எழுதப்பட்டிருக்கும். முகவரிக்கு சென்று ஆளில்லாமல் திரும்புவார். பின்னர் கடிதப்பொதியில் இருக்கும் தொலைபேசிக்கு அழைக்கும். அப்போது போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய நபர் கடிதப்பொதியை வாங்கிக் கொள்வது வாடிக்கையாக இருந்ததென விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொழும்பில் தபால்பொதியை ஒப்படைத்த நபர் போலித் தகவல்களை சமர்ப்பித்தமை தெரியவந்ததையடுத்து, அதனை பொலிஸார் திறந்து பார்த்துள்ளனர். இதன்போது கடத்தல் முயற்சி அம்பலமாகியுள்ளது. தொலைபேசி இலக்கங்களின் அடிப்படையில் நடத்திய விசாரணையில், இதனுடன் சம்பந்தப்பட்ட நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அதற்காக பொலிஸார் நீதிமன்ற அனுமதியைக் கோரியிருப்பதாகவும் தெரியவருகின்றது. ஊழல் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான விசேட பிரிவு





தலவாக்கலை குறூப், ஹற்றன் சுழற்சி நிருபர்கள்

இலங்கை பொருளாதாரதை அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு அழைத்துவருவதற்கான விசேட பிரிவொன்றை கைத்தொழில் அமைச்சு ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழு தலைவருமான எஸ். பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக அதிசய மண்டபத்தில் நேற்று (10) வியாழக்கிழமை நடைபெற்ற சர்வதேச மகளிர் தின வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டுஉரையாற்றிய போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் திசாநாயக்க தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று மின்சார விநியோகம் மூலம் வருடமொன்றுக்கு 91 ஆயிரம் கோடி அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்ட போதிலும் வருடத்திற்கு ஊழியர்களுக்கு 3 போனஸ்கள் வழங்குகின்றன. ஒரு மாதத்திற்கு மாத்திரம் 550 இலட்சம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுகின்றது.

அதேபோல ஒரு லீற்றர் டீசலுக்கு 88 ரூபா மேலதிக நஷ்டம் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்றது. இதற்கு யார் பதில் கூறுவது? டீசல் பிரச்சினையை பாவனையாளர்களிடம் கூறவேண்டும். இந்த நஷ்டத்தை நாம் பகிர்ந்துக்கொள்ளவேண்டும். எனவே டீசல் மற்றும் பெற்றோலை கவனமாக பாவிக்க வேண்டும் என்பதை புரிந்து நடந்துக்கொள்ள வேண்டும்.

உலகத்திலே முதன்முறையாக பெண் ஒருவர் பிரதமராகியது இலங்கையில் தான்.

முதலாவது பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அதன் பின் தான் இந்தியாவில் இந்திராகாந்தி பிரதமராகினார். அதேபோல இலங்கையில் ஜனாதிபதியாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் இருந்துள்ளார். இன்றும் பல உயர் பதவிகளில் பெண்கள் இருக்கின்றனர். இலங்கையில் பெண்களுக்கு நன்மதிப்பு இருப்பதாக அவர் தெரிவித்தார்.



## பூஸ்டர் தடுப்பூசியை தவறவிட வேண்டாம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

கொவிட் 19 தொற்று முழுமையாக கட்டுப்படுத்தப்படாமையால் பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயமாக அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என தவிசாளர் சபையில் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் கந்தப்பளை நகரில் உடற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குரிய உபகரணங்கள் பெற்றுக்கொள்ளவும் நிலையத்தை ஆரம்பிக்கவும் சகல துறையிலும் ஒத்துழைப்பு வழங்கிய தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், மத்திய மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர், உதவி ஆணையாளர், செயலாளர் உட்பட சபை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் என்ற ரீதியில் தனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

கந்தப்பளை கோயில் கலாசார மண்டபத்தில் நடமாடும் சேவையொன்று நடத்தப்பட்டது. அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார். அதே போன்று அன்று ஆயுர்வேத சிகிச்சை முகாம் நடைபெற்றது. அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்துக்கொண்டார்.

ஜனாதிபதி சௌபாக்கிய நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் , நுவரெலியா பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட தொகுதிகளில் அபிவிருத்தி பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

மேலும் சபை அதிகார பிரதேசத்தில் வசிக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 5 மாத காலத்திற்கு சபை ஊடாக போசாக்கு உணவு வழங்குவது தொடர்பான தவிசாளர் பிரேரனை அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மலையகத்தில் காணப்படும் மந்த போஷணையைக் கருத்திற்கொண்டு, நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட வட்டாரங்களில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மாதாந்தம் சத்து நிறைந்த உலர் உணவுப் பொருட்களை வழங்க சபையின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பிக்குகளின் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க நிதியுதவி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



புத்தசாசனத்தின் வளர்ச்சிக்காக தமது பிள்ளைகளை பிக்குகள் ஆக்க அர்ப்பணிக்கும் பெற்றோர்களுக்கு இலவசமாக வீடுகளை அமைக்க அரசு பெருமளவு நிதியினை ஒதுக்கீடு செய்து வருவதாக ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சரும் இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தகவல் தருகையில் புத்தசாசனத்துக்குத் தமது பிள்ளைகளை பிக்குகளாக வழங்கும் பெற்றோர்களுக்கு வீடுகளை அமைத்து கொடுக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்த்தக்கிணங்க முதற்கட்டமாக 2000 வீடுகளை அமைக்க 12000 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன அமைச்சு கிராமிய வீடமைப்பு அமைச்சுகளின் அனுசரணையில் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்துக்கிணங்க இரத்தினபுரி மாவட்டத்தில் 89 குடும்பங்களுக்கு உரிய காசோலைகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் அடுத்த கட்டங்களில் ஏனையோருக்கான உதவிகளும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 6 பேர் கைது

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை நொன்பேரியல் இயற்கை வனத்தில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்ந்த 6 பேரை நொன்பேரியல் வனப்பாதுகாப்பு காரியாலய அதிகாரிகள் நேற்று கைது செய்துள்ளனர்.

இவ்வனத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் வழமையான பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது இவர்கள் தப்பி ஓட முற்பட்டுள்ளனர். இவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர். இரத்தினக்கல் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களுடன் மீட்கப்பட்டுள்ளது. இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வனத்தில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வுகள், காடழிப்பு, வேட்டையாடுதல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து வருவதனால் இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## எரிகாயங்களுடன் முதியவரின் சடலம் மீட்பு

பதுளை தினகரன் விசேட நிருபர்

மடூல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டமாறுவ பகுதியில் வீடொன்றிலிருந்து முதியவர் ஒருவரது சடலம் நேற்று உருக்குலைந்த நிலையில், பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. வீடொன்றிலிருந்து எரிகாயங்களுடன் 87 வயதுடைய முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

முதியவரின் மகன் தொழிலுக்கு சென்று வீடு திரும்பி வந்து பார்க்கும் வேளையில் தனது தகப்பனார் எரிகாயங்களுடன் கருகிய நிலையில் சடலமாக கிடந்துள்ளார். இது தொடர்பில் உடனடியாக மடூல்சீமை பொலிஸாருக்கு அறிவித்ததை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மடூல்சீமை பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். சடலம் தற்போது பதுளை வைத்தியசாலையின் பிரேதஅறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இம்மரணம் கொலையா? தற்கொலையா என மடூல்சீமை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றர்.

## கோதுமை மா விலை அதிகரிப்பு தோட்டத்தொழிலாளர்கள் பாதிப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

நாட்டில் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் சூழ்நிலையில், நேற்று முதல் கோதுமை மாவின் விலையும் அதிகரித்துள்ளதால் மலையக மக்கள் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மலையகத்தில் நகர் புறங்கள் மற்றும் பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களுள் பெரும்பாலானவர்கள், தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கோதுமை மாவை பயன்படுத்தி வருகின்றனர். பெரும்பாலான வீடுகளில் இருவேளை ரொட்டியே உண்ணப்படும்.

இதனால் மாதாந்தம் அதிகளவு கோதுமை மாவை அம்மக்கள் கொள்வனவு செய்வார்கள். இந்நிலையில், கோதுமை மாவின் விலை 35 முதல் 40 ரூபாவரை அதிகரித்துள்ளதால் அது அவர்களின் வாழ்க்கைச்சுமையை மேலும் அதிகரிக்க வைக்கும்.

ஏற்கனவே பெருந்தோட்ட மக்களுக்கு உரிய வகையில் சம்பளம் வழங்கப்படுவதில்லை. தோட்டப்பகுதிகளில் நாட் சம்பளத்துக்கு வேலை செய்பவர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படவில்லை. இதனால் கோதுமை மா விலை அதிகரிப்பு அவர்களுக்கு பெரும் தாக்கமாக அமையும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசால் மாதாந்தம் 15 கிலோ கோதுமை மா பெருந்தோட்டத்தில் வேலை செய்யும் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது. அதுகூட அவர்களுக்கு போதுமானதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளி விழாவை கடந்து பயணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்

## மீடியா போரத்தின் வரலாற்றுப் பயணத்தின் சில நினைவுகள்



நவாஸ் கனி
இந்திய பாராளுமன்ற உறுப்பினர்

இலங்கை முஸ்லிம்களின் ஊடகத்துறை மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு 39 அங்கத்தவர்களுடன் தோற்றுவிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இன்று 1000க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களுடன் தனது பயணத்தில் இரு தசாப்தங்களைப் பூர்த்தி செய்திருக்கிறது. இக் காலப்பகுதியில் ஊடகத்துறையில் மாத்திரமன்றி, சமூகத்தின் மேம்பாடு கருதிய பல்வேறு வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவற்றை மாத்திரம் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப் பிரபல பௌத்த மதகுருவான சோம தேரருடன் விவாதம் ஒன்றுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட சமயம் இவ்விவகாரம் அக்காலத்தில் தேசிய ரீதியாக பெரும் பரபரப்பை தோற்றுவித்ததுடன் இனங்களுக்கிடையே பதற்றம் ஒன்றையும் உருவாக்கியிருந்தது. இந்நிலையில் இதன் பாரதூரத்தை உணர்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் உடனடியாக சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஒரே மேசைக்கு கொண்டு வந்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதுடன் அதன் சாதக, பாதங்கள் குறித்து ஆராய வழியமைத்தது. இதன் பிற்பாடே அமைச்சர் அஷ்ரப் குறித்த விவாதத்தில் பங்கேற்று சோம தேரரின் குற்றச்சாட்டுக்களை முறியடித்தார்.

அதேபோன்றுதான் 2004 இல் சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட சமயம் அதிகம் பாதிப்புக்குள்ளான முஸ்லிம் மக்களுக்குத் தேவையான உதவிகளையும் நிவாரணங்களையும் பெற்றுக் கொடுக்கும் வகையில் நாட்டிலுள்ள பிரதான முஸ்லிம் சிவில் நிறுவனங்களை ஒன்று சேர்ப்பதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் காத்திரமான பங்களிப்பைச் செய்தது. இதன் விளைவாகவே 54 அமைப்புகளின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா தோற்றுவிக்கப்பட்டது.

இவை மாத்திரமன்றி, எப்போதெல்லாம் இலங்கை முஸ்லிம் சமூகம் நெருக்கடிகளைச் சந்தித்ததோ அச் சமயங்களில் உடனுடக்குடன் அரசியல், மார்க்க மற்றும் சிவில் தலைமைகளை ஒன்றுதிரட்டி கலந்துரையாடல்களை நடத்தி தீர்வுகளைக் காண்பதற்கான முயற்சிகளை தனது ஊடகப் பணிக்கு அப்பாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மேற்கொண்டு வந்துள்ளமை குறிப்பிட்டுக்காட்டப்பட வேண்டியதாகும்.

அதேபோன்று இலங்கையில் ஊடகத் துறையில் ஆர்வம் கொண்ட இளைஞர், யுவதிகள் ஊடகத்துறையில் மேற்படிப்பைத் தொடரவும் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைப் பெற்றுக்கொள்ளவும் போதிய வாய்ப்புகள் இல்லை எனும் குறைபாட்டை உணர்ந்ததன் விளைவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் கொழும்பு பல்கலைக்கழகத்திடம் ஊடக டிப்ளோமா கற்கை நெறியொன்றை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. இதன் பிற்பாடே கொழும்பு பல்கலைக்கழகத்தில் மும்மொழிகளிலுமான ஊடக டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலமாக இன்று வரை சுமார் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ் ஊடக டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்து இன்று இலங்கையில் ஊடகத் துறைக்கு பங்களிப்புச் செய்து வருகிறனர்.

அது மாத்திரமன்றி, இக் கற்கை நெறியை தொடரும் மாணவர்களில் பொருளாதார உதவிகளை கோரி நிற்கும் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் உதவியுடன் வருடாந்தம் புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் முஸ்லிம்களுக்கான தனியான தினசரிப் பத்திரிகைகளின் அவசியம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தொடர்சசியாக குரல் கொடுத்து வந்திருக்கிறது. இதனடிப்படையில் இன்று இலங்கை முஸ்லிம்களுக்கான தமிழ் மொழி மூலம் இரண்டு தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

அதேபோன்றுதான் ஏனைய பத்திரிகைகள், வானொலிகள் தொலைக் காட்சிகள் மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சிக்கும் முஸ்லிம் மீடியா போரமும் அதன் உறுப்பினர்களும் காத்திரமான பங்களிப்புகளை வழங்கி வருகின்றனர்.

முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஊடகத்துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் குறிப்பாக பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு 21 ஆம் நூற்றாண்டில் ஊடகம் எனும் தலைப்பில் மீடியா போரம் இதுவரை நாட்டின் பல்வேறு



பகுதிகளிலும் 48 முழு நாள் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

அதேபோன்றுதான் பிராந்திய செய்தியாளர்களுக்கு பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களை இனங்கண்டு அப்பகுதிகளில ஊடகத்துறையில் ஆர்வமுடையவர்களுக்கான செயலமர்வுகளையும் மீடியா போரம் நடத்தி வருகின்றது. குறிப்பாக பொலன்னறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இவ்வாறான செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. தமிழ் மொழியில் மாத்திரமன்றி சிங்கள மொழியிலும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் உருவாக்கப்பட வேண்டும் எனும் அவசியம் உணரப்பட்டதன் விளைவாக குருநாகல் மவட்டத்தில் சிங்கள மொழி மூல ஊடக செயலமர்வு ஒன்றும் மீடியா போரத்தினால் நடத்தப்பட்டது. எதிர்காலத்திலும் இவ்வாறான செயலமர்வுகள் தொடராக நடத்துவதற்கு உததேசிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இன்று முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அதிகரித்துள்ள சமூக ஊடகப் பாவனை தொடர்பில் உரிய வழிகாட்டல்களையும் பயிற்று விப்புகளையும் வழங்கும் வகையில் மட்டக்களப்பு, புத்தளம், கண்டி மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இரு நாள் வதிவிட கருத்தரங்குகளையும் மீடியா போரம் நடத்தியமை குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதாகும்.

இவ்வாறு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கொரு முறை நாட்டின் ஏதாவதொரு பகுதியில் மீடியா போரத்தினால் ஊடக கருத்தரங்குகளும் பயிற்சிப் பட்டறைகளும் தொடராக நடத்தப்பட்டே வருகின்றது.

மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தொழில்சார் உத்தியோகத்தர்களாக பல்வேறு நிறுவனங்களிலும் முக்கிய பொறுப்புகளில் பதவி வகித்துக் கொண்டே தமது வேலைப்பளுவுக்கு மத்தியிலும் தமது காலத்தை ஒதுக்கி இவ்வாறான செயலமர்வுகளை நடத்தி வருகின்றனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் முஸ்லிம் சமூகத்தின் ஊடக மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பு என்கின்ற



போதிலும் இந்த நாட்டில் வாழுகின்ற ஏனைய சமூகங்களுக்காகவும் குரல் கொடுத்து வருகின்றமை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். குறிப்பாக, இலங்கையில் செற்படும் முன்னணி ஐந்து ஊடக அமைப்புகளில் ஒன்றாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் விளங்குகிறது. கடந்த காலங்களில் ஊடகங்கள் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட போதும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களுக்குள்ளாக்கப்பட்ட சமயங்களிலும் மீடியா போரம் அவற்றுக்கு எதிராக ஏனைய ஊடக அமைப்புகளோடு இணைந்து பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

இவ்வாறு ஊடகத் துறையில் மாத்திரமன்றி, பல்வேறு சமூகப் பணிகளிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் கால் பதித்து கடந்த இரு தசாப்தங்களாக சேவையாற்றி வருகின்றது.

எம்.ஏ.எம். நிலாம்
சிரேஷ்ட ஊடகவியலாளர்











லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் இதர சேமநலன்கள் தொடர்பில் லேக்ஹவுஸிலுள்ள அனைத்து தொழிற் சங்கங்களும் இணைந்து நிறுவன முகாமைத்துவத்துடன் ஏற்படுத்திக் கொண்ட கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் நிகழ்வு நேற்று நிறுவன கோட்போர் கூடத்தில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள். (படம்: காயா புஸ்பிக்க)







சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கண்டி ஓக்கரே ஹோட்டல் கேட்போர் கூடத்தில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் ஏற்பாட்டில நடைபெற்ற நிகழ்வில் நிறைவேற்று பணிப்பாளர் பெ.முத்துலிங்கம் மற்றும் உழைக்கும் பெண்கள் முன்னணியின் செயலாளர் ஏ.யோகஸ்வரி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துக் கொண்ட பெண்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

## பயிற்சி பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு

மனித உரிமை மீறல்கள், போதையில்லா மாணவர்கள் உருவாக்கல் மற்றும் தலைமைத்துவ முகாமைத்துவ பயிற்சி பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கௌரவிப்பும் சி.சி.ஏ.எஸ். கெம்பஸ் உயர் கல்வி நிறுவனத்தின் அகில இலங்கைக்கான கல்விக்கான இணைப்பாளர் மௌலவி ஐ.எல் அப்துல் முனாப்பின் ஏற்பாட்டில், நிறுவனத்தின் தவிசாளரும், அக்கரைப்பற்று கல்வி வலய ஆங்கில பாட இணைப்பாளருமான செய்னுலாப்தீன் நஜ்முதீனின் தலைமையில் ( 05) சம்மாந்துறை அல் அர்ஸாத் தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள சம்மாந்துறை கல்விக் கோட்டத்தை சேர்ந்த 10



தமிழ், முஸ்லிம் பாடசாலைகளிலிருந்து 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் மூன்று நாட்களாக எடுத்துக் கொண்ட பல்வேறு தலைப்புக்களின் கீழான பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கே இந்த சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கை ஜே.ஜே பௌண்டசன் பணிப்பாளர் கலாநிதி ஐ.வை.எம். ஹனீப், அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கொழும்பு மாவட்ட தலைவரும், ஸ்டார் ஜெம்ஸ் நிறுவன முதல்வர் அஹமட் சிப்லி, சம்மாந்துறை பொலிஸ் நிலைய சிறுகுற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எம்.எச்.எம். ஹசீப், அல் அர்ஸாத் தேசிய பாடசாலை அதிபர், சி.சி.ஏ.எஸ். கெம்பஸ் பணிப்பாளர் சபையினர், விரிவுரையாளர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# நகர்வலம்





புதிய அலை கலை வட்டத்தின் ஹேவாஹெட்ட ஹோப் கிளையின் அறநெறி பாடசாலை நடத்திய சிவராத்திரி நிகழ்வுகளை படங்களில் காணலாம்.



கொழும்பு கதிரேசன் வீதியிலுள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் சிவராத்திரி அன்று ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படம். படம்: எம். நஸார்

## தாய் தற்கொலை முயற்சி குழந்தை பலி

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஒரு வயது மதிக்கத்தக்க தனது குழந்தையுடன் தாய் ஒருவர் கிணற்றில் குதித்து தற்கொலை செய்வதற்கு முயற்சித்ததில் குழந்தை பரிதாபகரமான முறையில் உயிரிழந்த சம்பவமொன்று வன்னியங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அநுராதபுரம் பொலிஸ் பிரிவிலுள்ள வன்னியங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் புத்தளத்தில் நான்கு வீதிகள் புனரமைப்பு

**புத்தளம் தினகரன் நிருபர்**

அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் புத்தளம் முதலாம் வட்டாரத்தில் புனரமைக்கப்பட்ட நான்கு வீதிகள் மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன முதலாம் வட்டார அமைப்பாளர் எஸ். இஸ்ஸதீனின் வேண்டுகோளின் பேரிலே புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன இதற்கென 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தார்.



புத்தளம் மரைக்கார் வீதி, இரண்டாம் குறுக்குத்தெரு, போல்ஸ் வீதி மற்றும் தம்பபன்னி ஆகிய பிரதேசங்களிலேயே இந்த நான்கு வீதிகளும் கொங்ரீட் வீதியாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்த வீதிகளை மக்களுக்கு கையளிக்கும் உத்தியோகபூர்வமான நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரர் சிந்தக அமல் மாயாதுன்ன கலந்து கொண்டார்.

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன அமைப்பாளர்களான எஸ்.இஸ்ஸதீன், லிப்டி ஜமால்தீன், எம். ரிஸ்வான், எம்.அமீன் உள்ளிட்ட பொது மக்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





கிறீன் பியூச்ச சொசையிட்டி அதன் தலைவர் கமல்ராஜின் தலைமையில், பசுமைப் புரட்சி திட்டத்தின் கீழ் கொழும்பு, பொரளை கொட்டா ரோட்டிலுள்ள இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தில் அண்மையில் சிரமதானம் நடத்தி மரம் நடும் திட்டமொன்றை மேற்கொண்டது. இதில் தென்னிந்திய திருச்சபையின் போதகர் மஹேன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் டைடட்ஸ் பெரேரா ஆகியோர் இதில் கலந்து கொண்டதாக அதன் செயலாளர் தங்கவேல் தெரிவித்தார். இதற்கான ஏற்பாடுகளை பொருளாளர் ரொஹன் அன்டனி மேற்கொண்டிருந்தார்.

## முகத்துவாரம் வெங்கடேஸ்வர ஆலய மண்டபத்தில் கண் பரிசோதனை

மகா விஷ்ணு லயன்ஸ் கிளப் ஒப் கோல்ட் சிட்டியின் திட்டத் தலைவர் (Project Chairperson) பொன்.பத்மநாதனின் ஏற்பாட்டில் எதிர்வரும் 20ம் திகதி காலை 8.00 மணிக்கு கொழும்பு முகத்துவாரம் வெங்கடேஸ்வர மகா விஷ்ணு கோயில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி மண்டபத்தில் தேசமான்ய துரைசாமி செட்டியார் அவர்களின் வழிகாட்டுதலில்,ஸ்ரீ ஐயப்பன் உதவும் கரங்கள் அறநெறி பாடசாலையில் கல்வி பயிலும் 350 மாணவ மாணவிகளுக்கு கண் பரிசோதனை முகாம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் வலயத் தலைவர் (Zone Chairperson) நினேஸ் அமிர்தய்யா, கழக தலைவர் சொ, செந்தில்குமார், செயலாளர் எஸ்,சதாசிவம், பொருளாளர் எஸ். மனோகரன், ஐயப்பன் உதவும் கரங்களின் ஸ்தாபகர் ப.க . வாசன், மன்றச் செயலாளர் ச. அனுஷா, தினகரன் பத்திரிகையின் உதவி ஆசிரியர் கே. ஈஸ்வரலிங்கம் ஆகியோரும் கழக அங்கத்தவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தன்கூசு வலைகளை பாவித்து மீன் பிடிக்க வேண்டாம் என கோரல்

**திறப்பனை தினகரன் நிருபர்**

நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அநுராதபுர மாவட்ட நாச்சியாதீவு குளத்தில் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.இவற்றை பாதுகாக்கும் எண்ணத்தில் தங்கூசி வலைகளை பாவித்து மீன் பிடிப்பதை நீர் வாழ் உயிரின அதிகாரிகள் தடை செய்துள்ளார்கள்.

தங்கூசு வலைகள் மற்றும் சிறிய சதுர மீன்பிடி வலைகளை பாவிப்பதால் அதிகளவான சிறிய மீன்கள் பிடிபடும் வாய்ப்பு அதிகம் காணப்படுவதாலும், மீன் உற்பத்தி குறைவடைவதற்கும் காரணம் எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்சமயம் நன்னீர் மீன் கிலோ ஒன்றுக்கு 400 ரூபாவும், கெட்லோ வர்க்க மீன் கிலோ 600 ரூபாவுக்கும் இப்பகுதியில் விற்பனை செய்யப்பட்டாலும், நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப இங்கு மீன்கள் போதியளவு பிடிபடுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கலைஞர்கள் சங்கத்தின் பீரித் ஓதும் வைபவம் இன்று

இலங்கையிலுள்ள ஒருங்கிணைந்த கலைஞர்கள் சங்கம் இன்று 12ஆம் திகதி சனிக்கிழமை இரவு முழுவதும் பண்டாரகம, கோணதுாதுவ உத்தரச்சாராம விஹாரையில் பீரித் ஓதும் நிகழ்வொன்றை நடத்தவுள்ளது. இலங்கை மக்களுக்கும் கலைஞர்களுக்கும் நல்லாசி வேண்டி இந்த சமய நிகழ்வு நடத்தப்படவுள்ளது. நாளை 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தானம் வழங்கப்படும்.

இன்று பிற்பகல் 3 மணியிலிருந்து 6 மணி வரை வெள்ளைப் பிரம்பு வழங்கலும், கண் மற்றும் உடல் உறுப்புக்கள் தானமாக வழங்கலும் இடம்பெறும். இன்று மாலை 6.45 இலிருந்து போதி பூஜையும் பிக்குனிகளுக்கு தானம் வழங்கலும் பெரஹாவும் இடம்பெறும். இவ்வமைப்பின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படும் இந்நிகழ்வுகளை 100 கலைஞர்களும் 10 விஹாரைகளும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

## லிற்றில் நூலகத் திறப்பும் நூலகர்களுக்கான பாராட்டும்

யாழ் பொதுசன நூலகத்தின் ஓய்வு பெற்ற பிரதம நூலகர் ச தனபாலசிங்கத்தினதும் சுன்னாகம் பொதுநூலகப் பிரதம நூலகர் ஜெயலட்சுமி சுதர்சனதும் நூலக சேவையை கௌரவிக்கும் நிகழ்வு லிற்றில் நூலகத் திறப்பு நிகழ்வோடு இடம்பெற இருக்கின்றது.

நாளை 13ம் திகதி கிளிநொச்சி திருநகரில் உள்ள லிற்றில் எய்ட் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற இருக்கின்றது. லிற்றில் நூலகம் திருநகரைச் சுற்றியுள்ள பத்துவரையான கிராம மக்களிடம் வாசிப்பு பழக்கத்தை தூண்டும் நோக்கோடு ஆரம்பிக்கப்படுவதாக லிற்றில் எய்ட் நிறுவனத்தின் ஸ்தாபகர் த ஜெயபாலன் தெரிவிக்கின்றார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களோடு பொது நூலகமாக ஆரம்பிக்கப்படுகின்ற இந்நூலகம் காலக் கிராமத்தில் வர்த்தகம், கணனி மற்றும் தையல் கலைக்கான நூலகமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நீண்டகாலத் திட்டம் எனவும் த ஜெயபாலன் தெரிவித்தார்.

தமிழ் பிரதேசங்களின் கல்வி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களில் ஒன்றாக இருப்பது வாசிப்பை எம்மவர்கள் கைவிட்டது எனத் தெரிவித்த லிற்றில் எய்ட் இன் இயக்குநர் இணைப்பாளர் ஹம்ச கௌரி சிவஜோதி வாசிப்பு பழக்கத்தை தூண்டுவதன் மூலம் மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றலைத் தூண்ட முடியும் என்றும் அதனால் சிறார்களின் வாசிப்புப் பழக்கத்தில் தாங்கள் கூடுதல் கவனம் எடுக்க உள்ளதாகவும் அதற்காக மாதாந்த வாசிப்பு வட்டம் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் இலவச கண் பரிசோதனை

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் 25வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அரசரட்னம் ஞாபகார்த்தமாகவும் இலவசமாக கண் பரிசோதனை செய்யப்படவுள்ளது. இது கலைமகள் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நாளை 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக உதவி மாநகர சபை மேயர் எம்.டி. இக்பாலும், அவரது செயலாளர் எம். அமீரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். இதற்கான ஒழுங்குகளை மன்ற பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி, தலைவர் நிலாம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.



ஆண்டிமுனை, சின்னக்கொளனி தாழையடி அருள்மிகு ஸ்ரீகருமுத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹா சிவராத்திரி பெருவிழாவில் தீர்த்தோற்சவம் அண்மையில் இடம்பெற்ற போது பக்த அடியார்கள் கலந்து கொண்டார்கள். படம்: உடப்பு குறூப் நிருபர்

## SC/FR/95/2020 என்ற இலக்கமுடைய உயர் நீதிமன்ற அடிப்படை உரிமை விண்ணப்பம் தொடர்பாக வழங்கப்படும் அறிவித்தல்

2020.02.19ஆம் திகதியிடப்பட்ட **RTM** இல. 636 **(CRTM1247)** இற்கு அமைவாக இலங்கை பொலிஸின் பதவி ஏற்றம் பெற்ற பெண் பொலிஸ் சார்ஜண்ட் அல்லது பொலிஸ் சார்ஜண்ட் இற்கானது.

அரசியலமைப்பின் 126(2) உறுப்புரையின் கீழும் பிரகாரமும் மனுதாரர்களுக்கு அவர்களின் விண்ணப்பத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக அனுமதியை உயர் நீதிமன்றமானது வழங்கியுள்ளதென கவனத்திற் கொள்ளவும்.

விண்ணப்பமானது 2022.03.29ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-12, ஹல்ஸ்டோப்பிலுள்ள உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேற்கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்திற்கு P-2 என அடையாளமிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதாவது C.D. விக்கிரமரத்ன பொலிஸ்மா அதிபருக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் முடிவின்றி இருக்கும் மேலேயுள்ள பாங்கு மற்றும் இலக்கமுள்ள அடிப்படை உரிமைகள் விண்ணப்பமானது 1ஆம் எதிர்வாதியினால் 2020.02.19 ஆம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளதான மேலேயுள்ள RTM இலக்கமான 636 (CRTM 1247) இல் அமைந்துள்ள நியமனங்களை மனுதாரர்கள் ஆட்சேபனை தெரிவித்த மேலேயுள்ள இலக்கமிட்ட விண்ணப்பம் தொடர்பாக அறிவித்தல் வழங்கும்படி மனுதாரர்களுக்கு நீதிமன்றம் மேலும் உத்தரவு இடப்பட்டுள்ளது.

கொழும்பு - 12, ஹல்ஸ்டோப்பிலுள்ள இலங்கை உயர் நீதிமன்றத்தில் 2022.03.29 ஆம் திகதியன்று இந்த விண்ணப்பமானது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென கருத்தில் கொள்ளவும்.

# விபத்தில் முதியவர் மரணம்:

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, பாரதிபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், விபத்துடன் தொடர்புடைய வாகனம் ஒன்று தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா, நெளுக்குளம் செட்டிகுளம் வீதியில் பாரதிபுரம் 50 வீட்டுத் திட்ட சந்திக்கு அண்மையிலுள்ள தம்பனைப் புளியங்குளம் பகுதியில் நேற்று (11.03) மதியம் இவ்விபத்து இடம்பெற்றது. இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நெளுக்குளம் பகுதியில் இருந்து செட்டிகுளம் நோக்கிச் சென்ற பெண் ஒருவரின் மோட்டார் சைக்கிள் பாரதிபுரம் 50 வீட்டுத்திட்ட சந்திக்கு அண்மித்த தம்பனை புளியங்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது எதிர்திசையில் வந்த முதியவர் ஒருவரின் மோட்டார் சைச்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது விபத்துக்குள்ளான முதியவர் மீது வீதியால் வந்த பிறிதொரு வாகனம் அவரது தலைப்பகுதியில் மோதிச் சென்றமையால் அவர் சம்பவ இடத்திலேயே தலை சிதறிப் பலியானார். இவ்விபத்துடன் சம்மந்தப்பட்ட வாகனம் குறித்த பகுதியில் இருந்து சென்றுள்ள நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், தடவியல் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வவுனியா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய தர்மராஜா என்ற முதியவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளதுடன், எதிர் திசையில் பயணித்த மோட்டர் சைக்கிள் சாரதியான பெண் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து இடம்பெற்ற போது மரணித்த முதியவரின் பின்னால் இராணுவத்தினரது வாகனம் ஒன்று வந்ததாகவும், விபத்து இடம்பெற்ற பகுதியில் பாரிய சத்தம் கேட்டதாகவும், இராணுவத்தினரது வாகனம் நிறுத்தி விட்டு, பின்னர் உடனடியாக அங்கிருந்து வாகனம் சென்று விட்டதாகவும் விபத்து இடம்பெற்ற பகுதியில் நின்ற மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# காணி உரிமையாளர், மணற் கொள்ளையர்கள் இடையில் தகராறு

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை வேளையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

தனியார் காணியொன்றில் மணல் ஏற்றியமை தொடர்பாக காணி உரிமையாளர்களுக்கும் மணற் கொள்ளையர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாகவே நால்வர் காயமடைந்ததுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இதில் பாலாவி தெற்கு கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 47 வயதான தாய் மற்றும் அவரது 20 வயதான மகன், 22 வயதான மகள் ஆகியோருடன் மணற் கடத்தல் காரர் ஒருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்த மோதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை**
**மருத்துவ / அலுவலக உபகரணங்களை வழங்குதல்**

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிராந்திய பெறுகைக்குழுத் தலைவர் பின்வரும் ‘‘2022ஆம் வருடத்திற்கான மருத்துவ / அலுவலக உபகரணங்களை’’ வழங்கி நிறுவுவதற்காக 2022-03-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முதன்மையாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறார்.

| உருப்படி இல. | | மருத்துவ / அலுவலக உபகரணங்கள் - 2022 உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாதது |
|---|---|---|---|---|
| Group I | 1.1 | மருந்து ட்ரொலிகள் (Medicine trolley) | 20 | 1000.00 |
| | 1.2 | இன்ஜெக்ஷன் ட்ரொலிகள் | 04 | |
| | 1.3 | பரிசோதிக்கும் கட்டில் | 1 | |
| | 1.4 | Spinal Board | 2 | |
| | 1.5 | நோயாளர் ட்ரொலிகள் | 10 | |
| | 1.6 | சக்கர நாற்காலிகள் | 15 | |
| | 1.7 | நோயாளர் திரை | 1 | |
| | 1.8 | பரிசோதிக்கும் கட்டில் | 1 | |
| | 1.9 | மருத்து ட்ரொலிகள் (Drug trolley) | 2 | |
| | 1.10 | Oxygen stand | 10 | |
| Group II | 2.1 | பிரசவத்திற்குப் பிந்திய கட்டில்கள் | 21 | 1000.00 |
| | 2.2 | பிரசவக் கட்டில்கள் | 5 | |
| | 2.3 | Bedside locker | | |
| Group III | 3.1 | Bp Apertures android | 61 | 1000.00 |
| | 3.2 | Knee hummer | 4 | |
| | 3.3 | Spot lamp | 10 | |
| | 3.4 | நிறுக்கும் தராசு | 13 | |
| Group IV | 4.1 | Patient warmer | 1 | 1000.00 |
| | 4.2 | Fetal Doppler | 1 | |
| | 4.3 | Fluid warmer | 1 | |
| | 4.4 | CTG Machine | 4 | |
| | 4.5 | Laryngoscope pediatric | 4 | |
| Group V | 5.1 | Mini Autoclave | 4 | 1000.00 |
| | 5.2 | Ultra sonic scalar | 1 | |
| | 5.3 | பற்சிகிச்சை கதிரை | 1 | |
| Group VI | 6.1 | Thermometer | 6 | 1000.00 |
| | 6.2 | Stethoscope | 8 | |
| | 6.3 | Sterilizer | 2 | |
| | 6.4 | Digital Bathroom Scale | 4 | |
| | 6.5 | High Measuring scale | 2 | |
| | 6.6 | Weighting scale Infant | 3 | |
| | 6.7 | Adult beam scale | 1 | |
| | 6.8 | Infant Scale | 1 | |
| | 6.9 | diagnosis set | 2 | |
| | 6.10 | X-Ray Illuminator | 4 | |
| | 6.11 | Height Scale | 10 | |
| | 6.12 | Weighting scale Adult | 10 | |
| | 6.13 | Ophthalmoscope | 1 | |
| Group VII | 7.1 | Nebulizer | 6 | 1000.00 |
| | 7.2 | laryngoscope | 11 | |
| | 7.3 | Infusion pump | 5 | |
| | 7.4 | Syringe Pump | 3 | |
| | 7.5 | Suction apparatus | 2 | |
| Group VIII | 8.1 | Patient Monitor | 7 | 1000.00 |
| Group IX | 9.1 | Distilled water plant | 2 | 1000.00 |
| | 9.2 | electronic balance lab | 1 | |
| Group X | 10.1 | Generator (20KVA) | 1 | 1000.00 |
| Group XI | 11.1 | Generator (I OKVA) | 2 | 1000.00 |
| Group XII | 12.1 | Air Condition (240008tu/Hr. Split type) | 16 | 1000.00 |

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள தகுதியுள்ள எந்தவொரு விலைமனுதாரர், முகவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் ஆகியோர் 2022-03-11ஆம் திகதியிலிருந்து 2022-03-23ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து நகல் பிரதிகளுடனான விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்று.
- திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தின் பெயரில் மக்கள் வங்கி, திருகோணமலை நகரக் கிளையின் 255-100120000-490 எனும் கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
- முதன்மையாளர்களினால் உங்கள் கம்பனியை அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டு முகவர்களாக நியமித்தல் தொடர்பாக வழங்கப்பட்ட சான்றிதழ்/கடிதம்.

1. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2022-03-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறைகளில் தொகுதியின் (Group) பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
2. அனைத்து விலைமனுக்களுடன் விலைமனுப் பெறுமதியின் 2% விலைமனுப்பிணைத் தொகையாக இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப் பிணை 2022-05-10ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
4. ஏதாவது தெளிவுபடுத்தல்களை 026-2220103 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**திருகோணமலை.**

**இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம், விவசாய, தொழில்நுட்ப பீடங்கள் மற்றும் SERVER ROOM/CICT இற்கு இடையில் Fiber Backbone ஐ வழங்குதல், நிறுவுதல், இயக்குதல், விரிவாக்குதல்**

**பெறுகை இல. EUSL/CW2/20/5/1**

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம், விவசாய மற்றும் தொழில் நுட்பபீடங்கள் மற்றும் Server Room/CICT இற்கு இடையில் Fiber backboneஐ வழங்குதல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் விரிவாக்கலுக்கு ஆர்வமுள்ள, தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சார்பாக தலைவர்/ திணைக்கள பெறுகைக் குழு இப்போது அழைக்கின்றார்.

1. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் முறைமை (NVB) இன் கீழ் நடத்தப்படும்.
2. விலைமனுதாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) தரம் EM3 அல்லது அதற்கு மேல் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். Extra Low Voltage Installations (Date, Telecommunication and Security Systems, Public address systems, Pipe music systems (ELV)
3. விலைமனுதாரர்கள், 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்டம் 03 விதிகளின் படி இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் தாமாகவே பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   பிரிவின் (PCA 03) மூலச் சான்றிதழை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்த விலைமனுதாரருக்கும் ஒப்பந்தம் வழங்கப்பட மாட்டாது.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இ.கி.ப. கழகத்தின் பிரதான வேலைகள் மற்றும் திட்டமிடல்/ சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் செங்கலடி வந்தாறுமூலை, இ.கி.ப.க, பிரதான வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவில் வேலை நாட்களில் 2022.03.29 9.00 மணி முதல் 14.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.
   தொ.பே. இல. 065-2240589 - மின் அஞ்சல் முகவரி: dr_capitalworks@esn.ac.lk
5. 2022.03.29ம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை ஒவ்வொரு ஆவணத்திற்கும் இ.ரூபா. 5000/- ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் மற்றும் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பிரதான வேலைகள் மற்றும் திட்டமிடலுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணங்கள் மக்கள் வங்கியின் கணக்கு இல. 227100140000024 அல்லது http://pay.esn.ac.lk/ இற்கு ‘நிதியாளர், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை’ இற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2022.03.30ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிடப்பட்டு இரண்டு பிரதிகளாக கீழ்க்காணும் முகவரிக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது சமுகமளிக்கத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்படும் நேரம் மற்றும் திகதிக்குப் பின்னர் உடனடியாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் சபை அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் தலைப்பு தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட, இலங்கையில் இயக்கும் ஓர் வர்த்தக வங்கியில் இருந்தும் பெற்றுக் கொள்ளப்படும். ரூபா 150,000.00 பெறுமதியான தொகையில் இலங்கை கிழக்கு பலக்லைக்கழகம்/உதவி வேந்தரின் பெயரில் ஓர் விலைமனுப் பிணை, எல்லா விலைமனுவுடனும் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணை 2022.07.13 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
9. விலைமனுவுக்கு முன்னரான ஓர் கூட்டம் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் பிரதான வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவில் 2022.03.22 மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு.**
**இலங்கை கிழக்கு பலக்லைக்கழகம்,**
**வந்தாறுமூலை, செங்கலடி.**
2022.03.12

# ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

இந்திய அரசின் நிதியுதவியுடன் யாழ் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம் யாழ் மாவட்டத்தில் மார்ச் 14ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை மாவட்ட முகாமைத்துவ திறன் அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

வலுவிழந்தவர்களுக்கு சேவை புரியும் பகவான் மகா வீரர் சஹயட சமித்தி தொண்டு நிறுவனமும் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலகமும் இணைந்து யாழ்ப்பாணத்தில் இந்நிகழ்வை முன்னெடுக்கவுள்ளனர்.

தேவைப்பாடுள்ள பயனாளிகள் தமது பதிவுகளை பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாபெரும் கிரிக்கெட் போட்டி

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையிலான பொன்அணிகள் போர் என்று அழைக்கப்படும் மாபெரும் கிரிக்கெட் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

இப்போட்டி இன்று சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றையதினம் காலை ஆரம்பமான போட்டியில் முதலில் யாழ்ப்பாண கல்லூரி துடுப்பெடுத்தாடியது.

இவ்விரு கல்லூரிகளுக்குமிடையில் 1917ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட கிரிக்கெட் போட்டி போர்க்காலங்களைத் தவிர மற்றைய காலங்களில் ஒழுங்காக நடைபெற்று வந்தது.

இவ்வருடம் 105வது வருடமாக இந்த போட்டி நடைபெறுகிறது.

இதுவரை காலமும் நடைபெற்ற போட்டிகளில், சென் பற்றிக்ஸ் கல்லூரி 33 தடவைகளும், யாழ்ப்பாணக் கல்லூரி 16 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 32 போட்டிகள் வெற்றி தோல்வியும் இன்றி முடிவடைந்தன.

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்**
**திட்ட முகாமைத்துவ அலகு**
**Loan 3625-SRI**

## விலைமனு மூடும் திகதியின் நீடிப்பு

**(சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்)**

| ஒப்பந்த பொதியின் பெயர் | ஒப்பந்த இலக்கம் | பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட முன்னைய பத்திரிகைத் திகதி | விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| வெளியக மற்றும் உள்ளக கட்டமைப்புகள் அடங்கலான போவதன்னவிலிருந்து வெமெடில்ல நீர்த்தேக்கம் வரையிலான 8.5 கிமீ நீளமான சுரங்கத்தின் நிர்மாணம். | MI/MWSIP/ADB/ WORKS/ NWPCP-5/ICB/ 2021/033 | 2022.01.21ஆம் திகதியன்று | 2022.04.01ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் மு.ப. 10 மணிக்கு |

மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உரித்தான திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்,**
**இல. 493 1/1, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**

**தொலைபேசி இல.: +94 11 2675810**
**தொலைநகல் இல.: +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி: ebid.mwsip@gmail.com**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

முல்லேரியாவ, கொடெல்ல மாவத்த, இல. 552/2/ஜி இல் வசிக்கும் **இலந்தாரி தேவ சுபுன் லக்மினி டி சில்வா ஆகிய** நான் முல்லேரியாவ கொடெல்ல மாவத்த, இல. 552/2/ஜி எனுமிடத்தில் வசிக்கும் **இலந்தாரிதேவ சுமுது ருவன் குமாரி டி சில்வா** என்பவருக்கு வழங்கியுள்ள 2021 நவம்பர் 27ஆம் திகதி கடுவலை பகிரங்க நொத்தாரிசு **எச்.எம்.பி.பீ. ஹீன்கெந்தவினால்** எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 9637 எனும் அற்றோணி தத்துவப் பத்திரம் 2022.03.10ம் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் இதன் பிறகு மேற்படி அற்றோணி உரிமையாளர் மேற்கொள்ளும் எந்த செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**இலந்தாரி தேவ சுபுன் லக்மினி டி சில்வா**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

**319**
**வெற்றிடங்கள்**
**வீட்டு வேலையாளர்கள்**

50 வயதுக்குக் குறைந்த வீட்டுப் பணிப்பெண் தேவை. 0773663978, 0712181811 018671

**320**
**வெற்றிடங்கள்**
**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொழும்பு 05, ஹெவ்லொக் வீதியில் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். பயிலுநர்/ பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர், டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ ரைடர்கள். தொடர்பு 0705323273, 0765718240. 016127

**322**
**வெற்றிடங்கள்**
**மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்**

மேசன் பாஸ்மார் தேவை. அழைக்கவும். 07 7 7724178. T.Pratheep. 017835

# இலங்கை துறைமுக அதிகார சபை
# கேள்வி அறிவித்தல்
## அகற்றப்படாத கப்பற் பொருட்களை விற்பனை செய்தல்

**கேள்வி இல. 444**
**கேள்வி நடைபெறும் தினம் : 2022.03.23**

கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன்கள் மற்றும் களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் பொருட்களை கொள்வனவு செய்து அகற்றிக் கொள்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**கேள்வி இல. 444**

| | | |
|---|---|---|
| பாவிக்கப்பட்ட இயந்திரங்கள் | மின் உபகரணங்கள் | இரசாயனப் பொருட்கள் |
| Induction Furnace | விவசாய உபகரணங்கள் | சமையலறை உபகரணங்கள் |
| Ramming Mass | மோட்டார் சைக்கிள் | துணிமணிகள் |
| Secondary Interior Doors | உதிரிப்பாகங்கள் | மற்றும் ஏனைய வர்த்தகப் பொருட்கள் போன்றன. |
| Hydrochloric Acid | முச்சக்கர வண்டி | |
| இரும்பு | வளிச்சீராக்கி இயந்திரம் | |
| உணவுப் பொருட்கள் | சப்பாத்து | |
| | வாகன உதிரிப் பாகங்கள் | |

குறித்த கேள்வி பட்டியலை மீளளிக்கப்படாத ரூ. 1,000/- தொகையை மற்றும் பெறுமதி சேர் வரியைச் செலுத்தி கெனர்ரோ, இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 இல் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவில் கணக்குப் பிரிவு அலுவலகத்தில் 2022.03.15ம் திகதி 10.00 மணி முதல் 2022.03.22ம் திகதி 14.30 மணி வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு (www.slpa.lk) இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

**பிரதம முகாமையாளர் (சேவை வழங்கல்கள்)**
**2022.03.12ம் திகதி,**
**இலங்கை துறைமுக அதிகார சபை, சேவை வழங்கல் பிரிவு, இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01.**

# விலைமனு அறிவித்தல்

**கம்பனிகள் தோட்ட மறுசீரமைப்பு, தேயிலைத் தோட்டம் சார்ந்த பயிர்ச் செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

## எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி

### அபாயகரமான மற்றும் பலகை மரங்களை வெட்டி அகற்றுவதற்கான விலைமனுக்கோரல்

**விலைமனு இலக்கம்: EPL/PL/TB/T-03/2022-Timber**

எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியினால் நிருவகிக்கப்படும் பின்வரும் பெருந்தோட்டங்களிலுள்ள மரங்களை வெட்டி அகற்றிக் கொள்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெருந் தோட்டம் | மரம் வகைகள் | மரங்களின் எண்ணிக்கை | வேறு விடயங்கள் | லொட் இலக்கம் | மீளளிக்கப் படும் வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| எல்கடுவ | யுகலிபட்டஸ் கிராண்டிஸ் | 35 | வன முகாமைத்துவ திட்டத்திற்குரித்தான மரங்கள் | 01 | 100,000.00 |
| எல்கடுவ | யுகலிபட்டஸ் கிராண்டிஸ் | 36 | வன முகாமைத்துவ திட்டத்திற்குரித்தான மரங்கள் | 02 | 100,000.00 |
| எல்கடுவ | யுகலிபட்டஸ் கிராண்டிஸ் | 33 | வன முகாமைத்துவ திட்டத்திற்குரித்தான மரங்கள் | 03 | 100,000.00 |
| நாலந்த | பலா | 04 | விழுந்துள்ள மற்றும் இறந்த மரங்கள் | 04 | 25,000.00 |
| நாலந்த | புளி, மா, கொட்ட உட்பட கலவன் மரங்கள் | 05 | அபாயகரமான மரங்கள் | 05 | 10,000.00 |
| நாலந்த | பலா, தேக்கு உட்பட கலவன் மரங்கள் | 10 | இறந்த மரங்கள் | 06 | 25,000.00 |
| நாலந்த | இறப்பர் | 78 | மீள் பயிர்ச் செய்கைக்காக அகற்றுதல் | 07 | 50,000.00 |
| ஹபுகஸ்பிட்டிய | பலா | 07 | இறந்த மரங்கள் | 08 | 25,000.00 |
| ரத்வத்த | அல்பீசியா கிராண்டிஸ் | 02 | வீழ்ந்துள்ள மரங்கள் | 09 | 15,000.00 |
| ரத்வத்த | அல்பீசியா கிரவிலியா | 04 | அபாயகரமான மரங்கள் | 10 | 20,000.00 |
| மில்லவான | ஹல்மில்ல, கெட்டகெல, மஹோகனி, தேக்கு | 40 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 11 | 50,000.00 |

2022.03.12 முதல் 2022.03.24 அன்று பி.ப. 12.30 வரை குறித்த பெருந்தோட்ட அலுவலகங்களில் அல்லது இலக்கம் 320 'ஜனவத்து பியச' டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 இல் உள்ள எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் உப அலுவலகத்தில் மற்றும் 2022.03.12 முதல் 2022.03.25 அன்று பி.ப. 12.30 வரை ரத்வத்த, உக்குவலையில் உள்ள எல்கடுவ பெருந்தோட்டக்கம்பனியின் பிரதான அலுவலகத்தில் ரூபா 2000/- இற்கான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்தி, இதற்கான நிபந்தனைகளுடன் கூடிய விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2022.03.25 அன்று பி.ப. 1.00 வரை, எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் ரத்வத்த, உக்குவலையிலமைந்துள்ள பிரதான அலுவலகப் பெறுகைக்குழுத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், விலைமனுதாரர்களின் முன்னிலையில், 2022.03.25 அன்று பி.ப. 1.00 க்கு அவை திறக்கப்படும். பெறுகைக் குழுத்தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

- திருப்தி அடையாத கூடிய விலைக்கேள்விகள் தொடர்பாக விண்ணப்பித்த அனைத்து கொள்வனவாளர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் உரிமை தலைவருக்கு உண்டு.

**தொலைபேசி இலக்கம்:**

066-2242522 - பிரதான அலுவலகம்
066-3669882 - ஹபுகஸ்பிட்டிய பெருந்தோட்டம்
066-3682755 - நாலந்த பெருந்தோட்டம்
066-3133355 - எல்கடுவ பெருந்தோட்டம்
066-3682734 - ரத்வத்த பெருந்தோட்டம்

**தலைவர், பெறுகைக்குழு,**
**எல்கடுவ பெருந்தோட்டக்கம்பனி**
**பிரதான அலுவலகம்,**
**ரத்வத்த - உக்குவலை.**

# விலைமனு அழைத்தல்

**தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு**

## சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் – 2022

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு சார்பாக அதன் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் சேவையை வழங்குவதற்காக 2022.03.22 அன்று மு.ப. 10.00 வரை தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | பண்டங்கள்/உபகரணங்கள்/சேவை வகைகள் | உத்தேச தொகை ரூபா | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூ. | மீளளிக்கப்படாத பிணைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01 | தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுக்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல் | 3,000,000.00 | 30,000.00 | 500.00 |

02. விலைமனுக் கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையினடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

03. 2022.03.03 அன்று மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை 2022 மார்ச் 22 வரை வார வேலை நாட்களில் வழங்கப்படும் விலை மனுப்படிவங்களின் பிரதிகளை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை அமைச்சின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டை பெறுகைப் பிரிவில் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

04. அமைச்சின் செயலாளருக்கு பெயர் குறிப்பிட்டு மீளளிக்கப்படாத வைப்புத் தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் தபானத்தின் கடிதத் தலைப்பில் கடிதம் ஒன்றின் மூலம் விண்ணப்பம் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக 2022.03.22 அன்று மு.ப. 10.30 இற்கு விலை மனுத்திறத்தல் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சில் மேற்கொள்ளப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.03.22 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் அல்லது செயலாளர், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு, சென் மைக்கல் வீதி, கொழும்பு -03 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், சுத்திகரிப்புச் சேவை 2022 இற்கான விலைமனு' எனப் பிழையின்றிக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனு வைப்புத் தொகையை (மீளளிக்கப்படாத வைப்பு) செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டின் பிரதியொன்று, விலை மனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அனைத்து விலை மனுக்களும் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என இரண்டு பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

08. இதற்காக ஆர்வமும் தகைமையும் பெற்றுள்ள விலை மனுதாரர்கள் தொ.பே. இல. 011 2441847 மூலம் அமைச்சின் கணக்குப் பிரிவில் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகைக்குழு,**
**தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு**
**வசதிகள் இராஜாங்க அமைச்சு,**
**இல. 45, சென் மைக்கல் வீதி,**
**கொழும்பு -03.**

2022.03.02

# සතොස

வர்த்தக அமைச்சு

## ஆர்வ வெளிப்பாடு (EOI)

### லங்கா சதொச லிமிடட் விற்பனையக வலையமைப்பில் இட வசதி வழங்கல்

லங்கா சதொச லிமிடட், அரசு சார்ந்த, சில்லறை உணவு மற்றும் பல்பொருள் அங்காடி செயற்பாடுகளில் ஈடுபடும், நாடு முழுவதும் நிறுவப்பட்ட சுமார் 400 விற்பனையகங்கள் உள்ள வர்த்தகம் ஒன்றாகும். இந்த லங்கா சதொச விற்பனையக வலையமைப்பில் முக்கியமாக கீழ் குறிப்பிடப்பட்ட வகையிலான உருப்படிகள் விற்பனை செய்யப்படும்.

உணவு பொருட்கள் (உலர் மற்றும் அழிபொருட்கள்), சமையல் பயன்பாட்டு பொருட்கள், குளிரூட்ட முடியுமான உணவுகள், பால் மா, மென் பான வகைகள், பானங்கள் மற்றும் தண்ணீர், சிறுவர் பராமரிப்பு பொருட்கள், தனிப்பட்ட பராமரிப்பு பொருட்கள், வீட்டுத் தேவை பொருட்கள், பொதுவான விற்பனை பொருட்கள்.

கெலியோய, கம்பளை (புதிய), தளதாகம, சியம்பலாண்டுவ, நெலும்தெனிய, மஹியங்கனய, அகலவத்த, திஹகொட, கொட்டியாகும்புர, ரிதீகம, வெலிமடை 2, ஹல்துமுல்ல, ஒக்கம்பிட்டிய, பாதெனிய, பண்டாரவளை மெகா, நாவுல, தெஹிவல (கவ்டான வீதி), கருவலகஸ்வெவ, பதியாதலாவ, எகொட உயன, மெதவல, உக்குவெல, யடவத்த, ஹெட்டிபொல (வில்கமுவ), வந்துரம்ப, மெத மஹாநுவர, அஹுங்கல்ல மொரட்டுவ மெகா மற்றும் கலகெதர (பாதுக்கை) **ஆகிய இடங்களில் எதிர்காலத்தில் விற்பனையகங்கள் திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ் விற்பனையகங்களில் உள்ள இடங்களில் பின்வரும் ஒருங்கிணைந்த சில்லறை வசதிகளுக்காக விற்பனையக இடங்களை வழங்குவதற்கு வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடம் இருந்து லங்கா சதொச லிமிடட் தலைவரினால் ஆர்வ வெளிப்பாடுகளை** (EOI) ஏற்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**அதன்படி, உத்தேசித்துள்ள சில்லறை வசதிகள் பின்வருமாறு**

1. மருந்தகங்கள்
2. பேக்கரி தயாரிப்புகள்
3. இறைச்சி/ மீன் வகைகள்
4. புத்தம்புதிய மரக்கறி/ பழங்கள்
5. வேறு பொருத்தமான வர்த்தகங்கள்

மேல் குறிப்பிடப்பட்ட கோரலை வழங்குவதற்கு தகுதி மற்றும் திறன் படைத்த தொழில்முறை **நிறுவனங்களை தேர்வு செய்யும்போது, முன்தகைமை மதிப்பீடு ஒன்றுக்கு ஈடுபடுத்துவதற்கு லங்கா சதொச நிறுவனம் உத்தேசித்துள்ளது.**

**அதன்படி, கீழ் குறிப்பிடப்பட்ட விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்**

1. நிறுவனம்/ தனி நபர் வர்த்தகத்தின் பெயர், முகவரி, தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை உள்ளடக்கிய, இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் விருப்பத்தை வெளியிடும் கடிதம்.
2. நிறுவனம்/ வர்த்தகத்தின் தோற்றப்பாட்டு விபரம்
3. வர்த்தக பதிவுச் சான்றிதழ் அல்லது உரிமம்
4. பிரதான வர்த்தகத்தின் விபரம்
5. ஒற்றை முகாமைத்துவத்தின் கீழ் ஒன்றிணைந்த நிறுவனங்கள் தொடர்பில் தெளிவான விளக்கம்
6. பெற்றுத்தரும் பொருட்கள் பட்டியல்
7. உச்ச ஏற்பாட்டியல் கட்டமைப்பு மற்றும் ஊழியர் எண்ணிக்கை
8. குறித்த தொழில்துறையின் அனுபவம்
9. குறைந்தது நெருங்கிய 5 ஆண்டுகளின் நிதித் திறன்

ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் **2022.03.21 ஆம் திகதி பி.ப. 03.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், லங்கா சதொச லிமிடட், கவனத்திற்கு – பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), இல. 27, சதொச செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்ப்பதன் மூலம் தமது ஆர்வ வெளிப்பாட்டை (EOI) சமர்ப்பித்தல் வேண்டும்.**

ஆர்வ வெளிப்பாடு (EOI) கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச லிமிடட்டில் இட வசதி பெறுவதற்கான ஆர்வ வெளிப்பாடு (EOI)"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**ஆர்வ வெளிப்பாடு (EOI) ஏற்பது 2022.03.21 ஆம் திகதி பி.ப. 03.00க்கு முடிவுறும்.** தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை ஏற்கப்படமாட்டாது.

**குறுகிய பட்டியல் ஒன்று லங்கா சதொச லிமிடட் மூலம் இறுதி செய்யப்படும் என்பதோடு தகுதி பெற்ற நிறுவனங்களிடம் இருந்து மாத்திரமே முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) விடுக்கப்படும்.**

**தெளிவு பெறுவதற்கு கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரியை தொடர்புகொள்ளவும்:**

சந்தைப்படுத்தல் உதவி முகாமையாளர் - 070 3611453

**ஆர்வ வெளிப்பாடு (EOI) விண்ணப்பங்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை லங்கா சதொச, தலைவர் வசமானது.**

**தலைவர்,**
**லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்**
**இலக்கம் 27, வொக்ஷோல் வீதி கொழும்பு - 02**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்**

## சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு மின்னுயர்த்தி வழங்குதல் மற்றும் நிறுவுதல் பெறுகைக்கான விலைமனு ஆவணம்

1. பின்வரும் அட்டவணையின் பிரகாரம் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபை சார்பாக பெறுகைக் குழுவின் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் இடம்பெறும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை சுழிபுரம் - வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைவரிடமிருந்து அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 021 2250144, 021 2250145, 021 2252284 தொலைநகல்: 021 2250144 valiwestps@gmail.com
4. தகைமைத் தேவைப்பாடுகள் உள்ளடங்குவன: குறிப்பிட்ட வர்த்தக நாமம் மற்றும் துறையில் நாடளாவிய ரீதியில் விற்பனை செய்தல் மற்றும் நிறுவுதலில் குறைந்தபட்சம் 3 வருடங்கள் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.
5. மீளளிக்கப்படாத 3000.00 ரூபா (சகல வரிகளும் உட்பட) கட்டணத்துடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2022 மார்ச் 12ஆம் திகதி முதல் 2022 மார்ச் 28ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பின்வரும் முகவரிக்குச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணமாக அல்லது சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் பெயரில் வரையப்பட்ட வங்கி வரைவாகவிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2022 மார்ச் 29ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரியில் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு விலைமனுதாரர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்திற்கான விலைமனுப்பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. 2022 மார்ச் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இதில் கலந்துகொள்ளலாம்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது: வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

| தொ. இல. | விலைக்கோரல் இல. | உருப்படியின் பெயர் | ஒப்பந்தக் காலம் | திறக்கப்படும் நாள் முதல் விலைமனுவின் செல்லுபடிக் காலம் | விலைக்கோரல் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலப்பகுதி |
| 01 | NP/14/41(17)/02/ Lift/2022 | சுழிபுரம், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு மின்னுயர்த்தியை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | 90 நாட்கள் | 77 நாட்கள் | 55,000.00 | 2022-07-12 |

**தலைவர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**2022-03-12.**

## இலங்கை இந்திய டெஸ்ட் தொடர்:

# இரண்டாவது போட்டி இன்று சாதிக்குமா இலங்கை அணி?

இலங்கை இந்திய அணிகளுக்கிடையில் நடைபெறும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி இன்று பெங்களூரில் பகலிரவுப் போட்டியாக நடைபெறவுள்ளது. டெஸ்ட் சம்பியன் ஷிப் தொடரின் அடிப்படையில் நடைபெறும் இத் தொடரில்ஏற்கனவேமொஹாலியில் நடைபெற்ற முதலாவது போட்டியில் இலங்கை அணி தோல்வியுற்றதால் 1-0 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை பெற்றுள்ளது. இத்தோல்வியுடன் இதுவரை டெஸ்ட் சம்பியன் டெஸ்ட் புள்ளிப் பட்டியலில் 100 சத வீத வெற்றியுடன் முதலிடத்திலிருந்த இலங்கை அணி மூன்றாமிடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

மொஹாலியில் நடைபெற்ற இலங்கை அணியின் 300வது போட்டியில் அவ்அணி மூன்றாவது நாள் முடிவதற்குள் போட்டியை முடிவுக்கு வந்தது. அப்போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்களால் பெற்ற தோல்வியானது டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி பெறும் 3வது பாரிய தோல்வியாகும். இதற்கு முன் இந்தியா அணியிடம் இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்களில் தோல்வியுற்றதே இதுவரையான பாரிய தோல்வியாகும்.

முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இரு இன்னிங்ஸ்களிலும் 200 ஓட்டங்களைத் தாண்ட வில்லை என்பது இலங்கை அணியின் துடுப்பாட்ட பின்னடைவையே காட்டுகிறது. 3வது நாளில் இலங்கை அணியின் 16 விக்கெட் கெட்டுகளை வீழ்த்திய இந்தியப் பந்து வீச்சாளர்கள் தமது அணியின் வெற்றியை உறுதிசெய்தனர். இது இலங்கை அணியின் ஒரே நாளில் வீழ்த்தப்பட்ட அதிக விக்கட்டுகள் என்ற எண்ணிக்கையை சமன் செய்த சந்தர்ப்பமாகும். இதற்கு முன் 2017ம் ஆண்டு தென்னாபிரிக்க அணியுடன் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் ஒரே நாளில் 16 விக்கெட்கள் வீழ்த்தப்பட்டுள்ளன.

இந்தியாவுடன் இன்று நடைபெறும் 2வது டெஸ்ட் போட்டியில் முதலாவது டெஸ்ட்டில் விட்ட தவறுகளை நிவர்த்தி செய்துகொண்டு இப்போட்டிக்கு இலங்கை தயாராக வேண்டும். முதல் டெஸ்ட் முதல் நாளில் இலங்கை அணி முதல் ஒரு சீசனில் தேநீர் இடைவேளை வரை சிறப்பாகவே செயற்பட்டிருந்தது. அதன் பிறகு பந்து சற்று பழைமையடைந்தவுடன் துடுப்பாட்டத்துக்கு சாதகமாகிவிட்டது. மேலும் இலங்கை அணி ஒரே ஒரு சுழற்பந்து வீச்சாளருடனே களமிறங்கியிருந்ததும் இப்போட்டியில் ஏற்பட்ட பாரிய தோல்விக்குக் காரணமாகும்.





மூன்று வேகப்பந்து வீச்சாளருக்குப் பதிலாக இரு வேகப்பந்து வீச்சாளருடன் இன்னுமொரு சுழற்பந்து வீச்சாளரைக் களமிறக்கியிருக்கலாம். பகுதிநேர சுழற்பந்துவீச்சாளரான தனஞ்சயவை முழுநேரமும் பயன்படுத்தியதால் அவரது துடுப்பாட்டமும் பெரிதாக எடுபடவில்லை. எனவே இரண்டாவது போட்டியிலாவது மேலுமொரு சுழற்பந்து வீச்சாளரை விளையாடும் 11 அணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

முதலாவது போட்டியில் எமது துடுப்பாட்ட வீரர்கள் இரண்டு இன்னிங்ஸிலும் 2 அரைச்சதங்கள் மாத்திரமே பெற்றனர். முதல் இன்னிங்ஸில் மூவகைப் போட்டியிலும் தனது திறமையை நிரூபித்துவரும் பெத்தும் நிஸ்ஸங்க முதல் இன்னிங்ஸில் இறுதிவரை களத்தில் நின்று 61 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இறுதி நேரத்தில் ரொஷன் திக்வெல்லவும் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தாலும், பொறுப்பாக ஆட வேண்டிய முதல் இன்னிங்ஸில் சொதப்பியிருந்தார். அனுபவ வீரரான மெத்தியூசும் முதல் போட்டியில் எதிர்பார்க்கப் பட்ட பங்களிப்பை அணிக்கு வழங்கவில்லை. டெஸ்ட் போட்டியில் நிலைத்து நின்று ஆட எத்தனிக்க வேண்டும். ஒரு ஆறு அடிப்பதை விட நிலைத் நின்று ஆடும் இன்னிங்ஸ்சே டெஸ்ட் போட்டிகளில் தேவை என்பதை உணர வேண்டும். கடந்த வருட இறுதியில் ரி/20 போட்டிகளில் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து வந்த சரித் அசலங்கவுக்கு டெஸ்ட் போட்டிகளில் இன்னும் நிதானம் தேவை. அப்போட்டியில் ஜடேஜாவின் ஓவரின் தொடர்ச்சியாக 2 சிக்ஸர் அடித்துவிட்டு அடுத்த ஓவரில் ஆட்டமிழந்தார். மொத்ததில் முதல் போட்டியில் எமது துடுப்பாட்ட வீரர்கள் ஒருவரும் பொறுப்பை உணர்ந்து விளையாடவில்லை. எனவே இரண்டாவது போட்டியிலாவது முதல் தர அணியான இந்திய அணிக்கு சிறந்த போட்டியொன்றை கொடுக்க முயல வேண்டும்.

நீண்ட துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட பலம்வய்ந்த இந்திய அணியை 1வது போட்டியில் முதல் இன்னிங்ஸில் விரைவாக 6 விக்கெட்டுகளை வீழத்தினாலும் பின் வரிசை துடுப்பாட்டத்தை ஆட்டமிழக்கச்செய்ய தடுமாறியது இலங்கை அணி.




எங்களால் திட்டங்களைச் சரியாக செயற்படுத்த முடியாமல் போய்விட்டது. எங்கள் கணிப்பீடு தவறிவிட்டதாக இலங்கை அணித் தலைவர் தமுத் கருணாரத்ன தோல்வியின் பின் தெரிவித்தார். ஆனால் இந்திய அணியில் விளையாடிய ஒவ்வொரு வீரரும் இப்போட்டியைச் சரியாகக் கணித்து சரியாகச் செயற்படுத்தியிருந்தார்கள். போட்டியின் இரண்டாவது நாளில் ஜடேஜா தனது கன்னி இரட்டைச்சதத்தைப் பெறுவார் என ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் தீடிரென ஆட்டத்தை நிறுத்தி இலங்கையை ஆடப் பணித்தனர்.

அதுபற்றி ஜடேஜா கூறும் போது: ஆடுகளத்தில் பவுன்ஸ் நிலையற்று இருந்தது. பந்துகள் நன்கு சுழல ஆரம்பித்தது. எனவே ஆடு களத்தில் நமக்குச் சாதகமான சூழல் உள்ளது இப்போது இலங்கை அணியை ஆடச் சொல்லலாம் என தலைவருக்கு தகவல் அனுப்பினேன். இதனால் இரண்டு நாட்கள் களத்தடுப்பு செய்த அவர்கள் களைப்படைந்துள்ளதால் பெரிய ஷொட்களை ஆட முடியாது போகலாம் எதிரணியின் சோர்வை பயன்படுத்தி இன்றைய தினமே விக்கெட்டுகளை வீழ்த்தலாம் என்பதே எமது கணிப்பாக இருந்தது என்று கூறியுள்ளார். இதுதான் போட்டியை வெல்லக்கூடிய சரியான கணிப்புகள்.



இன்றைய போட்டி இலங்கை அணிக்கு நான்காவது பகலிரவு போட்டியாகும். ஏற்கனவே மூன்று பகலிரவுப் போட்டிகளில் விளையாடிய இலங்கை அணி இரு போட்டிகளில் வென்றுள்ளன. இந்தியாவுடன் மோதும் முதல் பகலிரவுப் போட்டியான இன்றைய இரண்டாவது போட்டியில் இலங்கை அணி சில மாற்றங்களை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுழற்பந்து விச்சாளர் பிரவீன் ஜயவிக்கிரமவுக்கு சந்தர்ப்பம் வழங்கலாம். இந்திய அணியில் கொரோனா காரணமாக கடந்த சில தொடர்களில் சேர்த்துக்கொள்ளப்படாத சகலதுறை வீரர் அக்ஷல் பட்டேல் இன்றைய போட்டியில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அட்டாளைச்சேனை பிரதேச கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா; 12ஆம் திகதி போட்டிகள் ஆரம்பம்

**அட்டாளைச்சேனை மத்திய, ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 12ம் திகதி இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்வத் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில், விளையாட்டு விழாவில், மொத்தம் 34 பதிவு செய்யப்பட்ட கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

இவர்களுக்கான போட்டி விதிகள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்கள் உள்ளிட்ட விபரங்களை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.



விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்வத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் சாபிர், நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நழீல், அம்பாறை மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.சப்ரி நஸார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நடைபெறவுள்ள போட்டிகள், திகதி, மைதானம் தொடர்பான விபரம் வருமாறு.

கிரிக்கெட் 2022.03.12 பாலமுனை பொது விளையாட்டு மைதானம். கரப்பந்து – 2022.03.13 அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானம்.

உதைபந்து-2022.03.17 அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானம்.

எல்லே-2022.03.19 பாலமுனை பொது விளையாட்டு மைதானம். கபடி – 2022.03.20 அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானம். சுவட்டு மைதான போட்டிகள் – 2022.03.25 மற்றும் 26 அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானம்.

## கந்தையா வெற்றி கிண்ணத்துக்கான

# காலப்பந்தாட்ட தொடரில் புத்தளம் ச்செல்சி அணி சம்பியன்

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளத்தில் நடைபெற்ற அணிக்கு தலா 09 வீரர்களை கொண்ட கந்தையா வெற்றி கிண்ணத்துக்கான கால்ப்பந்தாட்ட தொடரில் புத்தளம் ச்செல்சி அணி சம்பியனானது.

தொடரின் இரண்டாவது இடத்தினை குளியாப்பிட்டி பம்பன்ன ஷார்ஜா எப்.சி அணி பெற்றுள்ளது.

இந்த போட்டி தொடர் (23) புதன்கிழமை புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

மொத்தமாக 16 அணிகள் தொடரில் பங்கேற்று இறுதிப் போட்டியில் புத்தளம் ச்செல்சி அணியும் குளியாப்பிட்டி பம்பன்ன ஷார்ஜா அணியும் பலப்பரீட்சை நடாத்தியதில் 01 : 00 கோலினால் புத்தளம் ச்செல்சி அணி வெற்றி பெற்று சாம்பியனாக மகுடம் சூடியது.

அவ் அணிக்காக அவ் அணியின் வீரர் எம். சபாக் 18 வது நிமிடத்தில் வெற்றி கோலினை பெற்றார்.

சிறந்த கோல் காப்பாளராக பம்பன்ன ஷார்ஜா அணியின் வீரர் எம். நப்சானும் சிறந்த ஆட்டக்காரராக புத்தளம் ச்செல்சி அணி வீரர் எம். எஸ்.எம்.பர்மானும் தெரிவாகினர். சம்பியன் மற்றும் ரன்னரப் அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்களுடன் ரொக்கப்பணமாக முறையே 30 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. போட்டிக்கு நடுவர்களாக எம்.எஸ்.எம்.ஜிப்ரி, ஏ.ஏ. கியாஸ்,எம்.எம்.சிபான் ஆகியோர் கடமையாற்றினர். புத்தளம் நகர பிதாவும், புத்தளம் கால்ப்பந்தாட்ட லீக் தலைவருமான எம்.எஸ்.எம். ரபீக் அதிதியாக கலந்து கொண்டார்.

## உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான விளையாட்டு விழா

# உதைபந்தாட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேச சபை 2ஆம் இடம்

**பாலமுனை தினகரன் நிருபர்**



அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான உதைபந்தாட்ட போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச சபை அணி ரன்னர் அப் ஆக தெரிவு செய்யப்பட்டுள்ளது. அம்பாறை நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் அம்பாறை நகரசபை அணியுடன் இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச சபை அணி கலந்துகொண்டது. இப்போட்டியில் இரண்டு அணிகளும் சமபலத்துடன் விளையாடிய போதும் 1 : 0 என்ற கோல்கள் அடிப்படையில் அம்பாறை நகர சபை அணி வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டி நிகழ்விற்கு அதிதிகளாக அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி மற்றும் அம்பாறை நகரசபைத் தலைவர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ. எம்.பாயிஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் வீரர்கள் அறிமுகத்திலும் பங்கேற்றனர்.

# விமானப்படையின் 71வது வருட விழாவை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப்போட்டி

**புத்தளம் தினகரன் நிருபர்**



இலங்கை விமானப்படையின் 71வது வருட விழாவை முன்னிட்டு அதனுடன் இணைந்ததாக தொடர்ந்து இலங்கை விமானப்படையினரால் 23 வது தடவையாகவும் நடாத்தப்படும் தேசிய மட்டத்தில் பிரபலமான ஆடவர் சைக்கிள் ஓட்டப்போட்டியின் முதற்கட்டம் (4) கொழும்பில் ஆரம்பமாகி புத்தளம் கொழும்பு முகத்திடலில் நிறைவுபெற்றது.

முதலாம் கட்ட போட்டி முடிவில் புத்தளம் வண்ணாத்திவில்லு பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் சந்தருவன் பின்டோ முதலிடத்தைத் பெற்றுக்கொண்டார்.விமானப்படை உயரதிகாரிகளின் அழைப்பை ஏற்று புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

போட்டியின் இரண்டாம் கட்டம் (05) புத்தளத்திலிருந்து ஆரம்பமாகி தம்புள்ளை வரையும் அடுத்த கட்டமாக தொடர்ந்து கட்டுநாயக்க வரையும் சென்றடைய உள்ளது.

பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியும் (06) புத்தளத்திலிருந்து ஆரம்பமாகி கொழும்பு வரை சென்று நிறைவுபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# லீக் உதைபந்தாட்ட போட்டித் தொடரின் இறுதி உதைபந்தாட்டப் போட்டி

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

நளின் ஜெம்ஸ் உரிமையாளர் நளின் விஜேன்திரவின் அனுசரணையில் பலாங்கொடை உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் லீக் உதைபந்தாட்ட போட்டிதொடரின் இறுதி உதைபந்தாட்ட போட்டி இம்மாதம் 13ஆம் திகதி மாலை 3 மணிக்கு பலாங்கொடை நகரசபை விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

இந்த இறுதிப் போட்டி குவாட்ஸ் உதைபந்தாட்ட அணிக்கும் யங்லயன்ஸ் உதைபந்தாட்ட அணிக்கும் இடையே நடைபெற உள்ளது.

இந்த இறுதிப்போட்டி நிகழ்வினை கண்டுகளிக்க உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமரும், நளீன் ஜெம்ஸ் அதிபதி பளீர் விஜேந்திரவும் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 12ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.